உ

## இடைக்காடு மகா வித்தியாலய

# பொன் விழா

1926 — 1976

இடைக்காடு மகா வித்தியாலயம்

வாய்மை தூய்மை மேன்மை

பழைய மாணவர் சங்க

# வெள்ளி விழா

# மலர்

UNIVERSITY OF JAFFNA Library SRI LANKA

Donated by:- PROF. K. KAILASAPATHY

University of Jaffna
373.05
ITA
223129(BP; Main)

உ
முருகா

யா/இடைக்காடு மகா வித்தியாலயப் பொன் விழாவும்
பழைய மாணவர் சங்க வெள்ளி விழாவும்
சிறப்புற்று இனிதே நடைபெற எங்கள்
ஸ்தாபனம் ஆசீர்வதிக்கின்றது.



# வைர மாளிகை

## நகை வியாபாரிகள்

141, செட்டியார் தெரு,
கொழும்பு.

79, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

உ

## இடைக்காடு மகா வித்தியாலய

# பொன் விழா

பழைய மாணவர் சங்க

# வெள்ளி விழா

# மலர்

UNIVERSITY OF JAFFNA LIBRARY
12 FEB 2016
PERIODICALS DIVISION

UNIVERSITY OF JAFFNA SRI LANKA
373.8
ITA
BP.

UNIVERSITY OF JAFFNA Library SRI LANKA

223129

University of Jaffna
223129
Library


223129

Donated by:-
PROF. K. KAILASAPATHY

# தமிழ்த் தெய்வ வணக்கம்

பல்லுயிரும் பல உலகும் படைத்தளித்துத் துடைக்கினும் ஓர்
எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமும்துளுவும்
உன் உதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம் போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையா உன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே.

— மனோன்மணீயம்.

★  ★

## கல்லூரிக் கீதம்

வாழ்க வளர்க வெல்க என்று வாழ்த்து வோம்
ஈழநாட்டில் ஈடிலாத சீருடன் நம் ஆலயம்
(வாழ்க, வளர்க)

ஏர்நிறை இடைக்காட்டினில் எழில் கொள் தாரு போலவே
நேர்நிறை மாவித்யாலயம் என்ற நாமம் ஏந்தியே
(வாழ்க, வளர்க)

வாழ்வில் வேண்டும் தர்ம நீதி வாய்மை தூய்மை வன்மையாம்
தாழ்விலாத கலைகள் யாவும் தந்தென் தாயைப் போலவே
(வாழ்க, வளர்க)

## வித்தியாலயப் பொன் விழா
## பழைய மாணவர் சங்க வெள்ளி விழா

# மலர்க் குழு

**தலைவர்:**

திரு. சி. வே. மகேசவேலு (அதிபர்)

**இதழாசிரியர்கள்:**

தமிழ் : திரு. க. தேவதாசன்

ஆங்கிலம் : திரு. எஸ். சண்முகம்பிள்ளை

**பதிப்பாசிரியர்:**

திரு. ச. க. ஆறுமுகசாமி

**நிர்வாக உறுப்பினர்:**

திரு. தி. சிவநேசபிள்ளை
திரு. சு. இளையதம்பி
பண்டிதர் க. சிதம்பரப்பிள்ளை
திரு. க. சின்னத்தம்பி

**விளம்பரக் குழு:**

திரு. செ. கைலாசபதி
திரு. த. கதிரமலை
திரு. த. அருளானந்தம்
திரு. வே. முருகுப்பிள்ளை
திரு. சி. கந்தசாமி
திரு. இ. கந்தசாமி
திரு. அ. வீரசிங்கம்
திரு. ந. கந்தசாமி

## வித்தியாலயப் பொன் விழா ப. மா. ச. வெள்ளி விழா

# விஷேட செயற் குழு

**தலைவர்:**

திரு. சி. வே. மகேசவேலு (அதிபர்)

**இணைச் செயலாளர்கள்:**

திரு. ம. சரவணமுத்து
திரு. செ. கைலாசபதி

**பொருளாளர்:**

திரு. க. சின்னத்தம்பி

**உப பொருளாளர்:**

திரு. ந. பு. கதிரித்தம்பி

**ஏனைய உறுப்பினர்:**

திரு. க. விசுவலிங்கம்
,, சி. நல்லதம்பி
,, செ. பொன்னையா
,, நா. சுவாமிநாதன்
,, க. வேல்முருகன்
,, மா. யோகராசா
,, க. தங்கவேலு
,, சி. சண்முகராசா
,, ந. கந்தசாமி
,, த. ஆறுமுகதாஸ்
,, வி. சிவசுப்பிரமணியம்

# வித்தியாலயப் பொன் விழா
# ப. மா. ச. வெள்ளி விழா உப குழுக்கள்

### வரவேற்பு

திரு. க. விசுவலிங்கம்
,, செ. கைலாசபதி
,, க. சின்னத்தம்பி
,, செ. கணபதிப்பிள்ளை
,, த. வேலாயுதம்
,, செ. பொன்னையா
,, அ வீரசிங்கம்
,, ச. க. ஆறுமுகசாமி
,, சி. நல்லதம்பி
,; வே. சுவாமிநாதன்
,. திருமதி க. கந்தையா

### கலை

திரு. வே. சுவாமிநாதன்
,, செ. கணபதிப்பிள்ளை
,, செ. கைலாசபதி
,, சி. சண்முகராசா
,, சி. க. சின்னத்தம்பி

### அரங்க அமைப்பு

திரு. சு. கிருஷ்ணபிள்ளை
,, க. வேல்முருகன்
,, த. வேலாயுதம்
,, சி. நா. தம்பு
,, வ. வெற்றிவேலு
,, வி. சிவசுப்பிரமணியம்
,, சி. கந்தசாமி
,, ந. தங்கவேல்

### நிதி

திரு க. விசுவலிங்கம்
,, க. சின்னத்தம்பி
,, செ. பொன்னையா
,, மா. யோகராசா
,, த. ஆறுமுகதாஸ்
,, சி. நல்லதம்பி

### சுகாதாரம் — நீர்விநியோகம்

திரு. நா. இடைக்காடர் ஈஸ்வரன்
,, க. தங்கவேலு
,, சி. கனகசுந்தரம்
,, சி. சக்திவேல்
,, சி. பேரின்பநாதன்
,, கா. சிவலிங்கம்
,, க. கைலாயபிள்ளை
,, கா. தில்லையம்பலம்

### அலுவலகம்

திரு. க. விசுவலிங்கம்
,, செ. பொன்னையா
,, த. கணபதிப்பிள்ளை
,, சோ. தணிகாசலம்
,, வ. வல்லிபுரம்
,, ச. க. கிருஷ்ணசாமி
,, வே. முருகையா
,, பொ. மகாதேவா
,, ந. கந்தசாமி

கல்வி அமைச்சர்

## அல்ஹாஜ் கலாநிதி பதியுத்தீன் மஹ்மூத்

அவர்களின்

# வாழ்த்துரை

இடைக்காடு மகாவித்தி யாலயம் தனதுபொன் விழாவையும் பழைய மாணவர் சங்க வெள்ளி விழாவையும் ஒருங்கு சேர்த்து நடத்த ஒழுங்குகள் செய்வதை அறிந்து பெரிதும் மகிழ்ச்சி அடைகின்றேன். இம் மகாவித்தியாலயம் அண்மையில் அடைந்து வரும் துரித வளர்ச்சி குறிப்பிடத்தக்கது. அதற்குப் பொறுப்பான அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் அனைவரையும் பாராட்டுகின்றேன். நான் கல்வி அமைச்சராகக் கடமையேற்ற நாள் தொடக்கம் நகரங்களுக்குச் சேய்மையிலுள்ள வித்தியா லயங்களை நகரங்களில் உள்ளவற்றைப் போன்ற அளவு பல விதங் களிலும் விருத்தியடையச் செய்யவேண்டும் என்ற நோக்கத் தோடு மேற்கொண்ட பல முயற்சிகளும் பலவிதத்திலும் நல்ல பலன் தரத் தொடங்கியுள்ளமையைப் பலரும் நன்கு அறி வர். இவ்வாறு முன்னேறிய வித்தியாலயங்களுள் இடைக்காடு மகாவித்தியாலயத்தை முன்னணி யில் உள்ள ஓர் எடுத்துக்காட்டாகக் கருத லாம் என நம்புகின்றேன். விழா சிறப்பாக நிறைவேற வேண்டுமெனவும் இவ் வித்தியாலயம் மேன்மேலும் பல துறைகளிலும் சிறந்து விளங்கவேண்டுமென வும் மனமார வாழ்த்து கின்றே ன்.

*1976-08-23*
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு - 2

**பதியுத்தீன் மஹ்மூத்**
கல்வி அமைச்சர்

# Message

by

**DR. PREMADASA UDAGAMA**

Secretary, Ministry of Education

It gives me great pleasure to send this Message to the souvenir published to commemorate the Golden Jubilee of Idaikkadu Maha Vidyalaya. This occasion also fortunately coincides with the Silver Jubilee of the Old Students' Association of this Vidyalaya. I claim to have some intimate knowledge of this Vidyalaya as I have been there on a number of accasions, both formally and informally. This Vidyalaya, to me, exemplifies the idea of a community School, which was started by the community and supported right throughout its history by the community On an occasion when I visited the school I remember to see contritbutions of parents of the agricultural produce in a corner of the building. it is very rare to see such wholesome support of the community for the development of a school. I am also aware that the Old Students continue to support the school. All in all the parents and Old Students are willing supporters of the school which they very much support in or outside the community. The school has also done quite well as its alumni are occupying places of importance in all sectors of our society here and abroad. In our new Educational Reforms this school has made an intensive effort. As much as seven Pre-vocational subjects are taught in this school at the Junior Secondary level. Similarly, the new H. N. C. E. classes have also been started to continue the good work that has been done at the Junior Secondary Level. This school receives strong support from community as virtually all the necessary facilities for its own growth and development are provided by the community. I wish the school, its students, teachers, principal, parents and Old Students the greatest success in their endeuvours in the future.

**PREMADASA UDAGAMA**
Secretary

Ministry of Education,
Colombo 2, September 13, 1976.

# கல்வி அமைச்சின் செயலாளர்
# கலாநிதி பிரேமதாச உடகம அவர்களின்
# ஆசிச் செய்தியின் தமிழ் ஆக்கம்

இடைக்காடு மகாவித்தியாலயப் பொன் விழா மலருக்கு இவ்வாசிச் செய்தியை அனுப்புவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அதிட்ட வசமாக, இவ்விழா இவ் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க வெள்ளி விழாவோடு இணைந்து நிகழ்கின்றது. சம்பிரதாயமான, சம்பிரதாயமற்ற முறையில், பல சந்தர்ப்பங்களில் அங்கு நான் சென்றிருந்தமையால், இவ் வித்தியாலயம் பற்றிய ஆழ்ந்த அறிவு எனக்குண்டு. சமுதாயத்தினுல் ஆரம்பிக்கப் பட்டு, அதன் வரலாறு முழுவதிலும் சமுதாயத்தினுல் ஆதரிக்கப்பட்டு வரும் சமுதாயப் பாடசாலைக்கு இவ்வித்தியாலயம் ஓர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. நான் இப் பாடசாலையைத் தரிசித்த ஒரு சந்தர்ப்பத்தில் பாடசாலைக் கட்டிடத்தின் ஒரு மூலையில் பெற்ருேரின் அன்பளிப்பான விவசாய உற்பத்திப் பொருள்கள் இருக்கக் கண்ட நினைவு எனக்குண்டு. ஒரு பாடசாலையின் வளர்ச்சிக்கு சமுதாயத்தின் இப்படியான நல்லாதரவு இருப்பதைக் காண்பது மிக அரிது. பழைய மாணவர் தொடர்ந்து பாடசாலையை ஆதரிக்கின்றனர் என்பதையும் யான் அறிவேன். தொகுத்துக் கூறின், பாடசாலைக்கு மனமுவந்துதவும் பெற்ருேரும் பழைய மாணவரும் தமது சமுதாய அடிப்படையிலும் அதற்கு அப்பாலும் ஆதரவு அளிக்கின்றனர். எமது சமுதாயத்தின் பல துறைகளிலும், வெளி நாடுகளிலும் இப்பாடசாலையின் பழைய மாணவர் பிரதான பதவிகளை வகிக்கின்றமை பாடசாலை சிறந்த முறையில் இயங்கியதைக் காட்டுகின்றது. எமது புதிய கல்விச் சீர்திருத்தங்களில் இப்பாடசாலை பெரு முயற்சியை மேற்கொண்டுள்ளது. கனிட்ட இடைநிலை மட்டத்தில் இப்பாடசாலையில் ஏழு தொழில் முன்னிலைப் பாடங்கள் வரை போதிக்கப்படுகின்றன. அவ்வாறே, கனிட்ட இடைநிலை மட்டத்தில் செய்யப்பட்ட நல்ல வேலையைத் தொடரும் முகமாக புதிய தே. உ. க. த. ப. வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பாடசாலையின் வளர்ச்சிக்கும் விருத்திக்கும் வேண்டிய வசதிகளுள் ஏறத்தாழ எல்லாவற்றையுமே சமுதாயம் அளிப்பதனுல், இப்பாடசாலை சமுதாயத்தின் பேராதரவைப் பெற்று விளங்குகின்றது. பாடசாலையும், மாணவரும், ஆசிரியரும், அதிபரும், பெற்ருேரும், பழைய மாணவரும் தமது வருங்கால முயற்சிகளில் பெருவெற்றி ஈட்ட வாழ்த்துகின்றேன்.

கல்வி அமைச்சு,
கொழும்பு-2

**பிரேமதாச உடகம**
செயலாளர்

கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர்

## திரு. இ. பாஸ்கரலிங்கம் அவர்களின்

# ஆசிச் செய்தி

யா/இடைக்காடு மகாவித்தியாலயம், பாடசாலையின் பொன் விழா, பழைய மாணவர் சங்க வெள்ளி விழா ஆகியனவற்றை யொட்டி ஒரு மலர் வெளியிடுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த மகாவித்தியாலயம் அண்மைக் காலத்தில் பலவிதத்திலும் அடைந்து வரும் முன்னேற்றத்திற்கு பெற்றோர்கள் காட்டிவரும் ஆர்வமும் பழைய மாணவர்களின் ஆதரவும் தூண்டுகோலாக அமைந்தமை குறிப்பிடுதற்குரியது. பாடசாலையின் வளர்ச்சியின் பொருட்டு அதன் அதிபரும், ஆசிரியர்களும் கொண்டுள்ள ஈடுபாடும் மேற்கொண்டுள்ள முயற்சிகளும் பாராட்டுக்குரியன. இவ் வித்தியாலயம் பல துறைகளிலும் மேன்மேலும் சிறப்படைந்து இக்கிராமத்தின் கல்வித் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முன்நின்று உழைக்கவேண்டுமென மனமார விழைகின்றேன்.

**இ. பாஸ்கரலிங்கம்**
மேலதிகச் செயலாளர்

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு - 2.

கல்வி அமைச்சின் தமிழ்ப்பகுதி வித்தியாதிபதி

# திரு. கி. லக்ஷ்மண ஐயர் அவர்களின்

# வாழ்த்துரை

இடைக்காடு மகா வித்தி
யாலயம் தனது பொன்
விழாவையும்
பழைய மாண
வர் சங்க
வெள்ளி
விழாவை
யும் ஒருங்கே
கொண்டாடு
வதற்கு ஏற்
பாடுகள் செய்வ
தாகவும் அதனேடு
சேர்த்துப் பொருட்
காட்சியொன்றை
நடத்தவிருப்பதாகவும்
அறிகின்றேன். இவை
யாவும் பெரும் மகிழ்ச்சியைத்
தருகின்றன. அண்மையில் தேசிய
உயர் கல்வித் தராதரப் பத்திர விஞ்
ஞான வகுப்பை அமைப்பது சம்பந்த
மாக இவ்வித்தியாலயத்திற்குச் செல்ல
வும் ஒழுங்குகளை நேரிலே கவனிக்கவும் ஆசிரி
யர்களுடன் மாணவர்களுடன் நேரிற் கலந்
துரையாடவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது.
மாணவர்கள் காட்டிய உற்சாகமும் அதிபரும் ஆசிரி
யர்களும் காட்டிய அக்கறை, ஆர்வம் ஆகியனவும்
எனக்குப் பெருமகிழ்ச்சி அளித்தன. எங்கெல்லாம் வித்தி
யாலய வளர்ச்சியிலே பெற்ருேர் அதிக அக்கறை கொண்டுள்
ளனரோ அங்கெல்லாம் உள்ள வித்தியாலயங்கள் துரிதமாகப்
பல துறைகளிலும் வளர்ச்சியடைந்து வருவதை அனுபவரீதி
யாகக் கண்டு வருகின்றேன் இந்த வகையிலே, இடைக்காடு
மகாவித்தியாலயப் பெற்ருர் தங்கள் வித்தியாலய வளர்ச்சி
யிலே கண்ணும் கருத்துமாக விருந்து ஆற்றிவரும் அரும்பணி
கள் யாவும் மகிழ்ச்சி தருகின்றன. பொன் விழாவும்
வெள்ளிவிழாவும் இனிது நிறைவேற வேண்டுமெனவும்
இவ் வித்தியாலயம் மேன்மேலும் விருத்தியடைந்து
பல துறைகளிலும் ஓர் எதுத்துக்காட்டான வித்தி
யாலயமாகத் திகழவேண்டுமெனவும்
உளமார விழைகின்றேன்.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு - 2.

**கி. லக்ஷ்மண ஐயர்**
வித்தியாதிபதி

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்

ஜனுப். A. M. மஜீத் அவர்களின்

# ஆசிச் செய்தி

யா/
இடைக்
காடு மகா
வித்தியாலயப்
பொன் விழா,
பழைய மாணவர் சங்க
வெள்ளி விழா தொடர்பாக
வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு
ஆசிச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி
அடைகின்றேன். பெற்றோர்களினதும், அபி
மானிகளினதும், பழைய மாணவர்களினதும்,
ஆசிரியர்களினதும், ஏனையோரினதும் பெரு முயற்சிக
ளின் பயனுகக் கிராமப் புறத்தில் காணப்படும்
இப்பாடசாலை நகர்ப்புறங்களில் காணப்
படும் பாடசாலைகளின் தரத்திற்குக்
குறையாது முன்னேறி வருவது
குறிப்பிடத்தக்கது. மேன்
மேலும் இப் பாடசாலை
பல துறைகளிலும்
முன்னேற இறை
வன் அருளை
வேண்டுகின்
றேன்!

கல்வித் திணைக்களம்,
யாழ்ப்பாணம்.

A. M. மஜீத்
கல்விப் பணிப்பாளர்

## கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி
## திரு. வ. க. ஈசுரபாதம் அவர்களின்
# ஆசிச் செய்தி

யா/
இடைக்
காடு மகா
வித்தியாலயம் பொன் விழாவும் ப. மா. ச. வெள்ளி
விழாவும் கொண்டாடும் பொன்னாளில் நானும் ஒரு செய்தியை அனுப்பு
வதிலே மகிழ்ச்சி கொள்கிறேன். இன்று இவ்வித்தியாலயம் தேசியஉயர்
கல்வித் தராதரப் பத்திர விஞ்ஞான வகுப்பைக் கொண்டு பூரணத்
துவம் பெற்றுப் பொலிவுடன் விளங்குகின்றது. வெள்ளி விழாக்
கொண்டாடும் பழைய மாணவர் சங்கமும் பெ ஆ. சங்கமும்
இவ்வித்தியாலயத்தின் நலன் கருதியாற்றிய அரும்பெருந் தொண்
டுகள் அளப்பரியன. இதனுல் இவ்வித்தியாலயத்தின் பெயரும்
புகழும் நாடெங்கணும் பரவியுள்ளது. ஒரு கிராமத்திற்கு ஒரு
பாடசாலை வரப்பிரசாதமாகும். கிராமத்தவர்கள் ''எங்கள் பாட
சாலை'' என்ற இறுமாப்புடன் அதன் வளர்ச்சிக்காக அரசாங்
கத்தை மட்டும் நம்பியிருக்காமல் தம்மாலானமட்டும் உதவி,
அதன் நிலையை எல்லா வகைகளலும் உயர்த்துவதன் மூலம் தம்
முடைய வருங்காலச் சந்ததியை வளமாக்க வேண்டும். வருங்
காலத்தில் பாடசாலைகள் கிராமத்தவர்களின் பிரச்சினை
களை ஆராய்ந்து தீர்வுகாணவும், கிராமத்தவர்கள்
தமது பிரச்சினைகளைப் பாடசாலைக்ள் மூலம் தீர்க்கவும்
ஒன்றுபட்டுழைத்தல் வேண்டும். இந்த நல்ல பணியை
இடைக்காட்டு மக்கள் செய்து கொண்டு வருகின்
ருர்கள். நல்லதோர் அதிபரும், ஒற்றுமையாக
ஒத்துழைக்கும் உதவி யாசிரியர்களும், உதவி
யளிக்க ஒரு பெற்ருர் ஆசிரியர் சங்கமும்,
பெரும் பணியாற்றி வெள்ளி விழாக்
கொண்டாடும் பழைய மாணவர் சங்க
மும் இருக்கின்ற இவ்வித்தியாலயம்
எனது வட்டாரத்திலே முன்னே
டிப் பாடசாலைகளில் ஒன்ருக
இன்று மிளிர்வதில்
பெருமை கொள்
கின்றேன்.

இடைக்காடு ம. வி. வாழ்க! வாழ்க! பல்லாண்டு!
வளர்க! வளர்க! பன்மடங்கு!

''பழமுதிர் சோலை''
புலோலி தெற்கு, புலோலி.

வ. க. ஈசுரபாதம்
கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி

AUM

*N. M. Idaikkadar*
M. A. (Cantab) M. Sc. (Lond.) F. S. S. (Lond.)
Statistician of F. A. O. (of U. N.)

University of Oxford
Institute of Agricultural Economics
**Oxford**.
10th August, 1976

## Message sent on the occasion of the **GOLDEN JUBILEE** of Idaikkadu Maha Vidyalayam and **SILVER JUBILEE** of the Old Students' Association.

It was in 1914 that my father Nagamuttu founded the Vaideeshwara Vidyalaya in Jaffna. This perhaps encouraged his uncle Thamotherampillai to establish a Hindu College at Chavakachcheri and his cousin Veluppillai to start a school at Idaikkadu in 1926 with the help of the entire village. With a modest start to meet the requirements of the village, the school gradually expanded to attract the attention of students from the adjoining villages. It was about 10 years ago that the youth of the village through the O. S. A. started taking active interest in the affairs of the school and thanks largely to their efforts the school today is what it is – a model Maha Vidyalaya as fondly described by Dr. Udagama, Secretary to Education. Additional buildings to house the library, science laboratory and improving the playground and providing other facilities are a result of the untiring efforts of the P. T. A and the O. S. A. May the Maha Vidyalayam be a beacon of learning and a pillar of hope for the youth of my revered village and the adjoining villages with whom we live in amity. I wish the Jubilee celebrations all success.

**N. MANICKA IDAIKKADAR**
Visiting Academic, University of Oxford

**நா. மா. இடைக்காடர்**
M. A. (Cantab) M. Sc. (Lond.) F. S. S. (Lond.)
*புள்ளியியலாளர் F. A. O. (U. N.)*

ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழக
விவசாயப் பொருளாதாரத்தாபனம்,
ஒக்ஸ்ஃபோர்ட்.
*10 – 08 – 1976.*

**இடைக்காடு மகா வித்தியாலயப் பொன் விழா,**
**பழைய மாணவர் சங்க வெள்ளி விழாவின்போது வழங்கப்பட்ட**

# ஆசிச் செய்தி

எனது
தந்தையார் திரு. நாகமுத்து அவர்கள் யாழ்ப்பாணத்
தில் வைத்தீஸ்வர வித்தியாலயத்தைத் தாபித்தது
1914-ல் ஆகும். இது அவரின் மாமனார் திரு.
தாமோதரம்பிள்ளை அவர்களைச் சாவகச்சேரியில்
இந்துக் கல்லூரி ஒன்றைத் தாபிப்பதற்கும்,
அவரின் மைத்துனர் திரு. வேலுப்பிள்ளை
அவர்களைக் கிராமமக்களனைவரின் உதவியு
டன் 1926-ல் இடைக்காட்டில் கல்விச்சாலை
ஒன்றை ஆரம்பிக்கவும் தூண்டியது
போலும்! கிராமத்தின் தேவைகளைப் பூர்
த்தி செய்யும் நோக்கத்துடன் சிறிதாக
ஆரம்பிக்கப்பட்ட இக் கல்விச்சாலை, அயற்
கிராம மாணவரின் கவனத்தை ஈர்க்கும்
வகையில் படிப்படியாக விரிவடைந்தது. சுமார்
பத்து வருடங்களுக்கு முன்னர், கிராமத்தின் இளை
ஞர்கள் பழைய மாணவர் சங்கத்தின் ஊடாகப் பாட
சாலையின் விடயங்களில் துடிப்புடன் சிரத்தை கொள்
ளத்தலைப்பட்டனர். பெரும்பாலும் அவர்களின் முயற்சி
கள் காரணமாக இன்று எமது கல்விச்சாலை, கல்விச் செய
லாளர் கலாநிதி உடகம அவர்களினால் விருப்புடன் விவரிக்
கப்பட்டபடி ஓர் இலட்சிய மகா வித்தியாலயமாக விளங்குகின்
றது. நூல்நிலையம், விஞ்ஞானகூடம் ஆகிய கட்டிடங்கள், விளை
யாட்டு மைதானத்தைச் சீர்செய்தல், வேறு வசதிகளைஅளித்
தல் ஆதியன அவர்களினதும் பெற்றார் ஆசிரியர் சங்கத்
தினரதும் விடாமுயற்சிகளின் பயன்களாகும்! எனது
மதிப்புக்குரிய கிராமத்தினதும், நட்புறவோடு
நாம் வாழும் அயற்கிராமங்களினதும் இளை
ஞர்களுக்கு அறிவொளிகாட்டும் கலங்
கரை விளக்கமாகவும் நம்பிக்கை
யின் இருப்பிடமாகவும் மகா
வித்தியாலயம் விளங்
குக
!

**விழாக்கள் எல்லா வெற்றியும் பெற என் வாழ்த்துக்கள் !**

**நா. மாணிக்க இடைக்காடர்,**
பகுதிநேர விரிவுரையாளர்,
ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம்.

கோப்பாய் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர்

## திரு. சி. கதிரவேலுப்பிள்ளை அவர்களின் ஆசிச் செய்தி

உ
ங்கள்
கல்லூரியின்
பொன் விழாவும்
பழைய மாணவர் சங்கத்
தின் வெள்ளி விழாவும் இம்
மாதத்தில் நீங்கள் கொண்டாடு
வது பற்றி மகிழ்ச்சி அடைகிறேன்.
இக்கல்லூரியின் பெருஞ்சேவை அப்
பகுதி மக்களின் கல்வி உயர்ச்சியிலும்,
பண்பாட்டிலும், அவர்கள் பல இடங்
களில் வகிக்கும் உயர் உத்தியோகங்
களிலும் பிரதிபலிக்கிறது. ஊர் மக்க
ளுடைய ஆர்வமும் ஒத்துழைப்பும்
பழைய மாணவரின் அரும் பெரும்
முயற்சிகளும் கல்லூரியை இன்று
ள்ள உன்னத நிலைக்குக் கொண்டு
வந்துள்ளன. தன் முயற்சி
யால்தான் வளரலாம் என்ப
தற்குப் பழைய மாணவர்
சங்கத்தின் தொண்டு
எடுத்துக்காட்
டாகும். இன்
றுள்ள புதிய
கல்வி பற்றிய
சிந்தனைகளில்
ஒரு புரட்சி
யை உங்கள்
கல்லூரி முன்
நின்று நடத்த
உதவுகிறது.
நம் நாட்டை
வளம் படுத்த
வும் நமக்கே
நாம் வாழ்வு
கொடுக்கவும்
புதிய கல்வித்
திட்டம் மாற்
றம் கொண்டு
அமைகிறது.
இந்த இலட்சி
யம் நிறைவே
றக் கல்லூரி
யும், பழைய
மாணவர் சங்
கமும் தொ
டர்ந்து முன்
போல் பெரும்
பணிகளைப்
புரியவேண்
டும்என்று வா
ழ்த்துகிறேன்.

''மகாவளவு'',
கோப்பாய்.

**சி. கதிரவேலுப்பிள்ளை**
பா. உ. கோப்பாய்.

இலங்கைப் பல்கலைக் கழக யாழ்ப்பாண வளாகத் தலைவர்

## கலாநிதி க. கைலாசபதி அவர்களின்

# வாழ்த்துரை

இ
டைக்
காடு மகா
வித்தியால
யத்தில் அதன்
பொன் விழாவும்,
பழைய மாணவர்
சங்க வெள்ளி விழா
வும் இவ்வாண்டு நடை
பெறுவதறிந்து பெரு
மகிழ்ச்சி அடைகின்றேன்.
சைவ வித்தியா விருத்திச் சங்
கத்தின் பேருதவியுடன் தாபிக்
கப் பெற்ற இப்பாடசாலை இப்பொழுது மகாவித்தியாலயமாகப் பரிணமித்துள்ளது.
இவ்வளர்ச்சி தானாகவோ தற்செயலாகவோ நடந்த தொன்றன்று. இடைக்காட்
டுக் கிராமமக்களின் இடைவிடாத ஆர்வத்தாலும் ஆதரவாலும் உழைப்பா
லுமே இவ்வளர்ச்சி சாத்தியமாயிற்று. விவசாயத்திலும் ஏனைய துறைகளி
லும் கடின உழைப்பால் முன்னேறுவதைப் போலவே தமது சொந்த முயற்
சியால் இக்கிராமத்தவர் தமக்குரிய கல்விக் கூடத்தைக் கட்டி வளர்த்
திருக்கின்றனர். இன்று புதிய தேசிய உயர்கல்வித் தராதரப் பத்
திரத் தேர்வுக்கு விஞ்ஞான வகுப்புக்கள் நடத்தும் உரிமை
யையும் தகுதியையும் இம்மகா வித்தியாலயம் பெற்றுள்
ளது. இது பெருமைப்படத் தக்கது; கிராமம் சகல
துறைகளிலும் முன்னேற்றம் காணவேண்டும் என்ற
இலட்சியத்துடன் பாடுபட்டுவரும் இளைஞர்கள்
குறிப்பாக நமது பாராட்டுக்குரியவர்கள். நவீன
கல்வியின் அடிப்படைகளில் ஒன்று நல்லதொரு
நூல்நிலயமாகும். யாழ்ப் பாணக் குடாநாட்டிலேயே
பிரசித்திபெற்ற கல்லூரி நூலகங்களில் ஒன்ருக
இங்குள்ளது விளங்குவ தைக்கண்டு பெருமகிழ்ச்சி
அடைந்துள்ளேன். இம் மகா வித்தியாலயத்
தின்பால் கல்வி அமைச்சினர் கொண்
டுள்ள மதிப்பு பொருத்தமானதே
யாகும். பழமை யின் சிறப்பும்புது
மையின் பொலி வும் கலந்து
மகாவித்தி யாலயம்
மாண் புறுவ
தா க.

யாழ்ப்பாண வளாகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

**க. கைலாசபதி.**

# எங்கள் அதிபரின் நல்லாசிச் செய்தி


இ
யற்
கை
அன்னை
யின் எழில்
மிகு கிராமி
யச் சூழலில்
அமைந்துள்ள
இடைக்காடு
மகா வித்தியால
யம் மாண்புமிகு
மக்கள் சமுதா
யத்தைத் தோற்
றுவிக்கும் அரும்
பணியில் அரை
நூற்றாண்டு
காலமாக
அயராது
உழை
த்து

வருகின்றது. விஞ்ஞானிகளையும், கலைஞர்களையும், நிர்வாகிகளையும் பல் தொழில் விற்பனர்களையும் உருவாக்குவதில் உன்னத நிலையை அடைந்துள்ளது. இன்று பெற்றோரும், பழைய மாணவரும், வித்தியாலயமும் சேர்ந்து எடுக்கும் இப் பெருவிழா அறிவுக் களஞ்சியமான ஆரணங்கின் ஆசியையும் அருளொளியையும் பெற்றுப் பொலிவுற்று விளங்குகின்றது. அறிவு ஆற்றல், அனுபவம் என்பன இன்றைய இளைஞர் சமுதாயத்தின் பெறற்கரிய பொக்கிசங்களாகும். அவை அனைத்தையும் எமது வித்தியாலய மாணவர் ஆற்றல் மிகு ஆசிரியர் துணைக்கொண்டு அடைவதற்கேற்ற வாய்ப்புக்கள் இங்குண்டு. இவற்றிற்கெல்லாம் வித்திட்ட எனது கலாசாலையின் பெற்றோரையும், அயராது உழைக்கும் பழைய மாணவரையும், நலன் விரும்பிகளையும், மாண்புமிகு ஆசிரியகுழாத்தையும், நல்வழி காட்டிகளான கல்வித்துறை அதிகாரிகளையும் இவ்வேளையில் நாம் நினைவுகூரவேண்டும். வித்தியாலயப் பொன் விழாவையும், பழைய மாணவர்சங்க வெள்ளி விழாவையும் சிறப்பிக்கும் இம்மலர் அழிவில் இன்பம் தரும் ஞான அமிர்தமாய் இனிக்க ஆண்டவனை வேண்டி, ''வளர்க, உயர்க, மிளிர்க சேவை'' என இன்று புன்னகை பூத்துக் குலுங்கும் ஆலயத்திற்கு ஆசி கூறுவதில் அளவற்ற ஆனந்தம் அடைகின்றேன்.

**வளம் பல பெற்று வாழ்க நம் ஆலயம்**

**சி. வே. மகேசவேலு.**

எங்கள் அதிபர்



திரு. சி. வே. மகேசவேலு M. A. Dip-in-Ed. (Cey.)

அன்பளிப்பு

V

சேகரம் அன் சன்ஸ்

74, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

*Space Donated*

*By*

V

**S. A. CHELLIAH & Co.**

110, HOSPITAL ROAD,

**JAFFNA.**

*Space Donated*

*By*

# MALAYAN CAFE

NEWS AGENTS AND BOOK SELLERS

36, 38, Grand Bazaar,

**JAF NA.**

*Space Donated*

*By*

# S. SINNATHURAI & BRO.

JAFFNA.

அன்பளிப்பு

ஸ்ரீலங்கா புத்தகசாலை

காங்கேசன்துறை வீதி.

யாழ்ப்பாணம்.

This Space Donated

By


N. SAMBASIVAM & Co.

34, 36, Kasturiar Road,


JAFFNA.




எங்கள் ஆசிரியர் குழாம் 1976



புதிய விஞ்ஞான கூடம்



கலை விழாவின் போது
**திரு. நா. மாணிக்க**
**இடைக்காடர் அவர்கள்**



காலஞ் சென்ற தலை முகாமையாளர்
**திரு. ஆ. வேலுப்பிள்ளை**
அவர்களின் படத்திறப்பு விழா

# Our Staff

**Principal :** Mr. S. V. Mahesavelu, ***M. A. Dip-in-Ed.; C. E. S. V; Gr. I Spl. Post.***
**Vice - Principal :** Mr. P. Vishnu, *B. Sc.*
**Co - Vice - Principal :** Mr. T. Sivanesapillai, *B. A.*

| | | |
|---|---|---|
| Mrs. | S. Sivanesapillai *B. A.* | |
| Mrs. | M. Poopalasingam, *B. A.* | |
| Mr. | K. Thevathasan, *B. O. L.* | |
| Mrs. | S. Paranirupasingam | *B. Sc.* |
| Mr. | V. Sathiamoorthy | *B. Sc. Dip-in-Ed.* |
| Mr. | V S. Antonippillai | *1st Class Spl. Trained (Eng.)* |
| ,, | S. Ratnam, | ,, ,, *(Handicrafts)* |
| Mrs. | S Ramachandran | ,, ,, *(Sc.)* |
| Mr. | V. Satchithanantham | ,, ,, *(Sc.)* |
| ,, | J. M. P. Jeyarajah | *Spl. Trained (P. E.), Teacher's Certificate in (P.E.) 2nd Class, Saidapet.* |
| ,, | S Sritharan, | *Spl. Trained (Eng.)* |
| ,, | S. Sanmugampillai | *1st Class Spl. Trained (Eng.)* |
| ,, | S. K. Sinnathamby | *1st Class Tamil Trained* |
| ,, | T. Sithivinayagamoorthy | ,, ,, ,, |
| ,, | P. Kathirithamby | ,, ,, ,, |
| Mrs | P. Santhyanar | ,, ,, ,, *Pala Pandithar* |
| ,, | T. Selvanayagam | ,, ,, ,, |
| ,, | P. Kathiravelu | ,, ,, ,, |
| ,, | K. Kandiah | ,, ,, ,, |
| ,, | L. Nadarajapillai | ,, ,, ,, |
| ,, | S. Selladurai | ,, ,, ,, |
| ,, | M. Veluppillai | ,, ,, ,, |
| ,, | K. Kailayapillai | ,, ,, ,, |
| Mr. | K. Kanagaratnam | ,, ,, ,, |
| ,, | V. Balakrishnan | *Junior Tech. Ins. Jaffna. Metal work Teacher* |
| Miss. | G. Veerasingam | *Home Sc. Teacher* |
| ,, | T. Kandasamy | *Dip-in-Ag. (Kundasale) Ag. Teacher* |
| ,, | Y. Manickam | *Ceramics Teacher* |

223129

**Honorary Teachers**

| | | |
|---|---|---|
| Miss. | P. Sithamparapillai | *Teacher in charge of paper - making* |
| ,, | R. Kanapathippillai | *G. C. E. (A. L.) Sc.* |

**Non-teaching Staff**

| | | |
|---|---|---|
| Mr. | N. Kandiahpillai | *Clerk* |
| Miss. | S. Ponniahpillai | *Librarian* |
| Mr. | E. Sinnathurai | *Minor Employee* |

# இதழ் மலர்கின்றது

கல்வியின் பெருமையினைப் பகர வந்த புறம் "உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றை நில முனியாது கற்றல் நன்றே" என்று அற்றை ஞான்று நிலவிய குருகுலக் கல்வியை விதந்தோதுகின்றது. இஃது கற்றலின் பிறந்த பருவம் என்றால், தவழ்ந்த பருவமாகத் திண்ணைப் பாடசாலை தோன்றிற்று. பின்னர் வந்த பிறநாட்டினர், நம்மவரை எல்லாம் தம்மவர் ஆக்கும் நோக்குடன் "நெஞ்சில் வஞ்சங்கெட" என்று இறையை வேண்டி உள்ளொன்று வைத்துப் புறம் ஒன்றுபேசாது வாழ்ந்த மக்களைப் படிப்பறிவு புகட்டிப் படாடோபத்துடன் வாழ வைப்போம் என்று தம் பக்கம் ஈர்த்த அவர்களின் செயலின் தாக்கமும், தமது ஆழமான அறிவினால் பெற்ற இன்பத்தினை இவ்வையகமும் பெறவேண்டும் என்ற பெருநோக்கமும், நமது சிறார்கள் எதிர் காலத்தில் பெரும் சிற்பிகளாகத் திகழ வேண்டும் என்ற வேணவாவும், அறிவாற்றல் நிறைந்த சில மூதறிஞர்களைப் புவனேஸ்வரி வித்தியாசாலை என்ற திண்ணைப் பாடசாலையை உருவாக்கச் செய்தது. அதுவே இன்று நாம் பொன் விழாக் காணும் மகா வித்தியாலயமாகத் திகழ்கின்றது. நாற்பது மாணவருடன் புவனேஸ்வரி அன்று பிறந்தது. துவிபாஷ வித்தியாசாலை என்று தவழ்ந்து, சைவாங்கில வித்தியாசாலை என்று தளிர்நடை பயின்று, இன்று எழுநூற்றைம்பது மாணவருடன் மகா வித்தியாலயம் என்று நிமிர்ந்து நிற்கின்றது. இத்துரித வளர்ச்சிக்கு, அவ்வப்பொழுது தலைமை தாங்கிச் சென்ற அதிபர்களும், பாடசாலையின் வளர்ச்சி தமது சிறார்களின் வளர்ச்சியே என்று கொண்டு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து ஒன்றிணைந்து உழைத்த பெற்றோர், பழைய மாணவர்களுமே காரணிகளாகும்.

பழைய கல்வி முறையின்படி கற்றவர்களுட் பலர் உயர்ந்த உத்தியோகங்களை வகுத்துள்ளனர். ஆனால் இன்று மக்கள் தொகையும் படிப்பறிவும் பெருகியுள்ளமையால் அவற்றுக்காகப் போட்டியிடுவோருட் சிலரே அவற்றைப் பெற முடியும். எனவே இன்றைய நிலையில் முந்தியமுறைக் கல்வி பயன்தர மாட்டாது. இதனால் புதிய சூழலுக்கும் வசதிகளுக்கும் ஏற்ப எம்மைத் தயார் செய்யும் கல்வியை நாம் பெறுதல் அவசியமாகின்றது. கல்வியானது கற்பவனின் வாழ்க்கைக்குப் பயனுடையதாக அமைய வேண்டுமென்பது இன்றைய கல்வியாளர் கருத்து. எமது இன்றைய தொழில் முன்னிலைப் பாட நெறி இந்தக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்டதே. எனவே வருங்காலத்தில் பாடசாலைப் படிப்பு முடிந்து வெளி ஏறும் எந்த ஒரு மாணவனும் தன் பொழுதை அவப்பொழுதாக்கி அலைய வேண்டிய நிலைக்கு ஆளாக மாட்டான். பாடசாலையிலே செயல்முறைக் கல்வி மூலம் தொழில் கற்பிக்கப்படுகின்றது. ஆகவே பாடசாலையை விட்டதும் அவன் அத்தொழிலினை செயற்பட முடிகின்றது. எனவே இன்றைய தொழில் முன்னிலைப்பாட நெறி மிகச் சிறந்த ஒரு அம்சமாக விளங்குகின்றது.

இதற்கமைய எமது பாடசாலையும் தொழில் முன்னிலைப் பாடங்கள் பலவற்றைத் தனது பாடவிதானத்துட் சேர்த்து, பயிற்றப்பட்ட திறமையான பல ஆசிரியர்களையும் பெற்றுச் செயற்பட்டு வருகின்றது. அரசாங்கத் தேர்வுகளில் கிடைத்த பெறுபேறுகளும் எமது பாடசாலை, அயல் கிராமங்களிலே உள்ள பாடசாலைகளுக்கு ஒரு விதத்திலும் சளைத்ததல்ல என்பதை எடுத்துக் காட்டுவதாக அமைந்துள்ளது. அவ்வப்பொழுது வந்த அதிபர்களின் அயரா உழைப்பும், பெற்றோர், பழைய

மாணவர் பெரும் பணியும் பன்னிரண்டாம் வகுப்பைப் பெற்றுக் கொடுத்ததோடு புதிய பத்தாம் வகுப்பும் எமது பாடசாலைக்குக் கிடைக்க வழி வகுத்திருக்கின்றது

பாடசாலையின் ஐம்பதாண்டு நிறைவினையும், பாடசாலையோடு ஒன்றிணைந்து உழைத்த பழைய மாணவர் சங்கத்தின் இருபத்தைந்தாண்டு நிறைவினையும் கொண்டாடும் இவ்வேளையில், பாடசாலையின் இப் பெருவளர்ச்சிக்கு ஆரம்பகாலந் தொட்டு இன்றுவரை உதவிய சகலரையும் நாம் நினைவு கூர்வதோடு நன்றி செலுத்தவும் கடமைப்பட்டுள்ளோம். இன்று இவ் விழா சிறப்புற நடைபெறுவதற்கும் விழாவை ஒட்டி வெளிவந்த இம்மலரின் சீரிய ஆக்கத்திற்கு உதவிய, ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் நன்றி சொல்ல வேண்டிய கடைப்பாடு உடையவர்களாகின்றோம்.

பொன்விழாக் காணவேண்டும் என்ற கருத்து உருவானதே, எல்லோருடனும் சமாதான சக வாழ்வு காணும் எமது அதிபரின் தலைமையினால் துரித கதியில் முழு உருப்பெற முடிந்தது. இதற்காக அயராது உழைத்த எமது அதிபருக்கும் பெற்றார் ஆசிரியர்க்கும் எமது நன்றிக்கடனைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எமது விழா மலர் சிறப்பாக வெளிவருவதற்கு ஆசிச் செய்திகள் அனுப்பி மதிப்பளித்த பெரியோர்க்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். கட்டுரை, வரலாறு, அறிக்கை, கவிதை போன்றவற்றைக் கொடுத்துதவிய பெற்றார் ஆசிரியர் சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர், ஆசிரியர், மாணவர் ஆகியோருக்கும் எமது உளம் கனிந்த நன்றி. மாணவர், ஏனையோரால் கொடுக்கப்பட்ட விடயங்களைத் திருத்திச் செப்பனிட்டுத் தந்த ஆசிரியப் பெருமக்களுக்கும் எம் நன்றி. மேலும் விழாவும் மலரும் சிறக்க பொருளுதவி, செயலுதவி கொடுத்த அனைவருக்கும் எம் நன்றி. குறுகிய காலத்தில் எம் மலரைத் திறம்பட அச்சேற்றிக் கொடுத்த அச்சகத்தாருக்கும் எம் நன்றி.

— **ஆசிரியர்**

**விவசாயிகளின் தேவையே எங்களின் சேவை**

நீரிறைக்கும் இயந்திரங்கள், உழவு இயந்திரங்கள்,
தெளிகருவி சாதனங்கள் பழுதடைந்துள்ளனவா ?

**உடனடியாக விஜயம் செய்யுங்கள்!**

# பகீதரன் தொழிலகம்

புதிய பூமி,
இடைக்காடு,
அச்சுவேலி.

உரிமையாளர் :
**வே. முருகுப்பிள்ளை**

# ஒரே பார்வையில்

**எமது பாடசாலையில் மக்கள் பங்கு:**

1. ஆரம்ப விஞ்ஞான கூடம் — காலஞ்சென்ற திரு. ஆ. வேலுப்பிள்ளை
2. மனையியல் கூடம் — ப மா. ச. + சைவ வித்தியா விருத்திச் சங்கம்
3. மலசல கூடம் (ரூபா 1,201-82) — ப. மா. ச.
4. சியவஸ நூலகம் (ரூபா 12,822-50) — ப. மா. ச.
5. விளையாட்டு மைதானம் (ரூபா 14,633-90) — ப. மா. ச.
6. பிரதான மண்டபம் (ரூபா 27,491-45) — பெ. ஆ. ச. (அரசினரின் உதவியுடன்)
7. மரவேலைக் கூடம் (ரூபா 7,418-64) — பெ. ஆ. ச.
8. புதிய வகுப்பறைகள் மூன்று (ரூபா 8,443-71) — பெ. ஆ. ச.
9. நீர்த்தொட்டியும் பிரதான இணைப்புகளும் (ரூபா 4,655-23) — இடைக்காடு சனசமூக நிலையம்
10. திறந்த வெளி அரங்கு (ரூபா 1,500-00) — இடைக்காடு இளைஞர் ஐக்கிய விளையாட்டுக் கழகம்
11. புதிய விஞ்ஞான கூடம் (ஏறக்குறைய ரூபா 50,000-00) — பெ. ஆ. ச. (அரசினரின் உதவியுடன்)
12. விவசாயக் காணி திருத்தல் (ஏறக்குறைய ரூபா 10,000-00) — ப. மா. ச.
13. சியவஸ நூலகத்திற்கு புத்தகங்கள் அன்பளிப்பு (ரூபா 1,500-00) — திரு. நா. மாணிக்க இடைக்காடர்
14. பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட வெற்றிக் கிண்ணங்கள் 18

வெற்றிக் கேடயங்கள் 3

பழையமாணவர் சங்கம் நடாத்திய புத்தாண்டு தின விளையாட்டு விழாக்கள் — 4

கலை விழாக்கள் — 3

நிதியுதவிக் காட்சிகள் — 3

எமது பாடசாலையில் போதிக்கப்படும் தொழில் முன்னிலைப் பாடங்கள் — 7

எமது பாடசாலையில் நீண்டகாலம் கடமையாற்றிய அதிபர் காலஞ்சென்ற **திரு. வே. கணபதிப்பிள்ளை**

எமது பாடசாலையில் நீண்டகாலம் கடமையாற்றிய ஆசிரியர் **திரு. கு. சிங்கை அரியரத்தினம்**

எமது பாடசாலையில் க. பொ. த. ப. (சாதாரண) விஞ்ஞான வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. — 1962ம் ஆண்டு.

எமது பாடசாலையில் 1976ம் ஆண்டு உயர்தர விஞ்ஞான வகுப்பிற்குத் தகுதி பெற்ற மாணவர்கள் — 33 பேர்.

ஸ்தாபிதம்: 1906

சிறந்த அச்சுவேலைகளுக்கு

# ஸ்ரீ சண்முகநாத அச்சகம்

*336, 340 காங்கேசன்துறை வீதி,*

**யாழ்ப்பாணம்.**

தொலைபேசி: **285**

---

**உயர்ந்த ரகம்!** **நிதான விலை!!**

★ பலவகைப் பிடவைத் தினுசுகளையும்

❊ தரமான றெடிமேட் உடைகளையும்

மற்றும்

★ அழகுசாதனப் பொருட்களையும்

ஒரே இடத்தில் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளக் கூடிய சிறந்த ஸ்தாபனம்

# ஏ. கே. பிறதர்ஸ்

22, நவீன சந்தை, பெரியகடை,

**யாழ்ப்பாணம்.**

# RAJU STORES

## DIRECT IMPORTERS - WHOLESALERS - RETAILERS

All kinds of Essences Liquid & Powder Colours, Food Flavours, Scent, Essential Oil, Labels, Bottle Corks, Crown Corks, Gas, Saccharine, Acid, Water Pumps, Electric Motors, Toilets, Bakery Requirements, Rice Hullers, Grinders and accessories, Leather Cloth, Vono Spring Beds, Bata Sandals, Cyesta Mattress, New Empty Bottles, Syrup, Sports Goods, Fancy Goods, Toys, Sundries Etc. Etc.

67, 69, Kasturiar Road, **JAFFNA.**

*Telephone*: 372

P. O. Box 64

*Telegram*: 'RAJU'

---

**DRINK BABY BRAND SPECIAL**

**Made by**

## THE

## SUBRAMANIAM AERATED WATER MFY.

VALVETTITURAI.

Telephone: [illegible]97

Telegram: 'SODA'

Dial: 281

Cables; **JWELLERS**

*Visit*

# GOLD HOUSE

FOR





## FASHIONABLE JEWELS
AND
## GURANTEED BRILLIANTS

அழகிற் சிறந்த தங்க நகைகளுக்கு
தகுந்த ஸ்தாபனம்

## தங்க மாளிகை

69, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

உள்ளூர் உற்பத்திப் பொருட்களை சிறந்த முறையில்
விற்பனை செய்து கொடுக்கும்
சிறந்த ஸ்தாபனம்

# ஜோட்ச்ஸ் அன் கம்பனி

76, 4-ம் குறுக்குத் தெரு,

கொழும்பு – 11.

தொலைபேசி: 25979.

# பெற்றோர் ஆசிரியர் சங்கப் பணியின் வரலாறு

**ம. சரவணமுத்து**
செயலாளர், பெற்றோர் ஆசிரியர் சங்கம்

ஒரு பாடசாலையின் கல்விமுறை செவ்வனே அமைவதற்குப் பாடசாலைக்கும் பெற்றோருக்குமிடையிலான உறவு பலப்படுத்தப்பட வேண்டுமென்ற உண்மையை உணர்ந்த கல்வி அமைச்சு, ஒவ்வொரு பாடசாலையிலும் பெற்றோர் — ஆசிரியர் சங்கம் நிறுவப்படவேண்டு மென்பதனை 1972ம் ஆண்டு வெளியிட்ட அதன் சுற்று நிருபம் மூலம் வலியுறுத்தியது. எமது பாடசாலையில் 1959ம் ஆண்டு மார்கழி மாதம் 13ம் திகதி ஆரம்பிக்கப்பட்ட பெற்றோர் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சின் மேற்படி கருத்துக்களுக்கமைந்து அன்று முதல் இயங்கி வருகின்றமை நாம் பெருமைப்படக் கூடிய ஒரு விடயமாகும். சங்கம் அமைப்பதில் அன்று பெரிதும் உழைத்தவர்கள் அற்றை அதிபர் திரு. வே. கணபதிப்பிள்ளை அவர்களும் உப - அதிபர் திரு. சு. இளையதம்பி அவர்களுமாவர். சங்கத்தின் ஆரம்பகாலத் தலைவராக திரு. வே. கணபதிப்பிள்ளையும், செயலாளராக திரு. மு. ஆறுமுகமும், பொருளாளராக திரு. க. கதிர்காமுவும் கடமையாற்றும் பேற்றினைப் பெற்றனர். இதற்கு முன்னரும் எமது பாடசாலையில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஒன்று இயங்கி 1950 அளவில் 140'×30' அளவுகொண்ட (ஐந்து) வகுப்பறைகளை அமைத்துக் கொடுத்திருந்தது என்பதனைச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் 1950ம் ஆண்டறிக்கை மூலம் அறிகின்றோம்.

1959ன் பின் எமது சங்கம் சிறிது சிறிதாக வளர்ந்தது. 1969ம் ஆண்டு அதன் பணிகளில் ஒரு விறுவிறுப்பு ஏற்பட்டு, அதன் செயற்பாடும் விரிவடைந்தது. இதற்கு முக்கிய உந்துகோலாக இருந்தோர் அன்றைய அதிபர் திரு.வே.கணபதிப்பிள்ளை அவர்களும், ஆசிரியர் திரு. சு. இளையதம்பி அவர்களும், சங்கச் செயற்குழுவில் பணியாற்றிய மற்றையோருமாவார்கள். இக்கட்டத்திலே, சங்கம் தொடங்கிய 1959ம் ஆண்டு தொடக்கம் 1969ம் ஆண்டு வரை தலைவராகக் கடமையாற்றிய அதிபர்கட்கும், செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர் அனைவருக்கும், சங்கம் மறைந்து போகாமல் காப்பாற்றியமைக்கு நன்றி கூறவேண்டும்.

1969ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை சங்கம் மிகவும் ஊக்கத்துடனும் அக்கறையுடனும் பள்ளிக்கூடத்தின் பணிகளில் ஈடுபட்டு, கல்வி அமைச்சினால் வகுக்கப்பட்ட நோக்கங்களுக்கு அமையப் பணியாற்றி வருகிறது. பாடசாலையின் துறைகள் அனைத்திலும் தன் பங்கைச் செலுத்தச் சங்கம் என்றும் தவறவில்லை.

எமது கிராமங்களான இடைக்காடு தம்பாலை, வளலாயில் வசிப்பவர்களில் பெருந் தொகையானோர் விவசாயிகள். பெருஞ் செல்வந்தர்கள் எமது கிராமங்களில் இல்லை எனலாம். என்றாலும், தங்கள் உழைப்பின் ஒரு பகுதியை ஆண்டுதவறாமல் தந்துவருகிறார்கள். இது பொருளாகவும் பணமாகவும் கிடைத்து வருகிறது. சிறு துளிதான் பெருவெள்ளமாவது போல 1969 — 1975 காலப் பகுதியில் ரூபா 49,000-00 வரை கொடுத்துள்ளார்கள். நன்கொடை கொடுத்தவர்களுள் திரு. வே. நமசிவாயம், திரு. சி. வே. சபாபதி, காலஞ் சென்ற திருமதி ஆச்சிப்பிள்ளை இளையதம்பி, விசுவமடு படித்த வாலிபர்கள், பழைய மாணவர் சங்கம், ஆகியோர் குறிப்பிடக்கூடிய தொகை அளித்தனர்.

இடைக்காடு சனசமூக நிலையம் தண்ணீர்த் தொட்டியும், இணைப்புகளும் தந்து உதவியது. இத்துடன் அமையாது. பாடசாலையில் நடாத்தப்படும் விழாக்கள் முதலியவற்றுக்கு அவ்வப்போது பெற்றோரும், ஆசிரியரும், மாணவரும் வரையாது வழங்கியுள்ளனர்.

சங்கத்தின் பணிகளுள் பாடசாலைக்குத் தேவையான கட்டிடங்கள் அமைத்தல், தளபாடங்கள் கொடுத்தல், பிற வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் ஆகியவையும் அடங்கும். சங்கத்தினால் அமைக்கப்பட்ட கட்டிடங்களின் விபரம்:

| ஆண்டு | கட்டிட விபரம் | செலவு | நிதி கிடைத்த வழி |
|---|---|---|---|
| 1969-70 | பெரிய மண்டபம் | ரூ. 27,491-45 | அரசாங்க நிதி |
| 1971 | மரவேலைக் கட்டிடம் | 7,418-64 | சங்க நிதி |
| 1972 | தெற்குவளவு வகுப்பறைகள் | 8,443-71 | சங்க நிதி |
| 1974-76 | விஞ்ஞான ஆய்வு கூடம் (கீழ்மாடி) | 25,000-00 (மதிப்பு) | சங்க நிதி |
| 1976 | விஞ்ஞான ஆய்வு கூடம் மேல்மாடி) | 15,000-00<br>10,000-00 (மதிப்பு) | அரசாங்க நிதி<br>சங்க நிதி |

கட்டிடங்கள் அமைப்பதற்குக் கல்வித் திணைக்களம் ரூபா 42,000-00 வரை தந்து உதவியதை நன்றியுடன் நினைவு கூருகிறோம். இக்கட்டிடங்கள் அமைக்கப்பட்டபோது அவ்வேலைகளை மேற்பார்வையிட்டு, செலவைக் கட்டுப்படுத்தி, உரிய காலத்துள் வேலையை முடிக்கப் பொறுப்பாக இருந்தவர்கட்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.

எமது பாடசாலையில் தரமான கல்வி புகட்டுவதற்குத் தேவையான ஆசிரியர்களைப் பெறுவதில் அதிபருக்குப் பக்கபலமாகச் சங்கம் நின்று உழைத்து வருகிறது. ஆசிரியர்களுடன் சுமுகமான உறவை ஏற்படுத்தி அவர்கள் பள்ளிக்கூடப் பணிகளில் நிறைவுடன் ஈடுபடச் சங்கம் பணியாற்றியுள்ளது. இக்கட்டத்தில், எமது ஆசிரியர்கள் பள்ளிக்கூடத்திற்கு ஆற்றிவரும் பணிகளுக்கும், பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் உறுப்பினராக இருந்து, சில ஆசிரியர்கள் செயற்குழுவிலும் அங்கம் வகித்து, சிறப்புப் பணியாற்றுவதற்கும் நன்றி கூறவேண்டும்.

ஒரு பாடசாலையின் வெளிப்புறப்பணிகள் மிக முக்கியம் வாய்ந்தவை. அவ்வித ஒவ்வொரு பணியிலும். எமது பெற்றோர் ஆசிரியர் சங்கம் நிதி உதவி தருவதுடன் நில்லாது, அந்நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல், நடாத்துதல் ஆகிய எல்லாக் கட்டங்களிலும் பங்குகொண்டு வருகிறது. வெளிப்புறப் பணிகளும், நிகழ்ச்சிகளும் பெற்றோருக்கும் – ஆசிரியருக்கும் – பாடசாலைக்கும் – மாணவருக்கும் இடையில் ஒரு நல்ல உறவை ஏற்படுத்தச் சிறந்த பாலமாக அமைகின்றன.

எமது பாடசாலையின் மற்றத் துணை அமைப்பான பழைய மாணவர் சங்கமும், பெற்றோர் ஆசிரியர் சங்கமும் பல விடயங்களில் இணைந்து செயற்படுவது ஒரு சிறப்பு அம்சமாகும். இவ்விரு சங்கங்களும் தமது பணிகளில் சிறப்பாக ஈடுபடக் கூடிய சூழ்நிலையை ஏற்படுத்தி, எமக்கு ஊக்கமும், ஆக்கமும் அவ்வப்போதய அதிபர்கள் நல்கி வந்துள்ளார்கள்.

எமது பாடசாலையின் வளர்ச்சியில் குன்றாத ஈடுபாட்டுடன் உழைத்து வருபவர் எமது ஊரைச் சேர்ந்த திரு. நா. மாணிக்க இடைக்காடர் அவர்களாவர். அன்னார் பாடசாலைக்கு நிதிஉதவி தந்து, பாடசாலை நூல் நிலையத்துக்கு நூல்கள் அன்பளித்து, பாடசாலையின் கருமங்களில் பலவிதத்திலும் உதவி வருகிறார்கள்.

எமது பாடசாலை 1925ம் ஆண்டு நிறுவிய காலந் தொட்டு நோய்வாய்ப்பட்டு படுக்கையுடன் மடங்கும் வரை தல முகாமையாளராக (Local Manager) பணியாற்றி. பாடசாலையைப் பிள்ளைபோல்

வளர்த்துக் கல்லூரி நிலையை அடையச் செய்தவரும், பணம் படைத்தவராக இல்லாதபோதும் தன் சொந்தச் செலவில் விஞ்ஞான ஆய்வுகூடம் ஒன்றினைக் கட்டித் தந்து விஞ்ஞானக் கல்விக்கு வித்திட்டவருமான காலஞ்சென்ற ஆசிரியர் திரு. ஆ. வேலுப்பிள்ளை அவர்களை எமது பாடசாலை பொன்விழாக் கொண்டாடும் சந்தர்ப்பத்தில் நினைவு கூர்ந்து நன்றி செலுத்துதல் கடமையாகின்றது.

இவை எல்லாவற்றுடனும், எமது சங்கப் பணிகள் சிறப்புற நடைபெறவும், அவை பயனளிக்கவும், பெருந்துணையாக இருந்துவரும் ஒரு தாபனம் உண்டு. அது தான் கல்வித் திணைக்களம். வடபகுதிக் கல்வித் திணைக்களமும், அங்கே பொறுப்பாயுள்ள கல்விப் பணிப்பாளர், மற்ற அதிகாரிகள், உத்தியோகத்தர் ஆகியோரும், கல்வித் தலைமைத் திணைக்களமும், கல்வி அமைச்சும் எங்கள் சங்க அலுவலர்கள் அங்கே செல்லும்போதெல்லாம் எமது கோரிக்கைகளை அனுசரணையுடன் கேட்டு ஆவன செய்து எங்களை ஊக்குவித்தனர். அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறோம்.

இறுதியாக, சங்கத்துக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து சங்கப் பணிகளில் பல்வேறு விதங்களில் பங்குகொண்டு, பாடசாலையின் முன்னேற்றத்துக்காக உழைத்த உழைத்து வரும் பெற்றோர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், ஆதரவாளர்கள், மாணவர்கள் அனைவரினதும் பணி மகத்தானது. இவர்கள் பணியும் ஆதரவும் என்றென்றும் தொடர எமது பாடசாலை மேன்மேலும் சிறந்த கல்வி நிலையமாக வளர இறைவனை வேண்டுவோமாக.

---

## எமது பெற்றோர் ஆசிரியர் சங்கம் - 1976

| | |
|---|---|
| **தலைவர்:** | திரு. சி. வே. மகேசவேலு |
| **உப - தலைவர்:** | திரு. க. சின்னத்தம்பி |
| **செயலாளர்** | திரு. ம. சரவணமுத்து |
| **உப - செயலாளர்:** | திரு. சி. நல்லதம்பி |
| **பொருளாளர்:** | திரு. ந. பு. கதிரித்தம்பி |

**செயற்குழு உறுப்பினர்:**

திருமதி. த. செல்வநாயகம்
திரு. சி. க. சின்னத்தம்பி
திரு. ச. க. ஆறுமுகசாமி
திரு. த. வேலாயுதம்
திரு. மா. சின்னத்துரை
திரு. செ. கைலாசபதி

திருமதி. சி. சிவநேசபிள்ளை
திரு. வே. பாலகிருஷ்ணன்
திரு. செ. கணபதிப்பிள்ளை
திரு. சி. நா. தம்பு
திரு. சி. கந்தசாமி
திரு. சீ. செல்லப்பு

திரு. வே. சுவாமிநாதன்

# முன்னேற்றப் பாதையிலே............

**நாம்** பொன்விழாக் கொண்டாடும் இவ்வாண்டு நமக்கு நன்மைகள் பலவற்றை ஏற்படுத்திய நல்லாண்டாகும். சரித்திரக் கண்கொண்டு நோக்கும்போது ஐம்பது ஆண்டுகள் கல்விச்சாலை ஒன்றின் வரலாற்றில் ஒரு சிறியகாலப் பகுதியே எனலாம். கடந்த ஐம்பது ஆண்டுகளாக நம்கல்விச்சாலை அடைந்த முன்னேற்றத்திற்குக் காரணமாக விளங்கியவர்கள் பலர். கல்விப் பகுதியைச் சேர்ந்தோர், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர், தலமுகாமையாளர், அதிபர்கள், பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர், தயாள சிந்தைபடைத்த பரோபகாரிகள் ஆகியோர் எமது இன்றைய வளர்ச்சிக்குக் காரணமாகவிருந்து பொன்விழாக் கொண்டாடும் சிறப்பை நாம் அடைவதற்கு வழிவகுத்துள்ளனர் என்பதை நாம் இந்நிலையில் நினைவுகூருகின்றோம். அவர்கள் அனைவருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள் உரியன. 1926ல் ஐந்து ஆசிரியர்களுடனும் சுமார் 130 மாணவருடனும் ஆரம்பிக்கப்பட்ட கல்விச்சாலை இன்று 33 ஆசிரியர்களையும் 720 மாணவர்களையுங் கொண்டு விளங்குகின்றது. 1932ல் ஏறக்குறைய நூறு நூல்களுடன் இயங்கிய எம் கல்விச்சாலையின் நூலகம் இன்று பழைய மாணவர் சங்கத்தினர் அமைத்துக் கொடுத்த விசாலமான சியவச நூலகக் கட்டிடத்தில், சுமார் 3000 நூல்களைக் கொண்ட சிறந்த நூலகமாக விளங்குகின்றது. நூலகத்திற்கு வரவழைக்கப்படும் சஞ்சிகைகளையுந் தினசரிகளையும் மாணவர் நன்கு பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், இவ்வாண்டு இல்ல அடிப்படையில் மாணவரிடையே பொது அறிவுப் போட்டிகள் ஒழுங்காக நடத்தப்பட்டன. ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம், கணிதம், சமூகக் கல்வி ஆகிய பாடங்களில் மாணவரிடையே இவ்வாண்டு நடத்தப்பட்ட போட்டிகள் அவர்களின் தரத்தை உயர்த்துவனவாகவும், ஆர்வத்தை வளர்ப்பனவாகவும் அமைந்தன. இவ்வாண்டு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட மகா சிவராத்திரி விழா தொடர்பாக மாணவரிடையே இல்ல அடிப்படையில் பேச்சுப் போட்டிகளும் சங்கீதப் போட்டிகளும் நடத்தப்பட்டன. இவ்வாண்டு ஒழுங்கு செய்யப்பட்ட மரதன் ஓட்டப் போட்டியைச் சிறப்புற நடத்த உதவிய அனைவருக்கும் நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம். எங்கள் கல்விச்சாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி இவ்வாண்டு வெகு சிறப்புடன் அமையவேண்டும் என்ற பெருநோக்குடன் வெற்றிக் கேடயங்களும், கிண்ணங்களும் அன்பளிப்புச் செய்த அனைவருக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்.

அறவுணர்வையும் உயர்ந்த இலட்சியங்களையும் பரப்புவதற்குச் சாலச் சிறந்த இடம் பாடசாலையாகும். இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் மாணவர்கள் சமுதாயப் பண்பு நலன்களைப் பெறுவதற்கும், சமய நெறியினுள் நின்று வாழ்க்கையை அணுகும் வல்லமையை அடைவதற்கும் வாய்மை, தூய்மை வழிச் சென்று மேன்மையுறும் குடிமக்களாக விளங்குவதற்கும், விஞ்ஞானம் பற்றிய அடிப்படை அறிவை எய்துவதற்கும், உயர் கல்விக்குரிய சர்வதேச மொழியாக விளங்கும் ஆங்கிலத்தை மாணவர்களிற் பெரும்பாலோர் இரண்டாவது மொழியாகத் தெரிவுசெய்து கற்றுக் கொள்வதற்கும், மாணவரின் நுணுகி ஆயும் ஆற்றல், நயப்புணர்வு, உழைப்புப் பண்பாடு, ஆளுமை, படைப்புச் செயற்பாடுகள், சூழல்சார் செயற்பாடுகள்,

சிறந்த மனப்பாங்குகள் ஆகியவற்றை வளர்ப்பதற்கும் வழிசெய்துள்ள இக்காலக் கல்விமுறையை எம் கல்விச்சாலையில் செவ்வனே நடைமுறைப்படுத்த அயரா துழைக்கும் ஆசிரிய குழாத்தின் மனம் ஒன்றிய ஒத்துழைப்பின் அடிப்படையிலேயே இன்று பொன்விழாக் கொண்டாடும் எம் கல்விச்சாலை, சிறந்த பெறுபேறுகளைத் தொடர்ந்து பெற்றுவந்துள்ளது என்பது வெள்ளிடை மலையாகும்! மரவேலை, உலோக வேலை, மனையியல், வனையியல், விவசாயம், புடைவையும் உடை அமைத்தலும், காகித உற்பத்தி என்பன இங்கு தொழில் முன்னிலைப் பாடங்களாகப் போதிக்கப்படுகின்றன. இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்ட விஞ்ஞான தே. உ. க. சா. வகுப்பைச் சேர்ந்த பெண்கள் ''நடமாடும் சந்தை'' என்னும் தமது செயற்றிட்டத்தைப் பயனளிக்கும் வகையில் செயற்படுத்தி வருகின்றனர்; அதே வகுப்பைச் சேர்ந்த ஆண்கள் ''கிராம மக்களிடையே காணப்படும் புரதக் குறையும் அதன் தீர்வும்'' என்னும் தமது செயற்றிட்டத்தின் மூலம் கிராம மக்களின் புரதக் குறையை நீக்கி அது தொடர்பான ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொள்ளும் நோக்கத்துடன் இப்பொழுது கோழி வளர்ப்பை மேற்கொண்டுள்ளனர். இச் செயற்றிட்டங்கள் வெற்றி அளிக்க ஆசிரியர், மாணவர், பெற்றூர், பழையமாணவர், நலன்விரும்பிகள் ஆகிய அனைவரினதும் இதயபூர்வமான ஒத்துழைப்பை வேண்டுகின்றோம். எமது கல்விச்சாலையின் புனிதப் பணி மேன்மேலும் தொடர, ஆண்டவனின் ஆசியையும் அனைவரின் ஒத்துழைப்பையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

**அதிபர்**

---

# நெஞ்சே நீ நினையாய்!

தில்லை நடேசனையு மாரூர்த் தியாகனையுந்
நல்ல கங்கைக் காசிவிஸ்வ நாதனையுஞ் – சொல்லிரவில்
வந்ததிரு வண்ணு மலையானை யும் மதுரைச்
சுந்தரனை யுந் தினமுஞ் சொல்லு.

வந்த கதிர் காமவடி வேலவனை நல்லூருக்
கந்தனை மா விட்டபுரக் காங்கெயனைச் – சந்நிதியில்
வேளைப் பள்ளம்புலத்து வேற்கிறையை யன்பொடெந்த
நாளுநினை நெஞ்சே நனி.

**– புலவர்மணி ஆ. தில்லைநாதபிள்ளை**

# தொழில் முன்னிலைப் பாடங்கள்

கல்வித் துறையில் மாபெருந் திருப்பத்தை ஏற்படுத்தக் காரணமாய் அமைந்தன 1972ம் ஆண்டு தைமாதந் தொடக்கம் எமது நாட்டின் கல்விமுறையில் புகுத்தப்பட்ட மாற்றங்களாகும். இதற்கு முன்னர் நிலவி வந்த கல்விமுறையின் பயனாக நாற்காலியில் அமரத்தக்க வேலையையே படித்த இளைஞர்கள் பெரிதும் நாடினர். சிலருக்கு மாத்திரமே வேலை வாய்ப்புக்கள் கிட்டுவதால், படித்த இளைஞர்களில் பெரும் பகுதியினர் வேலையற்ற நிலையில் செய்வதென்னவென்று அறியாது தமக்கும் நாட்டிற்கும் பிரச்சனையாகின்றனர். இந்நிலையில் நாட்டின் செல்வ விருத்திக்குப் பயன்படத்தக்க இயற்கை வளங்கள் பூரணமாகப் பயன்படுத்தப்படாமல் கிடக்கின்றன. எமது நாட்டின் மண்வளம், கடல்வளம், கனிப்பொருள் வளம், ஆதியன பூரணமாகப் பயன்படுத்தப்பட வேண்டும். குடியேற்ற நாட்டுக் காலத்து மனப்பாங்குகளை மாற்றி, நாட்டின் பொருள் உற்பத்தியில் மாணவர் முழுமனத்துடன் ஈடுபட்டு, நாட்டின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு மாணவர்க்கு வேண்டிய பயிற்சியைத் தொழில் முன்னிலைப் பாடங்கள் அளிக்கின்றன. இக்காரணத்தினால் தொழில் முன்னிலைப் பாடங்கள் இக்காலக் கல்விமுறையில் முக்கியமானதோர் இடத்தைப் பெறுகின்றன. தொழிற் படிப்புக்கும் தொழில் முன்னிலைப் பாடத்திற்குமிடையே பெரும்வித்தியாசம் காணப்படுகின்றது. மாணவருக்கு ஒரு தொழிலைப் பயிற்றுதல் தொழிற் போதனையாகும்; அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான வெவ்வேறு திறமைகளைப் பயிற்றுவது தொழில் முன்னிலைப் பாடங்களின் அடிப்படை நோக்கமாகும். நாட்டின் பொருளாதார சுபீட்சத்திற்கு வழிகோலும் தொழில் மயமான வாழ்விற்கு மாணவரை இட்டுச் சென்று, அபிவிருத்தியடைந்து வரும் எமது தாய்நாடாகிய ஸ்ரீலங்காவை அபிவிருத்தி அடைந்த நாடாக்கும் எதிர்காலப் பொறுப்பினை மாணவர் திறம்பட நிறைவேற்றுவதற்கு வழிவகுத்துக் கொடுப்பன இன்றைய கல்விமுறையின் அதிமுக்கிய அமிசமாக விளங்கும் தொழில் முன்னிலைப் பாடங்கள் என்றால் அது மிகையாகாது.

பயிற்றப்பட்ட கைப்பணி ஆசிரியர் இல்லாத குறை பலவாண்டுகளாக எம் கல்விச் சாலையில் இருந்து வந்தது. அதிபர் திரு. க. குணரத்தினம் அவர்களின் காலத்தில் பயிற்றப்பட்ட மரவேலை ஆசிரியர் ஒருவர் எம் கல்விச் சாலைக்கு நியமிக்கப்பட்ட நாள் முதலாக, எமது கல்விச் சாலையில் தொழில் முன்னிலைப் பாட வளர்ச்சி படிப்படியாகத் துரிதமாக ஏற்பட்டு வந்திருக்கிறதென்பதனை நாம் கூறாமல் இருக்க முடியாது. மரவேலை, உலோக வேலை, விவசாயம், வனையியல், மனையியல் புடைவையும் உடை அமைத்தலும், காகித உற்பத்தி என்பன இன்று எம் கல்விச்சாலையில் போதிக்கப்படும் தொழில் முன்னிலைப் பாடங்களாக விளங்குகின்றன. பெற்றார் ஆசிரியர் சங்கத்தினர் அமைத்துக் கொடுத்த கட்டிடத்தில் மரவேலையும், உலோக வேலையும் போதிக்கப்படுகின்றன. வனையியற் போதனை ஒரு தனி அறையிலும் மனையியற் போதனை மனையியற் கூடத்திலும் நடைபெறுகின்றன. பயிர் செய்வதற்குப் போதியளவு நிலவசதி இல்லாத குறையை நிவிர்த்தி செய்யும் நோக்கத்துடன், கல்விச் சாலையின் முன்னேற்றமே தமது முன்னேற்றமெனக் கருதும் பழைய மாணவர் சங்கத்தினர் நிலம் திருத்தும் வேலையில் வழமைபோல் இவ்வாண்டும் தொடர்ந்து ஆர்வத்துடன் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். குறித்த நிலம் திருத்தும் வேலைகள் பூர்த்தியாக்கப்பட்ட

தும் விவசாயம் செய்வதற்குப் போதியளவு இடவசதி காணப்படும் என்பது எமது நம்பிக்கை.

''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை''

என வான்புகழ் வள்ளுவன் தொகுத்துக் கூறிய விவசாயத்தின் மேன்மையைப் பற்றிய கருத்தை நம் மாணவர் உணர்ந்து, 'உழவுக்குந் தொழிலுக்கும்'' வந்தனை செய்யும் மனப்பாங்கைப் பெற்று நாட்டின் உற்பத்தியைப் பெருக்கும் தொழில் வீரர்களாக விளங்க வழிசெய்யும் விவசாயக் கல்வியில் நம் மாணவர் காட்டும் ஆர்வம் போற்றற்குரியது. அதிபர் திரு. க. குணரத்தினம் அவர்களின் காலத்தில் நாட்டப்பெற்ற முந்திரிக்கொடிகளைப் பேணி வளர்த்துப் பாதுகாத்துப் பயன் பெறுவதே நாம் அவரின் சேவைக்கு ஆற்றும் நன்றிக் கடனாகும். காகிதம் செய்வோம் என்ற பாரதியாரின் கருத்தை நம் கல்விச்சாலையில் செயற்படுத்த வேண்டும் என்ற பேரார்வத்தினால் உந்தப்பட்ட எமது அதிபர் அவர்கள், தமது விடா முயற்சியின் பயனாக, இவ்வாண்டு காகித உற்பத்தியைத் தொழில் முன்னிலைப் பாடங்களில் ஒன்றாக நம்மாணவர் கற்றுக்கொள்வதற்கு வழிவகுத்துள்ளார். காகித உற்பத்தி தொழில் முன்னிலைப் பாடமாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட அந்நாளில் ஒழுங்கு செய்யப்பட்ட பொருட் காட்சி கல்வி அதிகாரிகளின் பாராட்டு தலைப் பெற்றது. பொருள்களை விற்பனைக்கேற்ற அளவில் உற்பத்தி செய்து சகாயமான விலையில் அவற்றை விற்கும் செயற்றிட்டத்தின் அடிப்படையிற் செவ்வனே இயங்கும் நமது வனையியல் மன்றம் போற்றற்குரிய சேவையாற்றி வருகின்றது. மரவேலை, உலோகவேலை, மனையியல், புடைவையும் உடை அமைத்தலும் போன்ற தொழில் முன்னிலைப் பாடங்களில் மாணவர் தொடர்ந்து, மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். பொதுவாகக் கூறுமிடத்து பொதுப் பரீட்சைகளில் தொழில் முன்னிலைப் பாடங்களில் நமது மாணவர் சிறந்த பெறுபேறுகளைத் தொடர்ந்து பெற்று வருகின்றனர். இங்கு போதிக்கப்படும் தொழில் முன்னிலைப் பாடங்கள் மாணவர்க்கு அறிமுறை ஞானத்தையும், செயல்முறை அறிவையும் அளித்து, அவர்களை விஞ்ஞான ரீதியில் அமைந்த ஆராய்ச்சிகளில் ஈடுபடுத்த வேண்டும் என்பதே இக்காலக் கல்வி முறையின் பரந்த நோக்கமாகும்.

**திருமதி சி. சிவகாமிப்பிள்ளை** B. A.

## முதற் புலவா !

சேந்தா குகா முருகா வள்ளி தெய்வ சேனை திருக்
காந்தா முதற் புலவா காங்கேயா — பூந்தாதில்
தேனினம் பண் பாடிச் செயுங் கீத நல்லூரா
ஏனிரங்க வில்லை யினும் ?

புலவர்மணி ஆ. தில்லைநாதபிள்ளை இயற்றிய நல்லைத் திருவருக்க மாலையில் வரும் பாடல்.

# கவிதை

## வாழ்த்து

கற்றோர் மிகும் இடைக் காடம்பதியில்
கவின் கலை ஞானமே மிகுந்திடும் நிலையாம்
மற்றோர் கண்டெழில் மாண் புகழுரைக்க
மாசிலா மிளிர் தமிழாங்கில நூலை
பெற்றோர் ஆசிரியருடன் மறு பேரும்
பேணியே வளர்க்கும் மகாவித்தியாலயம்
வற்று திறைக்க நீர்க் கேணியாக
வழங்கிடுமே கலை தீங்கரும் பாக.

திசையெங்கும் மிகு நீலம் சூழ் தீவாம் எம்நாட்டில்
திக்கெட்டும் புகழ் கேட்கத் திகழ்ந்திடும் ஓர் நல் வீட்டில்
இசை பொங்கும் கலைத்தேவி இயம்பிடுமோர் உயர் மேட்டில்
ஈன்றெடுத்தாள் ஓர் மகாவித்தியாலயம் இடைக்காட்டில்.

## பொன் விழா, வெள்ளி விழா, திறப்பு விழா.

இன்று நாம் ஒன்றாய்க் கூடியே நம்மால்
இயன்ற வரையில் எழில் பெறும் வகையில்
கன்று தாய் போன்ற கல்வியும் சாலையும்
காசினி மீதினில் சிறந்து விளங்கவே
பொன் விழா எடுத்துப் புகழ்க் கணை தொடுத்து
பூமியெல்லாம் புகழ் போற்ற அடுத்து
வெள்ளி விழாவும் வியப்புறும் விதமாய்
பழைய மாணவர் சங்கத்திற் கெடுத்து
ஊக்க முடனே புகழ் பட முடிப்போம்.

க. அமிர்தலிங்கம்
9 B.

சகல விளைபொருள்களையும் நல்ல விலைக்கு
விற்றுக் கொடுக்கும் சிறந்த ஸ்தாபனம்

# எஸ். பி. சாமி அன் கோ

**உள்ளூர் விளைபொருள் விற்பனையாளர்**

நாலாம் குறுக்குத் தெரு,

**கொழும்பு - 11.**

## விவசாயிகளுக்கு ஓர் நற்செய்தி!

உங்களின் உற்பத்திப் பொருள்களாகிய
மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு, நிலக்கடலை,
சோளம், பயறு, உழுந்து, குரக்கன், எள்ளு, கடுகு, மிளகு
எதுவாயிருந்தாலும் கூடுதலான விலைக்கு
விற்பனை செய்துதரக் காத்திருக்கிறோம்.
எம்முடன் ஒருதடவை தொடர்பு கொள்ளுங்கள்.

# கலா டிறேடிங் சென்டர்

உள்நாட்டு விளைபொருள் கமிஷன் வியாபாரிகள்

111, 4ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11

தொலைபேசி: **22584**

372·05
ITA
BP

உங்கள் வீட்டுக்குரிய
சகலவிதமான மின்சாரப் பொருட்களும்
மின் உப பொருட்களையும்

எம்மிடம்
குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம் என்பதை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# எலக்ரோலக்ஸ்

கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம்.

223129

விவசாயப் பொருட்கள் சில்லறைச் சாமான்களுக்கு

சிறந்த ஒரே ஸ்தாபனம்

V


# ஸ்ரீ கணேசா ஸ்ரோஸ்

சன்னிதி வீதி,

அச்சுவேலி.

AUM

# Divine Lights





Loving Lord of Sannithee,
Our humble prayers to thee,
Help us ever our weird to dree
And so from Maya's clutches flee!

Our Power and Lord of Pallampulam,
Stop us ever being dull and glum;
Give us all thy divine plum,
Thy blessings, Peace and asylum.

Twinkle, twinkle, sister Ratna,
Ever we wander where you are!
Twinkle, twinkle, sister Gnana,
You are Father, Mother and more!

Revered Father, Poets' Poet,
Full of virtue, moral might,
You are ever our Kindly Light,
Leading us to Heights of right.

Sisters sweet, your duties done,
True Heaven you have surely won;
To Peaceful Home you have gone
Where Graceful Lord and you are One!

Godly Father, Lyrical Bard,
Lulling us with lilting word,
Singing ever of Loving Lord,
May Thee rest in Gracious God!

IN LOVING MEMORY OF MY LATE FATHER, SHREE A. THILLAINATHAPULAVAR AND MY LATE SISTERS MISS. T. GNANAMBIHAI AND MRS. S. RATNAMBIHAI..........

A. T. SIVANESAPILLAI B. A.

# விளையாட்டு மன்ற ஆண்டறிக்கை 1975/76

| | | |
|---|---|---|
| தலைவர்: | திரு. | எஸ். வி. மகேசவேலு |
| உப தலைவர்கள்: | ,, | பி. விஷ்ணு |
| | ,, | தீ. சிவநேசபிள்ளை |
| செயலாளர்: | ,, | ஜே. எம். பி. ஜெயராஜா |
| உப செயலாளர்: | ,, | வி. சச்சிதானந்தம் |

நிர்வாகக் குழுவினர்:

**திரு. எஸ். சிறீதரன்** **திரு வி. எஸ். அந்தோனிப்பிள்ளை**
**திருமதி எல். நடராசபிள்ளை** **செல்வி ஜீ. வீரசிங்கம்**
**செல்வி ரி. கந்தசாமி**

### கௌரவ செலாளர் பகுதி:

எமது வித்தியாலய அதிபரின் பெருந்தன்மையான உதவியுடனும், எமது அங்கத்தவர்களது அயரா ஒத்துழைப்புடனும், எமது வருடாந்த செயற்றிட்டங்களை நிறைவுபெறச் செய்துள்ளோம்.

### மெய்வல்லுநர் விளையாட்டுக்கள்

இல்லரீதியில் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டுள்ளன. 1975ம் ஆண்டில் இளங்கோ இல்லத்தினர் 312½ புள்ளிகளையும், வள்ளுவர் இல்லத்தினர் 288½ புள்ளிகளையும், கம்பன் இல்லத்தினர் 285 புள்ளிகளையும் பெற்றனர். சிரேட்ட பிரிவு ஆண்களில் செல்வன் எஸ். விறுமராஜா, மத்திய பிரிவு ஆண்களில் செல்வன் வி. ஸ்ரீஸ்கந்தராசா, கனிட்ட பிரிவு ஆண்களில் செல்வன் கே. காந்தலிங்கம் ஆகியோர் வீரர்களாகவும், சிரேட்ட பிரிவுப் பெண்களில் செல்விபொ. சாந்தினி, மத்திய பிரிவுப் பெண்களில் செல்வி எஸ். சாந்தலெட்சுமி, கனிட்ட பிரிவுப் பெண்களில் செல்வி எஸ். விக்னேஸ் ஆகியோர் வீராங்கனைகளாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

1976ல் இராசரத்தினம் இல்லத்தினர் 340½ புள்ளிகளையும், நாவலர் இல்லத்தினர் 235 புள்ளிகளையும், வேலுப்பிள்ளை இல்லத்தினர் 223½ புள்ளிகளையும் இராமநாதன் இல்லத்தினர் 194 புள்ளிகளையும், பெற்றனர். இவ்வாண்டில் சிறந்த வீரர்களாகவும், வீராங்கனைகளாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்கள்:

**ஆண்கள்**

| | | |
|---|---|---|
| 11 வயது | செல்வன் | எஸ். கணேசலிங்கம் |
| 13 ,, | ,, | ஆர். விநாயகமூர்த்தி |
| 15 ,, | ,, | என். சேந்தன் |
| 17 ,, | ,, | கே. யோகராசா |
| 19 ,, | ,, | ஆர். நில்லைநாதன் |

**பெண்கள்**

| | | |
|---|---|---|
| 11 வயது | செல்வி | எஸ். சிவரூபி |
| 13 ,, | ,, | எஸ். சுகந்தி |
| 15 ,, | ,, | எஸ். செல்வவனஜா |
| 17 ,, | ,, | ஏ. மதிவதனி |
| 19 ,, | ,, | எஸ். யோகேஸ்வரி |

எமது வீரர்கள் பலர் கோப்பாய் உப கல்வி வட்டாரம் நடாத்திய மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பங்குகொண்டு பல இடங்களைப் பெற்றனர்.

### உடற் பயிற்சி:

1975ம் ஆண்டு கோப்பாய்க் கல்வி வட்டாரம் நடாத்திய உடற்பயிற்சிக் காட்சியில் எமது வித்தியாலய மாணவிகள்

நடாத்திய காட்சி எல்லோராலும் புகழப்பட்டது. வட்டாரப் போட்டிகளில் இவ்வாண்டு ஆண்கள், பெண்கள் குழுக்கள் பங்குபற்றி, ஆண்கள் இரண்டாம் இடத்தைப் பெற்றுச் சான்றிதழ் பெற்றனர்.

**வலைப்பந்து:**

இவ்வாண்டு இல்லரீதியில் வலைப்பந்து விளையாட்டுப் போட்டிகளை நாம் நடத்திய பொழுது, நாவலர் இல்லம் முதல் இடத்தைப் பெற்றது. ஆசிரியை திருமதி சி. இராமச்சந்திரன் அவர்களின் அயரா முயற்சியால் திறமையான வலைப்பந்துக் கோஷ்டி ஒன்றைத் தெரிந்துள்ளோம்

**கரப்பந்து, காற்பந்து:**

இல்ல அடிப்படையில் நடத்தப்பட்ட கரப்பந்துப் போட்டிகளில் இராமநாதன் இல்லம் முதல் இடத்தைப் பெற்றுக்கொண்டது. திறமை வாய்ந்த கரப்பந்துக் கோஷ்டி ஒன்றைத் தெரிவு செய்து தொடர்ந்து பயிற்சி அளித்து வருகின்றோம். இவ்வாண்டு தெரிவு செய்யப்பட்ட காற்பந்துக் கோஷ்டிக்கு வேண்டிய பயிற்சியினை அளிப்பதன் மூலம், ஏனைய கல்லூரிகளுடன் போட்டியிட்டு இத்துறையில் மேலும் முன்னேற்றம் காண முடியும் என நம்புகின்றோம்.

**நன்றி நவிலல்:**

இத்துறையில் எம்மை உற்சாகத்துடன் உழைக்க ஊக்குவித்த மன்றத் தலைவர் அவர்களுக்கும், மன்றத்தினர்க்கும், இல்ல ஆசிரியர்களுக்கும், தேவையான பொழுதெல்லாம் பேருதவி புரிந்த பெற்றோர் ஆசிரிய சங்கத்தினர்க்கும், பழைய மாணவர் சங்கத்தினர்க்கும், ஏனையோர்க்கும் இதயம் நிறைந்த நன்றியைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**ஜே. எம். பி. ஜெயராஜா**
கௌரவ செயலாளர்

# வனையியல் மன்றம்

**வா**ழ்க்கையை வளமாக்க உதவும் வனையியற் கல்வி பயனையும் அழகையும் ஒருங்கே இணைத்து மாணவ சமுதாயம் உற்பத்தித் துறையில் ஈடுபட்டு, நாட்டின் பொருளாதார நிலையை உயர்த்த உதவுவதோடு வேலையின்மை போன்ற சமுதாயக் குறைபாடுகளையும் ஓரளவு தீர்க்கும் வாய்ப்பையும் வல்லமையையும் மாணவர்க்கு அளிக்கின்றது. வனையியல் போன்ற தொழில் முன்னிலைப் பாடங்களையும் ஏனைய பாடங்களோடு இணைத்துக் கல்விகற்கும் இன்றைய இளஞ்சந்ததியினர் இக்காலக் கல்வி முறையின் முழுப்பயனையுந் துய்க்க வனையியல் மன்றம் போன்ற மன்றங்கள் பெருந்துணை புரிகின்றன. 112 மாணவர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட வனையியல் மன்றம், விற்பனைக்குரிய முறையில் உற்பத்தியைப் பெருக்குதல், சகாயமான விலையில் பொருள்களை விற்றல், அங்கத்தவர்களுக்குச் சுற்றுலா வசதிகளை ஒழுங்கு செய்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்றது. இம்மன்றத்தின் நடப்பு வருட அலுவலர்களாகப் பின்வருவோர் மிக்க ஆர்வத்துடன் கடமை புரிந்து வருகின்றனர்.

| | |
|---|---|
| தலைவர்: | **செல்வி. சி. ஞானமலர்** |
| பொருளாளர்: | **ஆசிரியை செல்வி யோ. மாணிக்கம்** |
| செயலாளர்: | **செல்வி க. தனலட்சுமி** |
| உதவிச் செயலாளர்: | **செல்வி சீ. சிவசுஸ்வரி** |

# சிரேட்ட மாணவர் தமிழ் மன்றம்

இளைஞர்களை மாண்புடையவர்களாக, நாட்டின் எதிர்காலச் சிற்பிகளாக ஆக்கும் கலைக்கூடம் கல்லூரியாகும். ஏட்டுக் கல்வியோடு செயல்முறைக் கல்வியும் கொடுக்கப்பட்டாற்ருன் அக்கல்வி முழுமைபெறும். மாணவனைச் சிறந்த பேச்சாளனுக, எழுத்தாளனுகக் கவிஞனுக ஆக்கிக் கொள்வதற்கு அமைக்கப்படும் மேடை கல்லூரி மன்றமாகும். இதற்கமையக் கல்லூரிகளிற் பல மன்றங்கள் அமைக்கப்படுகின்றன. இவற்றுள் மொழிவழி மன்றம், தமிழ் மன்றம். எமது கல்லூரித் தமிழ்மன்றம் மாணவரிடையே பேச்சு, எழுத்துப் போட்டிகளை நடாத்தியும், பெரியார்களுக்கு விழாக்கள் எடுத்தும் வருகின்றது. இவ்வாண்டு சிவராத்திரி விழா தமிழ் மன்றத்தின் ஆதரவோடு மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. பின்வருவோர் இவ்வருட அலுவலர்களாகச் செயற்பட்டு வருகின்றனர்.

| | |
|---|---|
| புரவலர்: | ஆசிரியர் திரு. க. தேவதாசன் B. O. L. |
| தலைவர்: | செல்வன் வே. ஸ்ரீஸ்கந்தராசா |
| உப தலைவர்: | செல்வன் ந. முத்துராசா |
| செயலாளர்: | செல்வி ஆ. ஆனந்தஈஸ்வரி |
| தனாதிகாரி: | செல்வி ச. தேன்மொழி |
| உப தனாதிகாரி: | செல்வன் சு. ஜீவகுமார் |

# சிறுவர் தமிழ் மன்றம்

எமது கல்லூரியின் பல்துறை வளர்ச்சியில் அதிபரும் ஆசிரியர்களும் காட்டி வரும் ஊக்கத்தின் பயனுக இவ்வாண்டு உதயமாகியது சிறுவர் தமிழ் மன்றம். வருங்காலத் தலைவர்களின் நாவன்மை, எழுத்தாற்றல் போன்ற ஆற்றல்களை வளர்க்கும் அரங்காகச் சிறுவர் இலக்கிய மன்றம் திகழ வேண்டும் என்பது எமது பெருவிருப்பு தம் நாத்தழும்பேற நம் பைந்தமிழ்ச் சிருர்கள் அந்தமொன்றில்லாச் செந்தமிழ் தன்னைச் சந்ததம் பயில வாய்ப்பளிக்கும் நம் தமிழ் மன்றம் சிந்தனை வளர்க்கும் விந்தை கொள் மேடையாய் விளங்குகின்றது.


''சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ் சொ லின்மை யறிந்து''

என வள்ளுவன் வகுத்த சொல்வன்மை தன்னை எல்லாச் சிறுவரும் இயன்ற வகையில் பயின்று சிறக்க நல்வாய்ப்பளிப்பது நம் சிறுவர் தமிழ் மன்றம் ஆகும். மன்ற நிகழ்ச்சிகளில் சிறுவர் காட்டிவரும் பேரார்வம் போற்றற்குரியது. பின்வருவோர் மன்றத்தின் நடப்பு வருட அலுவலர்களாகச் செயலாற்றி வருகின்றனர்.

| | |
|---|---|
| தலைவர்: | ஆசிரியர் திரு. து. சித்திவிநாயகமூர்த்தி |
| செயலர்ளர்: | செல்வி சி. சிவரூபி |
| உதவிச் செயலாளர்: | செல்வன் பொ. உதயணன் |
| பொருளாளர்: | செல்வி. க. சித்திரா |
| உதவிப் பொருளாளர்: | செல்வி பூ. கோமதி |



வடமாநிலக் கல்வி அதிபதி
**திரு. சோ. தணிகாசலம் அவர்கள்**
சியவஸ நூலகத்தைத் திறந்துவைத்தல் 1969



**திரு. க. விசுவலிங்கம் அவர்கள்**
ப. மா. ச. ஆரம்பகாலச் செயலாளர்



மாணவத் தலைவர்கள்

*Space Donated by*

**CEYLON MERCHANTS LIMITED**

**JAFFNA**

அன்பளிப்பு

# ஆனந்தா அச்சகம்

காங்கேசன்துறை வீதி,

**யாழ்ப்பாணம்.**

---

*Space Donated*

*By*

**S. R. SELLATHURAI**

216, K. K. S. Road,

**JAFFNA.**

Phone: 296

Space Donated
By

# KANESAN STORES

63, 78 K. K. S. Road,

**JAFFNA.**

Space Donated
By

# ABDULALLYGULAM HUSEIN

59, Kasturiar Road,

JAFFNA.

UNIVERSITY OF JAFFNA
Library
SRI LANKA

*Space Donated*

*By*

V

# CHELLAPPA & Co.

4/1, STANLEY ROAD

***JAFFNA.***

போன்: 286



அழகிய
தங்கப்பவுண்
நகைகளுக்கும்
வைரங்களுக்கும்



சிறந்த ஸ்தாபனம்



# கே. டி. எம். ஜுவல்லர்ஸ்

நகை, வைர வியாபாரம்

67, கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

அன்பளிப்பு

# கிருஷ்ண பவான்

காங்கேசன்துறை வீதி,

பெரியகடை - யாழ்ப்பாணம்.

*With the best compliments of*

# KALKI SONS

147, Stanley Road,
**JAFFNA.**

*DISTRIBUTORS FOR:*

* THE MAHARAJA ORGANISATION LTD.
(Consumer Products & S-Lon Building Materials)
* TUNGSRAM BULBS
* AGRO CHEMICALS

## உள்ளூரில் உற்பத்தியாகும்

மிளகாய்
உருளைக்கிழங்கு,
அச்சுவெல்லம்
தூள் சர்க்கரை
கடுகு

கடுக்காய், புளி
மக்கா சோளம்
கேவர்
கொக்கோ
நிலக்கடலை

குரக்கா புளி
ஏனைய உள்ளூர் உற்பத்திப் பொருட்களையும்
கமிஷனுக்கு
சிறந்த முறையில் விற்றுக்கொடுக்கப்படும் ஸ்தாபனம்

# எஸ். பெரியண்ணைபிள்ளை அன் கம்பனி

சகல இலங்கை உற்பத்திப் பொருட்களின் விற்பனையாளரும்
தரகு வியாபாரியும்

228, கெய்சர் வீதி,
கொழும்பு-11

தொலைபேசி: **28297**

தந்தி: "பிருந்தா"

*With Best Compliments*

*From*

**YARL METAL INDUSTRIES**

250, 254, K. K. S. Road,

**JAFFNA.**

Phone: 7049

*Space Donated*

*By*

# Silva Watch Works



10, NEW CENTRAL MARKET
Hospital Road,
JAFFNA.



சியவஸ நூலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டோர்



கல்லூரி உதைபந்தாட்டக் கோஸ்டி



கல்லூரி கரப்பந்தாட்டக் கோஸ்டி

# 1926 - 1976

**க. சின்னத்தம்பி,** B. Sc. Dip-in-Ed.
கல்விப்பீடம்
இலங்கைப் பல்கலைக் கழகம்
கொழும்பு வளாகம்

பெருமையுடன் பொன்விழா எடுக்கப்படும் இவ்வேளையில் இக் கல்லூரியின் ஐம்பது வருட வாழ்க்கையினின்றும் பொறுக்கி எடுக்கப்பட்ட சில அம்சங்களை, எம் இளஞ் சந்ததியினரின் நலன் கருதி, வரலாற்று ரீதியாகத் தொகுத்தளித்தல் மிகப் பொருத்தமான ஒரு செயலாகும். அந்நிய மத, மொழி, கலாச்சார அரசியற் செல்வாக்கின் கீழ் சைவமும் தமிழும் நசுக்கப்பட்டுக்கொண்டிருந்த அக் காலத்தில், அஞ்சாநெஞ்சுடனும் அயரா உழைப்புடனும் செயற்பட்ட சுதந்திர புருஷர்கள் பலரின் தியாக சிந்தனைக்கூடாக உருவெடுத்ததே எமது வித்தியாலயம். இச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்.

### வித்தியாலத் தோற்றமும் வளர்ச்சியும்:

1925ம் ஆண்டின் பிற்கூறில் சுமார் முப்பது பிள்ளைகளையும் பண்டிதர் சு. இராமசாமி அவர்களைத் தலைமை ஆசிரியராகவும் கொண்டு, இன்று இளைப்பாறியுள்ள தலைமையாசிரியர் திரு. சு. முருகுப்பிள்ளை அவர்களின் வளவில் திண்ணைப் பள்ளியாக ஆரம்பித்த இக் கல்விக்கூடம், 1926ம் ஆண்டு தை மாத நன்னாளொன்றில், இப்போது பாடசாலை அமைந்துள்ள நிலையத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவருடனும் காலஞ்சென்ற திருவாளர்கள் கை. செல்லமுத்து, சி கணபதிப்பிள்ளை, செல்வி வீரகத்திப்பிள்ளை சரஸ்வதி ஆகியோர் உட்பட ஐந்து ஆசிரியர்களுடனும் இயங்க ஆரம்பித்தது. சைவத்தையும் தமிழையும் தனது இரு கண்களாகப் போற்றி வாழ்ந்த சேர். பொன். இராமநாதன் அவர்களும் எமதூர்ச் சைவத் தமிழபிமானிகளும் சேர்ந்து உருவாக்கிய இக் கல்லூரிக்கு அன்று ''இடைக்காடு புவனேஸ்வரி தமிழ் வித்தியாலயம்'' எனப் பெயர்சூட்டியமை மிகப் பொருத்தமானதாகும்.

கற்பாறைகளுக்கு மத்தியிலும் சுகாதாரம் மற்றும் அத்தியாவசிய வசதிகள் குன்றியும் இக் கல்லூரி காணப்பட்ட போதும், எமது கிராமத்தின் பாரம்பரிய தொழிலாகிய விவசாயம், எமது பண்டைய பண்பாட்டைப் புலப்படுத்தும் கோலாட்டம், கும்மி போன்ற கலாச்சார நிகழ்ச்சிகள் ஆகியன பாடசாலைப் புறக்கிருத்தியங்களாக இருந்தமை எமது பாடசாலையின் பிற்கால வளர்ச்சிக்கு அனுசரணையாக விளங்கிற்று எனலாம். ஜாதி பேதம் மிகுந்து காணப்பட்ட அக்காலத்தில், பாடசாலை ஆரம்பித்துச் சுமார் நான்கு வருடங்களுக்குள்ளாகவே 'சமாசனம்' வழங்கப்பட்டமை இக் கல்வி நிறுவனத்தின் வளர்ச்சியில் ஒரு முக்கிய படியாகும். இப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இக்கிராமத்திலோ அல்லது அண்மைக் கிராமங்களிலோ ஐந்தாம் வகுப்பிற்கு மேல் படிக்க வசதியிருக்கவில்லை. எனவே எட்டாம் வகுப்புவரை கல்வி வசதியளிக்கக்கூடியதாக இப் பாடசாலை அமைக்கப்பட்டது.

1929 அளவில் இரண்டாவது கட்டடமும் பாடசாலைக்கு அமைத்துக் கொடுக்

கப்பட்டமையால் படிப்பதற்குப் போதிய அளவு இடவசதி ஏற்பட்டது. இதுவே, இப் பாடசாலையில் ஆசிரியப் பிரவேச வகுப்பை 1931ல் ஆரம்பிப்பதற்கு ஏதுவாக அமைந்தது. பாடசாலை ஆரம்பித்த முதல் ஐந்தாண்டுக் காலப் பகுதியில் மிகத் துரித வளர்ச்சி காணப்பட்டது; மாணவர் தொகை இரட்டிக்க, மாணவர் தேர்ச்சிச் சங்கம், விளையாட்டு, நூலக சேவை, சுகாதார வசதிகள் போன்ற ஏனைய துறைகளிலும் ஏகப்பட்ட முன்னேற்றத்தைக் காணக்கூடியதாயிற்று. 1935ம் ஆண்டளவில் பாடசாலை துவிபாஷா பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட்டதுடன் எம். ஏ. பட்டதாரியும் பொது மக்களுடன் அந்நியோன்னியமாகப் பழகக்கூடியவருமான ஒருவர் அதிபராக இங்கு வந்தமை பாடசாலையின் தரம் மேலும் உயர ஏதுவாயிற்று. 1940ம் ஆண்டளவில் முதன் முறையாக ஆங்கிலமூலம் கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு மாணவர் தோற்றியமையும், 1942ல் ஆங்கில சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்பு ஆரம்பித்தமையும் சேர்ந்து 1950 அளவில் இது ஓர் ஆங்கிலப் பாடசாலையாக உயர்வதற்குக் கருவாக அமைந்தது எனலாம்.

பொதுமக்களால் அமைக்கப்பட்ட 140 அடி x 30 அடி அளவுகொண்ட ஐந்து வகுப்பறைகள், தல முகாமையாளராகக் கடமையாற்றிய காலஞ்சென்ற திரு. ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் முயற்சியால் 1950 அளவில் அமைக்கப்பட்ட விஞ்ஞான கூடம், இரு வகுப்பறைகள் ஆகியன இப் பாடசாலையின் கல்விகற்கும் வசதிகளை மேலும் அதிகரித்தன. இதேகாலப் பகுதியில், 'இடைக்காடு சைவ ஆங்கில வித்தியாசாலை' என வழங்கிவந்த இப் பாடசாலைக்கு 'இடைக்காடு இந்துக் கல்லூரி' எனப் பெயர் மாற்றியமையும் இப் பாடசாலையின் கல்வித் தரம் தொடர்ந்து உயர்ந்துகொண்டிருந்தமைக்கு ஒரு சான்றாகும். 1953ல் ஆரம்பித்து 1956ல் நிறைவுபெற்ற மனையியற்கூடம் பெண் பிள்ளைகளுக்கான கல்வி வசதிகளை மேலும் அதிகரித்தது. இவற்றைவிட அண்மைக் காலத்தில் ஏற்பட்ட கட்டடங்கள், நூலகம், மின்சாரவசதி, குடிநீர் விநியோகம், விளையாட்டு மைதானம், விவசாய நிலம், விஞ்ஞானகூடம் போன்றவைகளும் மேன்மேலும் கல்வி வசதிகளை விரிவாக்கியுள்ளன. 1961ல் அரசு இப் பாடசாலையைப் பொறுப்பேற்ற பின்னரும் பாடசாலையின் வளர்ச்சியிற் பொது மக்கள் அக்கறைகாட்டி வந்தனர். பாடசாலையின் கல்வித் தரத்தையும், பொது மக்களின் ஈடுபாட்டையும் உணர்ந்த கல்வி அமைச்சு இப் பாடசாலையை மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்துவதனைத் தாமதிக்கவில்லை. 1950 அளவில் விஞ்ஞானகூடம் அமைக்கப்பட்டபின்னர், ஆறும் வகுப்பிலிருந்து ஆரம்ப விஞ்ஞானம், சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர வகுப்புக்களில் தாவரவியல் என மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விஞ்ஞானக் கல்வி இடம்பெற்று வந்தது. விஞ்ஞானத்துறையில் தமது கல்வியைத் தொடர விரும்பியோர் வெளியிடப் பாடசாலைகளுக்கே சென்றனர். இந்நிலையை நீக்கும்முகமாக க. பொ. த. (சாதாரண) வகுப்பில் விஞ்ஞான நெறி 1962ல் ஆரம்பிக்கப்பட்டது. 1975 டிசம்பரில் நடைபெற்ற க. பொ. த (சா.) பரீட்சையில் 14 பேரும், தே.பொ.க.த ப. பரீட்சையில் 15 பேரும் உயர்தர விஞ்ஞான வகுப்பில் படிக்கும் தகுதியைப் பெறும் வகையில் சித்தியடைந்தமையும் 1976 ஏப்பிரலில் நடைபெற்ற க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் நான்கு மாணவர்கள் 4 பாடங்களிலும் ஐந்து மாணவர்கள் 3 பாடங்களிலும் சித்தியெய்தியமையும் இக் கல்வி நிறுவனத்தின் கல்வித் தரத்தினை மேலும் புலப்படுத்துவதாக அமைந்துள்ளன.

இதே நேரத்தில், உயர்தர (விஞ்ஞான, கலை)க் கல்வி கற்க விழைவோர் பெருஞ் சிரமத்துடன் வெளியூர்ப் பாடசாலைகளுக்குச் சென்றே படிப்பைத் தொடரவேண்டிய பரிதாப நிலையை எம் மக்கள் அனைவரும் உணரத்தொடங்கினர். பெரு முயற்சியின் பயனாக, 1973ல் உயர்தர கலைப்பிரிவு வகுப்பும் 33 மாணவ

ருடன் 1976ல் உயர்தர விஞ்ஞான வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டபின்னர் இக் குறைபாடு நீங்கிவிட்டதென்றே கூறலாம். இது இவ்வாறிருக்க, 1972ல் கல்வியமைச்சினுல் ஆரம்பிக்கப்பட்ட புதிய கல்வித்திட்டத்திற்கமைய ஆரம்ப வகுப்புக்களின் கல்வி முறையிலும், தொழில் முன்னிலைக் கல்வி ஒழுங்குகளிலும் பெரும் வெற்றிகண்டு உள்ளது இவ் வித்தியாலயம். இக் கிராமச் சூழலையும் மக்களின் தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள எச். என். சி. இ. மாணவரின் செயற்றிட்டங்கள் ஊர் மக்களின் ஆசியையும் ஒத்துழைப்பையும் பெற்றுள்ளன. விளையாட்டுத்துறையிலும் ஏனைய புறக்கிருத்தியங்களிலும் பாடசாலை அன்றுமுதல் அக்கறைகொண்டு வந்ததுடன் பல சந்தர்ப்பங்களில் எம் மாணவர்கள் தமது பல்வேறு திறமைகளை வெளிக்காட்டும் வாய்ப்புக்களையும் பெற்றுள்ளனர். அனைவரின் முயற்சிகளும் சங்கமிக்கும் இவ்வேளையில், எமது கல்விக் கூடத்தின் வளர்ச்சியிற் கண்ணும் கருத்துமாக, எம்மவரில் ஒருவராகி நின்று அயராது உழைக்கும் எமது அதிபரின் இனிய சுபாவமும் உயர்ந்த ஆற்றலும் எமது கல்வி நிறுவனத்தை மேன்மேலும் முன்னேற்றப்பாதையில் இட்டுச் செல்லுமென்பதில் ஐயமில்லை.

### வித்தியாலயப் பணியிலே எம் முன்னோர்

'சுவரின்றிச் சித்திரம் வரைதலும் இயலுமோ?'

அண்மைக் காலத்தில் எம் மக்கள் இடையே ஏற்பட்ட தீவிர உற்சாகம், முயற்சி என்பவை காரணமாக எமது வித்தியாலயத்தில் எம் கண்முன்னே ஏற்பட்ட பல்வேறு முன்னேற்றங்களை நாமறிவோம். ஆயினும், இக் கல்லூரியைத் தாபித்தும், அதனைக் கட்டிக் காத்துப் பேணி வளர்த்தும் அடுத்த தலைமுறையிடம் ஒப்படைத்த எம் பெரியோர்களிற் பலர் இறைபதமடைந்துவிட்டனர் எனினும் அவர்களனைவரையும், அவர்களின் சேவைகளையும் இவ்வேளையில் நினைவுகூர்தல் எம் கடனன்றோ? சைவத் தமிழ்ப் பிள்ளைகளுக்கெனத் தனியான ஒரு பாடசாலை அமைக்கப்படவேண்டிய அவசியத்தை உணர்ந்த எம்மூர்ப் பெரியார்கள் பலர் இது விடயமாகத் தனித்தும் ஒருமித்தும் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டனர். உண்மையில் இஃது விவசாயிகள், ஆசிரியர்கள் ஆகியோர் கொண்ட ஓர் புரட்சிகர இயக்கமாகத் தொழிற்பட்டதெனலாம். காலஞ்சென்ற திருவாளர்கள் ஆ. வேலுப்பிள்ளை, ஆ. கந்தையா, வீ. கணபதிப்பிள்ளை இன்றும் எம் மத்தியில் பொலிவுடன் விளங்கும் பண்டிதர் சு. இராமசாமி, இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. சு. முருகுப்பிள்ளை ஆகியோர் ஆசிரியத் தொழிலில் உள்ளன்புடன் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதே இவ்வியக்கத்தின் முன்னணியில் நின்றனர்.

பாடசாலைக்கென ஒரு நிலமோ, கட்டடமோ இல்லாது தவித்தபோது, தற்காலிகமாகப் பயன்படுத்துவதற்கெனத் தமது இருப்பிடத்தின் ஒரு பகுதியை உவந்தளித்த திரு. வேலாயுதர் சுப்பர் அவர்களின் தயாள சிந்தனையையோ பொருள்வளம் அதிகம் இல்லாது இருந்தபோதும் கட்டடம் அமைப்பதற்கு வேண்டிய நிலத்தை உபயமளித்த உபகாரிகள் திரு. வேலுப்பிள்ளை கைலாயர், திரு. தம்பையா முருகுப்பிள்ளை (சித்தர்) போன்றோரின் உத்தம குணத்தையோ நாம் மறப்பதற்கில்லை. பாடசாலை வளர்ச்சியடைந்து செல்கையில் ஏற்பட்ட இடவசதியின்மையைத் தணிக்கும் வகையில் பிற்காலத்தில் காணி நன்கொடையளித்த திருவாளர்கள் இ. மு. கந்தையா, ஆ. கந்தையா, வே. கனகசபை, வே. கந்தையா, திருமதி குழந்தையார் வீரசிங்கம் மற்றும் ஏனையோரின் சீரிய பண்பும் எம் உள்ளத்தில் என்றும் நிலைத்து நிற்கும். மிக அண்மையில், விவசாயக் கல்விக்கென அரசு தனியாரின் காணியைச் சுவீகரித்துக் கொடுத்த வேளையில் சுவீகரிப்புக்கு ஒத்துழைத்த நில உரிமையாளர்களாகிய திரு. க. சிதம்பரப்பிள்ளை, திரு. இ. செ. சின்னத்தம்பி ஆகியோரின் சேவைகளும் மறத்தற்கரியன.

பாடசாலை நடாத்த ஒரு கட்டடம் அமைக்கும் மாபெரும் பொறுப்பு ஏற்பட்ட

போது, ஊரவர்கள் அனைவரும் பிரதான மாக விவசாயிகள் இவ்வரிய பணியைத் தாமாக ஏற்றுக்கொண்டு கருமமாற்றி னர். பொருள்வளமுள்ளோர் பொருட் களை வாரி வழங்கினர். ஏனையோர் சரீர சேவையால் தம் பங்கைச் செலுத்தினர். தூர இடங்களிலிருந்து கட்டடத்திற்கு அவசியமான பொருட்களை மாட்டு வண்டிகள் மூலம் கொண்டுவந்து சேர்த் தனர். மார்பளவு தண்ணீரில் கடலினுட் சென்று இடித்தெடுத்த பெருங் கற்களை வெகு சிரமத்துடன் கொண்டுவந்து சேர்த் தனர். பாடசாலை வேலிக்குத் தேவையான மரங்களை ஒன்று ஒன்றரை மைல் தொலைவிலிருந்து இரவிரவாகச் சுமந்து வந்து குவித்தனர். கட்டடத்திற்குத் தேவையான பனைமரங்கள் ஆகிய யாவும் விவசாயிகளினாலேயே உவந்தளிக்கப் பட்டன. பகலில் தமது தோட்டத்தில் வெயிலில் நின்று வேலைசெய்த களைப்பை யும் பொருட்படுத்தாது இரவில் பாட சாலைக் கட்டடவேலைகளைக் கவனித்தனர். கட்டடத்திற்குத் தேவையான ஓடுகளை எமது அயலூர் தொண்டைமானாறு வாசி யான காலஞ்சென்ற திரு. எஸ். வீரகத்திப் பிள்ளை அவர்கள் அன்பளிப்புச் செய்தமை யால், அக்காலத்தில் இப் பகுதியில் ஓட்டினால் வேயப்பட்ட கட்டடத்துள் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ்ப் பாடசாலையாக இது விளங்கியதென எம் முதியோர்கள் இன்றும் பெருமையுடன் கூறுகின்றனர்.

காலஞ்சென்ற திரு. நாகப்பர் வேலுப் பிள்ளை அவர்களால் அடிக்கல் நாட்டப் பட்ட இக் கட்டடத்திற்குத் தளராது சரீர உதவி நல்கிய விவசாயப் பெரு மக்களுள் முன்னணியில் நின்றோர் காலஞ் சென்ற திருவாளர்கள் வல்லிபுரம் வைரமுத்து, வேலுப்பிள்ளை கந்தையா, வேலுப்பிள்ளை சின்னத்தம்பி, இன்றும் எம் மத்தியில் வாழும் திரு. சங்கரப்பிள்ளை கந்தையா, திரு. இளையதம்பி வேலுப் பிள்ளை ஆகியோர் ஆவர். கல்வி கற்கச் செல்லும் சிறுர்கள் தாகத்தால் தளர் வடையக்கூடாது என்பதற்காகக் குடிநீர்க் கிணறு ஒன்றை ஆக்கிக்கொடுத்த பெருமை காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை கந்தர் (சோமர்) அவர்களைச் சாரும். வெயிலின் கொடுமையைச் சமப்படுத்த நிழல்மரம் வேண்டுமேயென நிழல்வாகைகளையும் அரசுகளையும் திரு. வல்லியப்பர் சின்னையா அவர்களும் வேப்பமரங்களை திரு. சின்னையா பெரியதம்பி அவர்களும் வளர்த்துவிட்டபோது நிழலுடன் கூட அழகும் சேரட்டுமேயென இரு மலைவேம்பு களை நிலைநிறுத்தினர் முன்னாள் முகாமை யாளர் திரு. சு. இராசரத்தினம் அவர்கள். ஆண்டுகள் ஐம்பது கடந்துவிட்ட காரணத் தால், பாடசாலையை உருவாக்கி வளர்த் தெடுத்த உத்தமர்கள் பலரின் உருவங் களும் பெயர்களும் இன்று ஞாபகத்திரை யில் மறைந்து தோன்றினும் அவர்களின் அளப்பரிய சேவைகள் என்றும் நிலைத்து நிற்கும். காலஞ்சென்ற ஆச்சிப்பிள்ளை இளையதம்பி அவர்களின் ஞாபகார்த்த நன் கொடையும், திருவாளர்கள் நா. மாணிக்க இடைக்காடர், வே. நமசிவாயம், சி. வே. சபாபதி, விஸ்வமடு படித்த வாலிபர் திட்டத்திலுள்ள எமதூர் இளைஞர்கள் போன்றோர், ஏனைய எம்மூர் மக்களுடன் ஒத்தாசையாகப் பாடசாலைக்கு அளித்து வரும் சேவைகளும் நிதியுதவிகளும் எம் முன்னோர் காட்டிய சமூகத்தொண்டின் வழியே நாமும் செல்கின்றோமென்பதனைச் சுட்டிக்காட்டுகின்றன.

### வித்தியாலயப் பணியிலே பிற நிறுவனங்கள்:

இப் பாடசாலையைப் பொறுப்பேற்று அதன் வளர்ச்சியில் அக்கறை காட்டிவந்த சைவ வித்தியாவிருத்திச் சங்கம், அரசு பாடசாலையைச் சுவீகரிக்கும்வரை தொடர்ந்து நிர்வாகப் பொறுப்பைத் திறம்பட ஏற்று நடாத்தியது. பாடசாலை ஆரம்பிக்கப்பட்டபோது தளபாடங்களைக் கொடுத்தும் சிறந்த அதிபர்களையும் ஆசிரியர்களையும் நியமித்தும், பின்னர் தேவையேற்பட்டபோதெல்லாம் மற்றும் அத்தியாவசிய வசதிகளையும் செய்து கொடுத்தும் சேவையாற்றிய இச் சங்கத் தின் புகழ் என்றென்றும் மங்காது.

இப் பாடசாலையை ஓர் உதவி நன் கொடைப் பாடசாலையாக வரையறுத்த

தன் மூலமாகக் கல்வித் திணைக்களம் இப் பாடசாலையின் வளர்ச்சிக்கு வேண்டிய சகல உதவிகளையும் நெடுங்காலமாக அளித்துவந்தது. 1961ல் இப் பாடசாலையை நிர்வகிக்கும் ஏகபோக உரிமை கல்வித் திணைக்களத்திற்கு மாற்றப்பட்ட பின்னர், தகுந்த அதிபர்கள், ஆசிரியர்களைத் தந்தும், வேண்டிய உபகரணங்கள், நூல்கள் ஆகியவற்றை உதவியும் இப் பாடசாலை மேலும் வளர்ச்சியுறக் கல்வித் திணைக்களம் துணை நின்றது. பாடசாலையை மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தியமை பாடசாலையின் வரலாற்றின் ஒரு முக்கிய அம்சமாகும். கல்வி வசதிகளை மேலும் விரிவுபடுத்தி இடைக்காடு, தம்பாலை, வளலாய் ஆகிய கிராமங்களுக்குப் பொதுவாக அமைந்துள்ள இப் பாடசாலையின் கல்வி நிலையை உயர்த்த உறுதுணையாக நிற்கும் கல்வி அமைச்சிற்கும், வட பிராந்தியக் கல்விப் பணிப்பாளருக்கும், வேண்டும்போதெல்லாம் மறக்காது எமக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்கும் சகல கல்வி இலாகா அலுவலர்களுக்கும் இப் பாடசாலை என்றும் கடமைப்பட்டு உள்ளது.

இப் பாடசாலையின் வரலாற்றை நுணுகி ஆராயும் வேளையில், பாடசாலைக்கும் சமூகத்திற்கும் இடையிலான உறவு என்றும் சிறந்தநிலையில் இருந்தமையைக் காணமுடிகின்றது. ஆரம்பகாலத்தில் பெற்றார்-ஆசிரியர் சங்கம் என்ற பெயரில் ஓர் இயக்கம் இருக்கவில்லையே தவிர, பெற்றோரும் ஆசிரியரும் ஒன்றிணைந்து பாடசாலை வளர்ச்சியினை ஏற்படுத்தினர். எனினும் 1959ம் ஆண்டு சட்டதிட்டங்களுக்கமைய ஆரம்பிக்கப்பட்ட பெ.ஆ.ச. தனது கடமைகளைச் சிறப்புற ஒப்பேற்றி வருகிறது.

எமது பாடசாலையின் வெள்ளி விழா நினைவுடன் திரு. க. விசுவலிங்கம் அவர்களின் விடாமுயற்சியினால் 1951ல் ஆரம்பிக்கப்பட்ட பழைய மாணவர் சங்கம், அதன் பெரும்பான்மை அங்கத்தவர்களாகிய இளைஞர்களுக்கேற்ற விறுவிறுப்புடன் அன்றே செயற்பட ஆரம்பித்தது. காலத்திற்குக் காலம் இளைய சந்ததியினரைத் தனது அங்கத்துவப் பட்டியலில் இணைத்துக்கொள்ளும் காரணத்தினால், இச் சங்கம் தொடர்ந்து விறுவிறுப்புடன் இயங்கி இன்று தனது வெள்ளிவிழாவைக் கொண்டாடும் பேற்றினைப் பெற்றுள்ளது. எனினும் கடந்த பத்து ஆண்டுகளாக இச் சங்கம் ஆற்றிய பணி அளவிடற்கரிது. பாடசாலையின் எந்தவோர் ஆக்கப் பணியிலும் பழைய மாணவர் சங்கத்தின் செல்வாக்கைக் காணமுடிகின்றதென்றால் அது மிகையாகாது. பழைய மாணவர் பணி தொடர்ந்து பாடசாலையை வளர்க்க உதவுமென்பது திண்ணம்.

மேலே குறிப்பிட்டவற்றினைவிட, இடைக்காடு சனசமூக நிலையம், இடைக்காடு கலைமகள் சனசமூக நிலையம், இடைக்காடு ஐக்கிய விளையாட்டுக்கழகம் என்பனவும் பாடசாலைப் பணியிலே அணியாக நிற்கின்றன. நீர் விநியோகத்திற்கென உயர்ந்துநிற்குமோர் நீர்த்தொட்டி, பாடசாலை விளையாட்டுத்துறையை அலங்கரிக்கவெனக் கேடயங்களும் வெற்றிக்கிண்ணங்களும், கலை நிகழ்ச்சிகளின் காட்சிக்கெனத் திறந்தவெளியரங்கு, மக்கள் மனத்தினின்றும் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்ட இளைஞர்களின் சிரமதானப் பணிகள் என்பன எமதூரின் பல்வேறு நிறுவனங்கள் இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக ஆற்றிய சேவைகளிற் சிலவாகும். இவை தவிர மறைமுகமாகப் பாடசாலையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவிய நிறுவனங்களும் இயக்கங்களும் பல உள. இப் பாடசாலையின் சேவையைப் பெறும் இடைக்காடு, தம்பாலை, வளலாய் மற்றும் ஏனைய அயற் கிராமங்களிலுள்ள பல்வேறு தாபனங்களும் முன்னின்று உழைத்து இக் கல்லூரியை மேன்மேலும் வளர்ச்சியுறச் செய்யும் என்பது எமது நம்பிக்கை.

இவ்வாறாகக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக மக்களின் பொதுச்சேவையை முக்கிய ஆதாரமாகக் கொண்டு முன்னேறிக்கொண்டிருக்கும் எமது வித்தியாலயத்திற் கல்விபயின்றோர் பலர் இத்

தீவிலும், வெளிநாடுகளிலும் உயர் பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருப்பது இக் கல்லூரிக்கு மேலும் புகழைத் தேடிக் கொடுக்கின்றது. பாடசாலையின் ஆரம்ப காலத்தில் எவ்வாறு சில பெரியார்களும் விவசாயிகளும் அதன் வளர்ச்சியில் முக்கிய பங்கு கொண்டனரோ அவ்வாறே, புகழை விரும்பாது சேவையிலீடுபடும் அன்பர்கள் பலரும் தளராது பொருளுதவி, சரீர உதவி நல்கக்கூடிய நிலையில் இன்று நம் மத்தியில் இருப்பதால், எமது பாடசாலை மேன்மேலும் வீறுநடையுடன் முன்னேறிக்கொண்டே செல்லுமென்பது உறுதி. 1973ம் ஆண்டு இக் கல்லூரியின் விஞ்ஞானகூடத்திற்கான அடிக்கல் நாட்டிய கல்விச் செயலாளர் கலாநிதி பிரேமதாச உடகம அவர்கள், ''பாடசாலையில் சமூகத்தின் ஈடுபாட்டிற்கு இடைக்காடு மகாவித்தியாலயம் ஓர் உதாரணம்'' என அன்று தெரிவித்த கருத்தினுள் புதைந்திருக்கின்றது எமது வித்தியாலய முன்னேற்றத்தின் இரகசியம்.

வாழ்க மக்கள் பணி!

வளர்க எமது வித்தியாலயம்!!




வீடு சிரிக்க ஓர் ஏடு



சிரித்திரன்

# எங்கள் கல்விச்சாலையின் தலைவர்கள்

## பண்டிதர் சு. இராமசாமி:

இவர் எமது கல்விச்சாலையின் ஆரம்ப காலத் தலைமையாசிரியராகக் கடமை ஆற்றிய பெருமைக்குரியவர்; இவர் சைவத்தமிழ் மரபைப் போற்றிக் காப்பாற்றி வருபவர்; சைவமுந் தமிழும் கண்ணெனத் தகும் என்ற கருத்துக் கொண்டவர். எமது ஊரிற் சைவப் பாடசாலையொன்ற அமைக்கும் நோக்குடன் 1925 சித்திரை மாதம் கூட்டப்பட்ட மாபெரும் கூட்டத்திற்கு, சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவரும், பெரும் புகழ்வாய்ந்த தேசியத் தலைவருமாக விளங்கிய சேர் பொன். இராமநாதன் அவர்கள் வருகைதந்தபோது வரவேற்பு உரை நிகழ்த்தும் பெரும் பாக்கியம் பண்டிதர் சு. இராமசாமி அவர்களுக்குக் கிட்டியது. ஏறக்குறைய முப்பது பிள்ளைகளுடன் ஆரம்பிக்கப்பட்ட திண்ணைப் பாடசாலையின் முதல் தலைமை ஆசானுகக் கடமையேற்ற இவர் பாடசாலையின் வளர்ச்சிக்காக அல்லும் பகலும் பாடுபட்டார். இவரின் காலத்தில் பாடசாலையில் வெள்ளிக்கிழமைகளில் மாலை நேரங்களில் பசனையும் பெரியபுராணப் படிப்பும் ஒழுங்காக நடைபெற்றன; நவராத்திரி விழாக்களும் குருபூசைகளும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டன. இவரின் காலத்தில் பாடசாலை பதியப்பட்டுப் பரீட்சைகள் நடந்தன. 1929ம் ஆண்டு தை மாதம் இவர் ஆசிரியர் பயிற்சிப் பாடசாலையில் போதனுசிரியராகக் கடமை ஏற்ருர். இவர் காலத்தில் பேரார்வத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கல்விப் பணி தொடர்ந்து நற்பயனளித்து வருகின்றது.

## திரு. சு. முருகுப்பிள்ளை:

தண்ணளியும் சால்பும், தகைமையுந் தண்டமிழார்வமும் மிக்கோங்க, எண்ணரிய இனியகுணம் எல்லாம் படைத்தவராய், நல்ல குணக்குன்ருய் நாம் போற்ற வாழ்ந்துவரும் தொல்புகழ்சேர் நல் ஆசான் திரு. சு. முருகுப்பிள்ளை அவர்கள் 1929ம் ஆண்டு தை மாதம் எமது கல்விச்சாலையின் தலைமை ஆசானுய்க் கடமை ஏற்றனர். இவரின் காலத்தில் பாடசாலையின் கல்வி வளர்ச்சியில் துரித முன்னேற்றம் ஏற்பட்டதன் பயனுக இங்கு ஆசிரிய பிரவேச வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது; பாடசாலையின் மாணவர் தொகை இரட்டித்தது; சுகாதார வசதிகள் ஏற்படுத்தப்பட்டன; கரப்பந்துப் பயிற்சியும் உடற் பயிற்சி வகுப்புக்களும் ஒழுங்காக நடாத்தப்பட்டன. இவரின் காலத்தில் நூல் நிலையம் ஒன்றை அமைக்க வழிவகுக்கும் நோக்கத்துடன் நூல்களைச் சேகரித்து வைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; மாணவர் தேர்ச்சிச் சங்கம் சிறந்த முறையில் இயங்கியது. உயர்தரக் கல்விக்கேற்ற வளர்ச்சியைத் தொடர்ந்து பாதுகாத்துவந்த பெருமை திரு. சு. முருகுப்பிள்ளை அவர்களுக்கு உரியதாகும்.

## திரு. V. செல்வநாயகம், M. A.:

இவர் எமது கல்விச்சாலையின் அதிபராகக் கடமையேற்ற காலம் எமது கல்விச்சாலையின் வரலாற்றில் மிகவும் முக்கியமானதொரு கட்டமாகும். இவர் அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் கல்விச்சாலைக்கு அண்மையில் தங்கி, மக்களுடன் அந்நியோந்நியமாகப் பழகி, மாணவர்களின் கல்வி வளர்ச்சியிற் கண்ணுங் கருத்துமாய் இருந்து மிகுந்த ஆர்வத்துடன் அறிவொளி பரப்பும் அரிய தொண்டில் ஈடுபட்டுழைத்தார். எமதூர் மக்களின் கருத்துக்களைத் தழுவி, விழுமிய கல்வி நிலையை வித்தியாலயத்தில் ஏற்படுத்துவதற்கு விடாதுழைத்த வித்தகச் செம்மலாக இவர் விளங்கினர். இவரின் காலத்தில் ஏற்றி வைக்கப்பட்ட வித்தியாலய மணி எமதூரில் இன்றும், என்றென்

றும் ஒலித்துக்கொண்டிருக்கும் ஞான மணியாக விளங்கி, நாம் எமது இதயக் கோயில்களில் அவரின் அரிய கல்விச் சேவையைச் சந்ததம் சிந்தித்து வந்திக்கும் வண்ணம் அவரின் அன்பொலியாகவும், அறிவொலியாகவும், ''கணீர் கணீர்'' என்று, காதுகளில் இனிமை சேர்த்துக் ''கடமைசெய்ய வாரீர் வாரீர்'' என்று அழைக்கின்றது. இவரின் காலத்தில் ஏழைப் பிள்ளைகளுக்கு இலவச மதிய போசனம் அளிக்க வசதி செய்யப்பட்டது; எம் கல்விச்சாலை இரும்பினாலான படலை ஒன்றைப் பெற்றுப் பொலிவுற்றதும் இவர்காலத்திலாகும். இவர் பின்னர் எம் நாட்டின் சர்வகலாசாலையில் தமிழ்த் துறைப் பேராசிரியராகப் பெரும் பணி புரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**திரு. M. A. தங்கராசா, திரு. V. வன்னிய சிங்கம், திரு. S. விஜயரத்தினம், திரு. K. காராளசிங்கம்** ஆகியோர், 1937ல் திரு. V. செல்வநாயகம் அவர்கள் எமது கல்விச் சாலையிலிருந்து மாற்றலாகிச் சென்ற பின்னர், எமது பாடசாலையின் அதிபர் களாகப் பதவியேற்றுச் சிறப்புடன் கடமை ஆற்றினர். எனினும், இவர்கள் குறுகிய காலமே இங்கு சேவையாற்றிய காரணத் தினால் இவர்களின் தொடர்ந்த சேவை யின் முழுப்பயனையுந் துய்க்கும் நல் வாய்ப்பு நம் மாணவர்க்குக் கிட்டவில்லை. இவர்களின் காலத்தில் எமது கல்விச்சாலை பரவலாகப் பல துறைகளிலும் முன்னேறி யது. இக்காலப் பகுதியில் ஆங்கில மொழி மூலம் நடாத்தப்பட்ட எட்டாம் வகுப்புப் பரீட்சைக்கு 1940ல் முதன்முறையாக எம் கல்விச்சாலையிலிருந்து மாணவர் தோற்றினர். திரு. K. காராளசிங்கம் அவர்களின் காலத்தில் ஆங்கில சிரேட்ட தராதரப்பத்திர வகுப்பு எம் கல்விச் சாலையில் ஆரம்பிக்கப்பட்டது.

**திரு R. H. ஐயர், B A.:**

இவர் பத்து ஆண்டுகள்வரை எம் கல்விச்சாலையின் அதிபராக அரும்பணி புரிந்தார்; கல்விச்சாலையிலேயே தங்கி இருந்து அயராது உழைத்து அன்றைய மாணவ சமுதாயத்தினர்க்கு உயர்ச்சிக் கேற்ற அரிய வாய்ப்புக்களை ஆக்கிக் கொடுத்த இவரின் இணையற்ற சேவையை எம்மூர் மக்கள் என்றும் மறவாது போற்றுவர். இவரின் அயரா உழைப்பு, அன்பு, ஆற்றல், அறிவு, ஒப்புரவொழுகும் ஓர்ப்பு, செந்தண்மை பூண்டொழுகும் அந்தணர் என்கின்ற உயர்ந்தநிலை ஆதியன எம்மூர் மக்களின் இதயங்களோடு இவரின் இனிய பசுமை நிறைந்த நினைவு அலைகளை என்றென்றும் பிரிக்கமுடியாத வகையில் பின்னிப் பிணைத்துவிட்டன. எமது மாணவரின் பொதுப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியானபோதெல்லாம் கல்விச்சாலையின் வாயிலின்கண் வெற்றிக் கொடிகள் நாட்டி, எமது மாணவர்களின் சிறந்த சாதனைகளை எடுத்துக்காட்டி, கல்விச்சாலையின் வழிச்செல்லும் பல்லோ ரையும் அழைத்துத் தடுத்து நிறுத்தி வைத்து, மாணவரின் நல்ல பெறுபேறு களைப்பற்றிச் சொல்லிச் சொல்லி மகிழும் வல்லமை வாய்ந்த அதிபர் திரு. R. H. ஐயர் அவர்களின் ''கொள்ளை இன்பங் குலவும்'' கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளத்தின் உயர்வை உள்ளபடி உரைக்க வல்லவர் உளரோ?

**திரு. கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை B A.:**

இவர் ஐந்து ஆண்டுகள்வரை எமது கல்விச்சாலையின் அதிபராகக் கடமை ஆற்றினர். இவர் சிறந்த ஆங்கில ஆசானாக விளங்கி ஆங்கிலக் கல்வியில் மாணவர் அதிக முன்னேற்றம் அடையும்வண்ணம் அறிவுப்பணி ஆற்றினர். கருணை நிறைந்த உள்ளம் படைத்த இவர் கல்விச்சாலை யின் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் அதிக கவனஞ் செலுத்தி னர். இவரின் காலத்திற் பொதுப் பரீட்சைகளில் மாணவர் சிறந்த பெறு பேறுகளைப் பெற்றனர். மாணவர் மன்றங் கள் செவ்வனே இயங்கவேண்டிய வழி வகைகளை இவர் வகுத்துக் கொடுத்தார். ஈழமாதாவின் தவப்புலவர்களில் ஒருவ ராகச் சிறந்து விளங்கிய சுன்னை, அ. குமாரசுவாமிப்புலவரின் புதல்வராய் அவ தரித்த இவர் தமிழிலும் ஆங்கிலத்திலும்

சிறந்த பாண்டித்தியம் பெற்று விளங்குகின்றார். கவிதா சத்தியின் அருளை நிரம்பப் பெற்ற இவர் வழிவழி வந்த தமது விழுமிய புலமை ஆற்றலைப் போற்றி வளர்த்துத் தண்டமிழ்த் தொண்டைத் தலையாய தொண்டாக ஆற்றிவருகின்றார்.

### திரு. வே. கணபதிப்பிள்ளை :

பதின்மூன்று ஆண்டுகள் வரை தொடர்ச்சியாக எம் கல்விச்சாலையில் அரும்பெருஞ் சேவைசெய்த திரு. வே. கணபதிப்பிள்ளை அவர்கள் அறிவு, ஆற்றல், அநுபவம் என்பன நிரம்பப் பெற்றவர். எம் கல்விச்சாலையின் அதிபராக நியமனம் பெறுவதற்கு முன்னர் இவர் திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலையில் புகழ்வாய்ந்த விரிவுரையாளராகக் கடமையாற்றினார். ஹாசியப் பொக்கிஷமாக விளங்கிய இவர் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, கலாநிதி K. சிவப்பிரகாசம் போன்ற அறிஞர்களோடு நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றார். இவருடைய காலத்தில் எமது கல்விச்சாலை பலதுறைகளிலும் துரித முன்னேற்றம் அடைந்தது. பழைய மாணவர் சங்கம் அமைத்துக் கொடுத்த 'சியவச' நூலகம் இவர் காலத்தில் திறந்துவைக்கப்பட்டது. 1932ம் ஆண்டளவில் எமது கல்விச்சாலையில் நூறு நூல்கள்வரை நூலகத்திற்கெனச் சேகரிக்கப்பட்டிருந்த ஆரம்ப முயற்சிகளுக்குச் சிகரம் வைத்தாற்போல் விளங்கியது இந்நூலகத் திறப்பு விழா. நூற்கல்வியோடு, உடற்கல்வி வளர்ச்சிக்கும் போதிய வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகப் பழைய மாணவர் சங்கத்தினர், இரவு பகலென்றோ, வெயில் மழையென்றோ பாராது, தமது நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த, சிரமதானம் என்னுந் தொண்டின்மூலம், பாம்பும் புக அஞ்சும் பற்றையாய்க் கிடந்த இடத்தை விளையாட்டு மைதானமாக மாற்றும் தமது மாண்புமிகு சேவையை இவர் காலத்தில் ஆரம்பித்தனர். இவர் காலத்தில் லிகிதர் ஒருவரின் சேவையை எம் கல்விச்சாலை முதன்முறையாகப் பெற்றது. இவரின் காலத்தில் மலசலகூடம் ஒன்று பழைய மாணவர் சங்கத்தினரால் அமைக்கப்பட்டது. எளிமையை விரும்பிய இவர் உயர் இலட்சியங்களின் இருப்பிடமாகத் திகழ்ந்தார். அளப்பரிய சேவை செய்த இப் பெரியார் வாழ்வாங்கு வாழ்ந்து, இன்று நம் உள்ளங்களிலெல்லாம் வானுறையும் தெய்வமாக வீற்றிருக்கின்றார்.

### திரு. க. குணரத்தினம், B. Sc. Dip-in-Ed. (Cey.)

எமது ஊரினதும், கல்விச்சாலையினதும் நல்வாழ்வில் கண்ணுங் கருத்துமாய் இருந்த கடமைவீரர் திரு. க. குணரத்தினம் அவர்கள் ஆசிரியர், பழைய மாணவர், பெற்றோர் ஆகிய அனைவரதும் இதய பூர்வமான ஒத்துழைப்பை இயன்றளவு பெற்று, இக்காலக் கல்வி முறையின் அடிப்படைத் தத்துவங்களை நன்கு ஓர்ந்து, கல்விச்சாலையின் பன்முக வளர்ச்சிக்காக ஓயாது உழைத்த உத்தமராக ஊரவர்களின் உள்ளங்களில் எல்லாம் உறைகின்ற தனிச்சிறப்பைப் பெற்றவர். எமது கல்விச் சாலையின் பெற்றார் - ஆசிரியர் சங்கத்தினரதும், பழைய மாணவர் சங்கத்தினரதும் தந்நலங் கருதாச் சேவை பல்கிப் பெருக, அவர்களின் அயரா உழைப்பிற்குத் தளராது உரம் பாய்ச்சியவர் அதிபர் திரு. க குணரத்தினம் அவர்கள். கற்பாறைகள் செறிந்த இடம் காட்சிக்கினிய விளையாட்டு மைதானமாக மாறியது இவர் காலத்தில் ஆகும். பல ஆண்டுகளாகப் பயிற்றப்பட்ட கைப்பணி ஆசிரியர் இல்லாமல் தவித்த நம் கல்விச்சாலை இவரின் காலத்தில் பயிற்றப்பட்ட கைப்பணி ஆசிரியர் ஒருவரைப் பெற்றது. பெற்றார் ஆசிரிய சங்கத்தினரின் முயற்சியால் அமைக்கப்பட்ட தொழிற்கூடம் இவர் காலத்தில் திறக்கப்பட்டது. மாணவரின் செயல் திட்ட வேலைக்கு முன்னோடியாக விளங்கக்கூடிய முறையில் இவர் கோழிப்பண்ணை ஒன்றை ஆரம்பித்து, தொழில் முன்னிலைக் கல்வியில் மாணவர்க்கு மிகுந்த ஊக்கம் ஊட்டினார். விளையாட்டு மைதானத்தைச் சீர்செய்துதவிய பழைய மாணவர் சங்கத்தினர்

சிறந்த திறந்தவெளி அரங்கொன்றையும் இவர் காலத்தில் அமைத்துக் கொடுத்த னர். அறிவொளிகாலும் கல்விச்சாலைக்கு மின்னொளி வசதிகள் இவர் காலத்தில் கிடைத்தன. எமது கல்விச்சாலையில் உயர் கலை வகுப்புக்களை ஆரம்பித்து வைத்த பெருமை இவருக்கு உரியது. எமது கல் விச்சாலையின் நூல் நிலைய வளர்ச்சியிலும் பல்வேறு தொழில் முன்னிலைப் பாடங்க ளின் முன்னேற்றத்திலும் இவர் சோர் விலா ஊக்கங் காட்டினார். பெற்றார் ஆசிரிய சங்கத்தினரால் இவரின் காலத் தில் மூன்று வகுப்புக்களை நடாத்தக்கூடிய நீண்ட மண்டபம் ஒன்று 1973ல் பூர்த்தி யாக்கப்பட்டது. இவரின் காலத்தில் பெற்றார் - ஆசிரியர் சங்கத்தினர் உயர்தர வகுப்புக்கென அமைக்க முன்வந்த விஞ் ஞான கூடத்திற்கு மாண்புமிகு கலாநிதி பிரேமதாச உடகம அவர்களினால் அடிக் கல் நாட்டப்பட்டது. இனிய உளவாக இன்னாத கூறு இயல்பிற் சிறந்து விளங் கும் குணக்குன்றாகிய அதிபர் திரு. க. குணரத்தினம் அவர்கள், ஆசிரியர் நல் வாழ்வில் அதிக ஈடுபாடுடையவர். பொன் விழாக் கொண்டாடும் எம் கல்விச்சாலை யின் சரித்திரத்தில் தம் பெயரையும் புக ழையும் பொன்னெழுத்துக்களில் பொறித்த அதிபர்களில் இவர் ஒருவர் என்றால் அது மிகையாகாது.

**திரு. க. இராசரத்தினம், B. Sc. Dip-in-Ed. (Cey )**

எமது கல்விச்சாலையின் பன்முக வளர்ச் சிக்காக ஓயாது உழைத்த பெருமைக்குரிய அதிபர் திரு. க. இராசரத்தினம் அவர் களின் காலத்தில் பெற்றார் - ஆசிரியர் சங்கத்தினரின் தொடர்ந்த முயற்சியா லும், அயரா உழைப்பினாலும் உருவாக் கப்பட்ட விஞ்ஞானகூடம் பூர்த்தியாக்கப் பட்டது. இவரின் காலத்தில் எம் கல்விச் சாலையின் குடிநீர் விநியோக வசதியை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் இடைக் காடு சனசமூக நிலையத்தினர் தண்ணீர்த் தொட்டி ஒன்றை அமைத்து அன்பளிப்புச் செய்தனர். குறித்த சனசமூக நிலையத் தினரின் உதவியுடன் இவரின் காலத்தில் குழாய்மூலம் நீர் விநியோகம் செய்யும் முறை ஆரம்பிக்கப்பட்டது. மாணவர் பொறுப்புக்களை நிருவகிக்கப் பழகவேண் டும் என்ற நோக்கத்துடன், இவர் மாண வத் தலைவர் முறையினைச் சீரிய வழியில் இயங்கச்செய்தார். கல்லூரி நூலகத்தின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாய் இருந்து கடமையாற்றிய இவர், நூலகத் திற்கு அக்காலத்தில் பொறுப்பாய் இருந்த ஆசிரியைகளான திருமதி சி. சிவநேச பிள்ளை, திருமதி பு. சாந்தையினார் ஆகி யோரின் உதவியுடன் நூலகத்தைச் செவ் வனே நடாத்தத் தம்மாலியன்ற முயற்சி களை எல்லாம் மேற்கொண்டார்; இவர் மாணவர்க்கும் ஆசிரியர்க்கும் பயன்தரக் கூடிய பல ஆங்கில, தமிழ்ச் சஞ்சிகைகளை நூலகம் பெற ஆவனசெய்தார். சசெக்ஸ் சர்வகலாசாலையைச் சேர்ந்த திரு. பைரன் ரீ. மூக் என்பவரினாலும் அவரின் உதவி யாளர்களினாலும் கல்வி அமைச்சின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட தொழில் அமர்வு (Job Placement) ஆய்வுக் காகத் தெரிவுசெய்யப்பட்ட 12 கல்லூரி களில் எமது கல்லூரியும் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டது. இவரின் காலத்தில் ஆகும். இவரின் காலத்தில் எம் கல்விச் சாலையின் கல்வித்தரம் உயர்ந்து விளங் கியது என்பதற்கு என்றும் அழியாச் சான்றாக எம் நினைவில் நின்று நிலைப்பது பொன்விழாக் கொண்டாடும் இவ்வாண் டில் எம் கல்விச்சாலையில் ஆரம்பிக்கப் பட்ட விஞ்ஞான தே. உ. க. சா. வகுப் பாகும்!

**திரு. சி. வே. மகேசவேலு, M. A. Dip-in-Ed. (Cey.)**

இவரின் காலத்தில் எம் கல்விச்சாலை யில் விஞ்ஞான தே. உ. க. சா. வகுப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இரண்டு வகுப் பறைகளைக் கொண்ட மேல்மாடிக் கட்டி டம் ஒன்றை எம் கல்விச்சாலை பெற்றது இவர் காலத்தில் ஆகும். வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் இம் மேல்மாடிக் கட்டிடம் அமைக்கப்படுவதற்கு அனுமதி வழங்கி எமது கல்விச்சாலைக்குச் சிறந்த தொண்டாற்றியுள்ளார். சதா கல்லூரி

யின் வளர்ச்சியைப்பற்றிச் சிந்தித்துச் செயலாற்றும் அதிபர் திரு. சி. வே. மகேசவேலு அவர்கள் எமது மாணவரின் பலதிறப்பட்ட முன்னேற்றத்திலும் அதிக சிரத்தை கொண்டு உழைத்துவருகின்றார். கல்லூரிப் பொறுப்புக்களை ஆசிரியர்களின் தகைமை ஆர்வம், அநுபவம் என்பன வற்றிற்கேற்பப் பகிர்ந்தளித்தும், மாண வத் தலைவர் முறையைப் புடம்பண்ணி, அதற்குப் புத்துயிர் கொடுத்தும், பெற்றார், ஆசிரியர், பழையமாணவர் நலன் விரும் பிகள் ஆகியோரின் ஒத்துழைப்பை நம் கல்விச்சாலையின் எதிர்கால வளர்ச்சிக்கு அத்திவாரமாக மதித்தும், மாணவர்க்கு கல்வி, விளையாட்டுத்துறைபோன்ற துறை களில் தமது விடாமுயற்சியின் மூலம் ஊக்கம் காட்டியும், பொன்விழாக் கொண் டாடும் இவ்வாண்டிலிருந்து எமது கல்விச் சாலைக்கு ஒரு பொற்காலத்தை உரு வாக்குவதற்கு ஓயாமல் உழைக்கும் உத் தமராகக் கடமைவீரராக எம் மதிப்புக் குரிய அதிபர் திரு. சி. வே. மகேசவேலு அவர்கள் இன்று எம் மத்தியில் விளங்கு கின்றார். இவ்வாண்டு காகித உற்பத்தி ஒரு தொழில்முன்னிலைப் பாடமாக ஆரம் பிக்கப்பட்டுள்ளது. ஆங்கிலம், தமிழ், கணிதம், விஞ்ஞானம், சமூகக்கல்வி, பொதுஅறிவு போன்ற துறைகளில் மாண வரின் அறிவையும் ஆர்வத்தையும் பெருக் கும் நோக்கத்துடன் மாணவரிடையே பல போட்டிகளைத் தொடர்ந்து நடத்தும் செயல்வீரராக எமது அதிபர் விளங்கு கின்றார். எமது கல்விச்சாலைக்கு ஓர் இலச்சினையை அமைத்துக் கொடுக்க வேண்டிய அவசியம் கடந்த பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலவிவந் துள்ளது. உள்ளத்தாற் பொய்யாதொழு கும் வாய்மை, எமக்குத் திரிகரண சுத்தியாகிய தூய்மையை நல்க, அதன் காரணமாக 'உள்ளத்தனையது உயர்வு' என்று வள்ளுவன் மொழிந்த மேன்மையை நாம் பெறலாமாகையால், ''வாய்மை, தூய்மை, மேன்மை'' என்பன எமக்கு என்றும் கிட்டவேண்டுமென்ற பரந்த ஞான உணர்வின் அடிப்படையில் சிறந்த ஓர் இலச்சினையை உருவாக்கித் தந்த எமது அதிபர் அவர்கள் மேன்மையின் அழியாச் சின்னமாக விளங்குகின்றார்! எமது கல்விச்சாலை மேன்மேலும் மேன்மை அடைய இவ்விலச்சினை வழிவகுக்கவேண்டும் என்பது எமது இதயக் கோயில்களில் என்றென்றும் ஒலித்துக்கொண்டிருக்கும் இனிய பிரார்த் தனையாகும்!

— ஞானி

## என்றும் எண்!

குன்றுதொ ருட லானைக் குலவுசீ ரலைவா யானைத்
துன்றருட் பரங்குன் றானைப் பழமுதிர் சோலை யானைத்
தென்றரு பழனி யானைச் செய்யவே ரகத்தி ஞனை
என்றுமெண் படைவீ டாறு வென்றெழு பிறப்பு மெட்டா!

—புலவர்மணி ஆ. தில்லைநாதபிள்ளை

Donated by:
PROF. K. KAILASAPATHY

# இடைக்காடு மகா வித்தியாலயம் என்றென்றும் வாழியவே!

வளலாயூர், திரு. செ. சிவசம்பு, B. Sc.

கற்பார் செறிந்துமிகு வரட்சியுள்ள கிராமமதை
நற்பார் ஆக்கியதில் நல்விளைவு கண்டுயர்ந்து
கற்பார் மாதருடன் களிபொங்க வாழ்வுகண்டு
நிற்போர் நற்றெண்டால் நிறுவினரோர் கல்விக்கூடம்.

விடையேறும் சிவனாரின் சைவநெறி போற்றுவதைத்
தடைபோடும் நோக்குடன் தாவிவந்த கிறீத்தவத்தை
மடைபோட்டு மடக்கிவிட்டுச் சைவநெறி காத்திடவே
இடைக்காட்டில் எழுந்தது சைவத்தமிழ்க் கல்விக்கூடம்.

நீறகலா நெற்றியுடன் நெறியகலா நெஞ்சுடையான்
ஆறுதலே யில்லாத அருந்தொண்டன் அவனிபுகழ்
ஆறுமுகம் வேலுப்பிள்ளை அருந்தவத்தால் முயன்றுபெற்ற
பேறாகப் பிறந்ததிந்தப் பெருமையுறு பள்ளிக்கூடம்.

பண்டிதர் இராமசாமி பண்புள்ள முருகுப்பிள்ளை
தொண்டுசெய் துருவாக்கத் தண்டமிழான் செல்வநாயகம்
கண்மணி யாய்வளர்த்து எங்கள்ஐயரிடம் ஒப்படைக்கத்
தண்ணளியான் தொண்டாலே தழைத்து வளர்ந்ததுவே.

வான்புகழை ஈட்டியவன் வடநாடு சென்றபின்பு
தேன்தமிழ்ப் புலவர்மகன் முத்துக்குமா ரசுவாமி
மேன்மையுடன் பணியாற்றிக் கணபதிப் பிள்ளையிடம்
தான்வழங்க அவர்பணியால் மாண்புற்று மிளிர்ந்ததுவே.

பல்துறைக் கல்விகற்கும் பாங்கினை உருவாக்கிச்
சொல்லரும் தொண்டுசெய்த குறுநகைக் குணத்தின்பின்பு
வல்லவன் இராசரத்தினம் வளமுறச் சேவைசெய்து
பல்புகழ் பெற்றகல்விக் கூடமாய் வளரச்செய்தான்.

தொண்டினைத் தொடர்ந்துசெய்து தகவுறு சமூகந்தன்னைக்
கண்டிடக் கடிதுழைக்கும் கடமையின் காவலனும்
கண்ணியம் மிக்குயர்ந்த மகேசவேலுவுட னாசிரியர்
புண்ணியத் தொண்டினாலே பொலிகின்ற கல்விக்கூடம்.

பட்டமுடன் பதவிதந்து பகட்டான வாழ்வுகாட்டித்
திட்டமிட்டு மதம்மாற்றி தொன்மைநெறி தொலைக்கவந்தோர்
திட்டத்தை உடைத்து நாட்டில் சைவநெறி
கட்டின்றி வளரச்செய்த கல்விக்கூடமே வாழ்கவாழ்க.

ஓங்கிடும் பெருமைமிக்க உயர்தமிழ்ப் பண்புவிட்டு
ஆங்கிலப் பண்புபோற்றி அவரைப்போல் வாழவெண்ணி
ஏங்கிய தமிழர்க்கெல்லாம் நல்லறிவுதனைப் புகட்டிப்
பாங்கிலுயர் சேவைசெய்த பள்ளிக்கூடமே வாழ்கவாழ்க.

பொன்விழாக் காணுகின்ற புகழ்மிகு கல்விக்கூடம்
தன்னிகரில் சேவையாலே தரணியில் முதன்மையுற்று
நன்னெறி தனிலொழுகும் நற்குண மாந்தர்தம்மை
இந்நிலத்தி லுருவாக்கி என்றென்றும் வாழியவே.

## அன்னையின் கையிலே

★ **அன்னையின் இதயம் பிள்ளையின் அறிவகம்.**

— (B)பீச்சர்.

★ **சமுதாயத்தின் எதிர்காலம் அன்னையின் கையிலே.**

— நெப்போலியன்.

★ **தொட்டிலை ஆட்டும் கை தொல்லுலகை ஆளும் கை.**

— ரேஸ்.

திரட்டியவர்: சி. நல்லதம்பி

# அணையா ஒளிகள்

ஒரு நாட்டின் பாரம்பரியமும் பண்பாடும் பரந்து பரவிப் படர்ந்து ஓங்க உறுதுணையாக விளங்குவது அந்நாட்டின் கல்வி அமைப்பும் அதன் வளர்ச்சியுமாகும். எமதூர் மக்களின் சைவத் தமிழ்ப் பண்பாட்டின் பரிபூரண வளர்ச்சிக்கு உரம் ஊட்டக் கூடிய வகையில், 1923ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர், 1925ஆம் ஆண்டிலிருந்தே, எமதூர் மக்கள் தமது கல்வி வளர்ச்சியில் காட்டி வந்த எழுச்சியையும் விழிப்புணர்ச்சியையும் தக்கவாறு பயன்படுத்தி, எமது கல்வி நிலையில் கண்ணும் கருத்துமாய் இருந்து செயற்படத் தலைப்பட்டனர். ஐந்தாம் வகுப்புவரை கல்வி பயில ஏற்ற வசதிகளே அன்று எமது கிராமத்தில் துரதிட்டவசமாகக் காணப்பட்டன. அதற்குமேல் கல்வி பயில விழைந்தோரும், ஆங்கிலக் கல்விபெற வசதி படைத்தோரும் தூர இடங்களுக்குச் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலை அன்று எமது மக்கள் மனதைப் பெரிதும் வாட்டியது. பொருளாதாரப் போராட்டத்தில் பின்தங்கி நின்ற சைவ சமயிகள், உத்தியோகம், உயர்வு, ஊதியம் ஆதியனவற்றின்மேல் கொண்ட தணியா மோகம் காரணமாக மத மாற்றம் செய்யப்பட்ட கொடிய காலம் அக்காலம்!

இவ்விருள்சூழ் இடர்ப்பாட்டின் மத்தியில் நம்மூர் மக்கள் தத்தளித்துக்கொண்டிருந்தபோது, எமது இளஞ் சந்ததியினரை ஞான ஒளிவழி தொடர்ந்து நடாத்த முன்வந்த தண்டமிழ்த் தொண்டர்கள் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் ஆவார்கள். எமதூர்க் கல்வி நிலையிலும், சைவ நெறியின் வளர்ச்சியிலும் ஓயா ஊக்கம் காட்டிவந்த உத்தமப் பெரியோர் பலர். எமதூரின்கண் அன்று சைவப்பாடசாலை ஒன்றும் இல்லாத பெருங் குறையை நினைந்து மனம் மிக நைந்து இக் குறையை நீக்குதற்குரிய வழிவகைகளைப் பற்றி அல்லும் பகலும் அயராது ஆராய்ந்து வந்தனர். இவர்களில் முன்னணியில் நின்று முழு மனத்துடன் உழைத்தவர்கள், ஊரவர்களின் உள்ளங்களிலெல்லாம் இன்றும் அழியாப் புகழுடன் நின்று நிலவும், இறைவனடி சேர்ந்த அருட் செல்வர்களாகிய, ஆசிரியர்கள் ஆ. வேலுப்பிள்ளை, ஆ. கந்தையா, ஞா. சுப்பிரமணியம், வீ. கணபதிப்பிள்ளை, போன்றோரும், இன்று நம் மத்தியில் பேரும் புகழும் பெற்று வாழ்ந்துகொண்டிருக்கும் பண்டிதர் சு. இராமசாமி, இளைப்பாறிய தலைமை ஆசிரியர் சு. முருகுப்பிள்ளை போன்றோரும், வேறு பலரும் ஆவர். சைவ வித்தியாசாலை ஒன்றை எமதூரின்கண் அமைக்கவேண்டும் என்ற பேரார்வத்தினால் உந்தப்பட்ட இவர்கள் சைவத் தமிழ் ஒளியை ஈழம் முழுவதும் பரப்பிவந்த சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஒப்பற்ற தலைவராய் இருந்த சேர் பொன். இராமநாதன் அவர்களையும், சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் உயிர் நாடியாக விளங்கிய உயர்திரு. சு. இராசரத்தினம் அவர்களையும் அடிக்கடி சந்தித்து, எமதூர் மக்களின் கல்வி, சமய, பாரம்பரிய உணர்வுக்களைகளை வளர்க்கக் கூடிய சைவ வித்தியாசாலை ஒன்று இங்கு அமைக்கப்படவேண்டும் என்ற கருத்தை அவர்களின் மனங்களிற் பசுமரத்தாணி போற் பதியச் செய்தனர். சைவமுந் தமிழும் தாரணி எங்கும் தழைத்தினிதிருக்கத் தளரா துழைக்கும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர் எமதூரில் அன்று காணப்பட்ட பெரும் வாய்ப்பையும், மக்களின் பேரார்வத்தையும் பயன்படுத்த முன்வந்ததில் வியப்பொன்றில்லை. 1925இல் திண்ணைப் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்ட சைவக் கல்விச் சாலை இன்று பொன்விழாக் காணும் இடைக்காடு மகா வித்தியாலயமாக வளர்ந்து வருகின்றது.

ஊர்மக்களின் உழைப்பின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இச் சைவ வித்தியாசாலைக்குச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்

தினர் சிறந்த ஆசிரியர்களேயுந் தேவையான தளபாடங்களேயுங் கொடுத்து உதவினர். நிலம் கொடுத்துதவிய பரோபகாரிகள் பலரின் பணியைப் பல்லாண்டு நின்று பயன் தரும் பணியாக ஆக்கியவர்கள் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினர். இந்நூற்றுண்டின் ஆரம்ப காலத்தில் சைவாசிரியர்கள் பயிலுவதற்கேற்ற வசதிகள் காணப்படாத அவல நிலேயை மாற்றும் நோக்கத்துடன் இந்து வித்தியா சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கம் அமைக்கப்பட்டது. பயிற்சி பெற்று வெளியேறிய சைவாசிரியர்கள் படிப்பிப்பதற்குத் தேவையான சைவப் பாடசாலேகளே ஈழத்தின் பல பாகங்களிலும் அமைக்கும் சேவையில் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தை வியக்கத்தக்க முறையிற் செயற்படத் தூண்டியவர், சைவர்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ வழி வகுத்தவர், இன்றும் என்றும் வானுறையும் மேலோனுகச் சைவர்களினுல் போற்றப்படும் சிவநெறிச் செம்மலாகிய உயர்திரு. சு. இராசரத்தினம் அவர்கள் ஆவர்!

இவர் தமது சட்ட உரைஞர் உத்தியோகத்தில் பற்றற்று, பற்றற்ருன் பற்றிணப் பற்றுவதற்கேற்ற நெறி கல்விச் சேவை என்பதனே ஐயந்திரிபற ஓர்ந்து, தமது கல்விச் சேவையின் மூலம் எமதூர் மக்கள் நற்பயனே அடையும்வண்ணம், எமது வித்தியாசாலேயில் ஆசிரியர் புகுமுக வகுப்பை 1931இல் ஆரம்பிப்பதற்கு ஆவன செய்து, எமதூரின் கல்வி நிலேயை மேலும் உயர்த்த அரும்பாடுபட்டார். எமதூரில் முன்னர் ஏழாம் வகுப்பில் படித்துவிட்டுக் கல்வியைத் தொடர முடியாதிருந்த பலரும், இப் பெரியாரின் குறித்த சேவை காரணமாக ஆசிரியர் புகுமுக வகுப்பில் சேர்ந்து தொடர்ந்து படித்து, ஆசிரிய கலாசாலேக்குச் செல்லக்கூடிய வாய்ப்பிணப் பெற்று, ஆசிரியர்களாக வெளியேறி, அரும்பெரும் அறிவுத் தொண்டினே மேற்கொள்ளக்கூடியவராயினர். இதன் பயனுக, எமதூரின் அறிவுச் செல்வமும், பொருட்செல்வமும் ஆன்மீக வளர்ச்சியும் மேலோங்கின. சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் துணேகொண்டு, இப் பெரியார் மேற்கொண்ட முயற்சிகளின் காரணமாக 1935ஆம் ஆண்டளவில் எமது பாடசாலே இருமொழிப் பாடசாலே ஆயிற்று. இப் பாடசாலேயை வளர்ச்சிவழி இட்டுச் செல்லவல்ல திரு. V. செல்வநாயகம், M. A. அவர்களே இப் பாடசாலேயின் அதிபராக நியமிக்க வழிவகை செய்த இப் பெரியாரின் செம்மைநிறை சேவை மனப்பான்மை எம் மனங்களில் என்றென்றும் நின்று நிலவும் பெற்றிவாய்ந்தது. இப் பெரியார் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் முகாமையாளராக இருந்தஞான்று ஆற்றிய சேவைகள் அளப்பரியன. ஈழமாதாவின் ஞானக் கொழுந்தாய் விளங்கி என்றும் அருள்தரும் தவத்திரு சிவயோகர் சுவாமிகள் அவர்களே ஈடிலாப் பெரியார் இராசரத்தினம் அவர்கள் சைவ ஒளி பரப்பிய மாண்பை வியத்தகு முறையில் விளம்பி இருக்கின்ருர்கள் என்ருல் இப் பெரியாரின் சிறப்பைச் செப்பவும் முடியுமோ ?

கல்வி நிலேயிற் கருத்துச் செலுத்தி
நில்லா உலகில் நிலேபே றெய்திய
வல்ல வர்திரு சு.இ. போன்ருேர்
நல்வழி காட்டிய ஞான ஒளிகளாம்!

— சிவஞானி



# தூய்மை.... வெண்மை.... சேவை....

மதிய வெய்யில் காய்ந்துகொண்டிருந்தது. வெய்யிலின் வெப்பம் நிமிடத்துக்கு நிமிடம் அதிகரித்துக்கொண்டிருந்தது. வீதியில் நடந்துகொண்டிருந்த மக்களின் நடையில் ஒரு வேகம்.

முச்சந்தி; வடக்குத் தெற்காக ஒரு வீதி; கிழக்கில் இருந்து வரும் ஒழுங்கை சந்திக்குமிடம். சந்திக்கு மேற்குப் பக்கத்தில் ஒரு புளியமரம் வானளாவி வளர்ந்து நின்றது. வட கிழக்கில் ஒரு சிறிய கொட்டில். அதனுள் ஒரு மோட்டார் வண்டி தன்னை மறந்து சலனமற்று நிற்கின்றது. சந்திக்குத் தென்கிழக்கில் ஒரு கலட்டி; நாகதாளிச் செடிகள் வளர்ந்து நிற்கின்றன. அமரிக்காவோ என்னவோ ஒரு நாட்டிலிருந்து அவற்றை அழிக்கவெனக்கொண்டு வந்த அந்த வெள்ளைப் பூச்சிகள் தங்கள் செல்வாக்கினைச் செழிப்புறச் செலுத்தியதால் நாகதாளிச் செடிகள் அனைத்தும் வெள்ளை நிறத்தைக் காட்டிநின்றன.

திடீரென ஒரு வெள்ளை உருவம் சந்தியில் தோன்றுகின்றது. கம்பீரமான நடை; அரையில் வெள்ளை வேட்டி; தோளில் வெள்ளைச் சால்வை; தலையில் வெள்ளிக்கம்பி போன்ற முடி; கையில் வெண்குடை. (கறுப்புத்துணிமேல் வெள்ளைத் துணி போர்த்தியது.) சுகாதாரத்தின் விளிப்பு, தூய்மையின் பிரதிபலிப்பு.

"Here, Here. Come Here." நிமிர்ந்து பார்க்கிறேன். பத்து வயதுக்குமேல் மதிக்க முடியாத ஒரு சிறுவன்; வெருண்ட பார்வை; தலை ஒழுங்கர்க்கச் சீவப்படாமையால் அலங்கோலம்; முகத்தில் முத்து முத்தாக வியர்வை தோன்றித் தன்னிலை தளர்ந்து வாய்க்காலில் நீர் ஓடுவது போன்ற நிலை; உடலில் புழுதியின் ஏக போக ஆட்சி; அரையில் தரித்திருக்கும் வேட்டியும் புழுதி விளையாட்டின் விளைவின் பிரதிபலிப்பு.

"தம்பி எங்கே செல்கிறாய், இந்த அகோர வெய்யிலில்?" "நான் மாமி வீட்டிற்குச் செல்கிறேன், சேர்." "ஏன் இன்று குளிக்கவில்லை? எங்கே நகத்தைக் காட்டும் பார்ப்போம்; கௌபீனம் தரித்துள்ளாயா?" இப்படிப் பல கேள்விகள். பையன் பதில் இல்லை. "இப்போதே வீட்டுக்குச் சென்று இவற்றைச் செய்து விட்டுத் திரும்பி வாரும்." பையன் வீட்டை நோக்கிச் செல்கிறான். அந்த உருவம் வடக்கு நோக்கித் தன் பயணத்தைத் தொடர்கிறது. இது ஒருநாள்.

வடக்கு நோக்கித் தெற்கில் இருந்து ஒருவீதி அது. அது வடக்கு அந்தலையிலிருந்து கிழக்கு நோக்கி வளர்ந்து வடக்கு நோக்கிச் செல்கிறது. கிழக்கு நோக்கிச் செல்லும் வீதிக்குத் தெற்கே முட்கலட்டி. வீதியின் அருகில் அரசமரம் ஒன்று செழிப்புற வளர்ந்துகொண்டிருக்கிறது. வீதியின் வடபாகத்தில் "ட" வடிவில் ஒரு பெரிய கட்டிடம். வடகிழக்கில் கிணற்றுக்குக் கிழக்கே ஒரு கற்பகதரு—தென்னை, வளர்ந்து வலப்புறம் நிற்கிறது. கிழக்கே தென்மேற்கில் ஒரு மடைப் பள்ளி; ஓலையால் வேய்ந்த கூரை.

கட்டிடத்துக்கு மேற்கே விளையாட்டு மைதானம். அதில் விஞ்ஞான கூடத்துக்கான கட்டிடத்துக்கு அடித்தளம் வெட்டப்பட்டிருக்கின்றது, இருக்கும் கட்டிடத்துடன் மறுசிறகாக இரு அறைகளும் விஞ்ஞான கூடமும். மணற்கும்பி சிதைந்து பரந்து கிடக்கின்றது. நேரம் ஐந்து மணிக்குமேல் அரை மணி கழிந்திருக்கும். ஓடியாடி விளையாடிக்கொண்டிருந்த மாணவர்களின் சப்தம் ஓய்ந்து அடங்குகின்றது. நான் நாலாபக்கமும் பார்க்கிறேன்; மணற்பரப்பை நோக்குகிறேன். அங்கே மேற்கூறிய விஞ்ஞான கூடத்தைக் கட்டத் திட்டமிட்ட அந்தக் கம்பீரமான உருவம் தூய்மையின் பிரதிபலிப்பாக அமர்ந்திருக்கின்றது. தென் மேற்கில் அவரைச் சுற்றி மாணவர்கள் அரை வட்டத்தில் அமர்ந்திருக்கிறார்கள். மாணவர்கள் எல்லோரும் அவரை நோக்கு

கின்ருர்கள். ஒரு அமைதி. கதைகள் சொல்கிருர்கள். சுகாதாரக் கதைகள், நீதிக்கதைகள். இப்படிப் பல.

மணி ஆறு அடிக்கிறது. மாணவர் சென்று தங்கள் உடல்களை நீரினுல் சுத்தம் செய்கிருர்கள். விளக்கு ஏற்றுகிருர். அந்தப் பெருந்தகை. அதிற்கூட ஒரு நியதி. நாற்பது தரத்துக்குமேல் காற்றேற்றியை உந்தப்படாது. அதில் அவர் மிகவும் கண்டிப்பும் கட்டுப்பாடும் கடைப்பிடிப்பார். இராப் பாடசாலை தேவாரத்துடன் தொடங்கி நடக்கிறது. எல்லா வகுப்பு மாணவர்களும் தம் கவனத்தைத் தம் பாடங்களில் செலுத்தி நிற்கிருர்கள். வயதிற்கேற்பப் பாடங்களை முடித்து வீட்டுக்கு அனுப்பிக்கொண்டிருக்கிருர். எதிலும் நிதானமும் நெறி தவருமையும் கட்டுப்பாடும் அவர் கொள்கை.

காலைப்பொழுது மாணவர்கள் அங்கு மிங்குமாக ஓடிக்கொண்டிருக்கிருர்கள். கிழக்கு மேற்கான அந்த வீதிக்கு இரு மருங்கும், பாடசாலைக் கட்டிடங்கள் வளர்ந்து நிற்கின்றன. தெற்கிலிருந்து வடக்கேயும் வடக்கிலிருந்து தெற்கேயும் ஓடிக்கொண்டிருக்கிருர்கள். வாங்குகளை நகர்த்துவதால் 'கிறீச்' என்ற ஒலி காதைத் துளைத்து நிற்கின்றது. மாணவர்களின் கலகலப்பு இன்னும் தாக்கத்தைக் கொடுத்து நிற்கின்றது. கடமை நேரம் நெருங்க ஆசிரியர்களும் பாடசாலையை நோக்கி வந்துகொண்டிருக்கிருர்கள். திடீரென நிசப்தம். கதிரையில் இரட்டைக் காலில் இருந்த மாணவர்கள் நாலுகால்களும் நிலத்தில் நிற்கச் சாதாரண நிலையை அடைகிருர்கள். வாங்கு நகர்த்திய கிருத்தியம் அப்படியே தடைப்படுகின்றது. எங்கும் அமைதி. திரும்பிப் பார்க்கிறேன். வீதியின் கிழக்கு முனையில் வெண்குடையின் மேற்பக்கம் தெரிகிறது. அமைதிக்குக் காரணம் என்ன என்பதும் புரிகின்றது.

மாலைவேளை; தைமாதப் பிற்பகுதி. தோட்டங்களும் வயல்களும் நிறைந்த எங்கள் கிராமத்தின் வடகிழக்குப்பகுதி. அங்கே நின்று வயல்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். நெற்பயிர்கள் நன்ருய் வளர்ந்து கதிர்மணி முற்றித் தலை வணங்கி நிற்கின்றன. அவற்றைப் பார்க்கும்போது காதலனைக் கண்ட நங்கை நாணத்தில் தலை வணங்கி நிற்பதாகக் கற்பனை.

வடக்குப் பக்கமாகப் பார்க்கிறேன். பதினைந்து மாணவர்கள் ஒழுங்காக வயல் வரம்புகளில் வந்துகொண்டிருக்கிருர்கள். பிள்ளைகளாச்சே, சும்மாவா இருப்பார்கள்? எனக்கு ஆச்சரியம். மேலும் என் கண்கள் வடக்கை நோக்குகின்றன. அங்கே வெண்குடை நிழலில் அந்தக் கம்பீரத் தோற்றம் வந்துகொண்டிருக்கிறது. எம்மூரின் ஆங்கிலக் கல்வி வசதி இல்லாத காலம் அது. அவர் அதற்காக நம்மூர் மாணவர்கள் தொண்டைமாஞறு ஆங்கிலப் பாடசாலையில் ஆங்கிலம் கற்க ஒழுங்குகளைச் செய்து கொடுத்துத் தன் கண்காணிப்பில் 'பயிலை' வைத்துக்கொண்டிருந்தார். பின் விழித்துப் பார்க்கிறேன். மாணவர்க்கள் என்னைச் சுற்றி நிற்கிருர்கள். அப்பொழுது என் உள்ளத்தில் என்னை அறியாமல் இதயகீதம் ஒலிக்கின்றது. (என் இதயம் தன்னை அறியாமல் சோககீதம் இசைக்கின்றது.)

படுத்திருக்கிருர் அந்தத் தூயஉள்ளம் படைத்தவர். உடல் மெலிந்திருக்கின்றது. அவரைச் சுற்றி ஆண்களும் பெண்களும் அமர்ந்திருக்கின்ருர்கள். பல நாட்களின் பின் அவரை நான் பார்க்கும் காட்சி இது. கால்மாட்டில் அவர் மனைவி அமர்ந்து அவருடைய கால்களைப் பிடித்துக்கொண்டிருக்கின்ருர். கண்கள் மங்கியிருக்கின்றன. ''யார் வந்திருக்கிறது? தெரிகிறதா?'' என்று அவர் மனைவி கேட்கிருர்? ''யார்? யார்?'' ஏன் சார்; நான்தான் வந்திருக்கிறேன். ''அட சாமியா! வாப்பா வா; கடைசிநேரத்திலும் கூடப் பார்க்க வந்துவிட்டாயே!'' தூயவரின் முகத்தில் புன்முறுவல்; என் கண்களிலிருந்து கண்ணீர் பொலபொல என விழுகின்றது. நாத் தழுதழுக்க என்னுல் ஒன்றும் பேசமுடியவில்லை. அருகில் அழைக்கிருர். சென்று அவர் அருகில் அமர்ந்து அவர் கால்களை இதமாகப்

பிடிக்கிறேன். ''சாமி! நீ எனக்கு ஒரு உதவி செய்வாயா? இல்லை இதைச்செய்ய வேண்டும்.'' நான் ஒன்றும் பேசாமல் இருக்கின்றேன். என்னைப் பள்ளிக்கூடத்துக்கு அழைத்துச் செல்கிறாயா? என்று சொல்லிக்கொண்டு கைகளை ஒரு வேகத்துடன் தூக்குகின்றார். சிறிது உயர்ந்த கை மேலே எழும்ப மறுக்கிறது. நான் அவற்றைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொள்கிறேன். என் உள்ளம் வேதனைப்படுகின்றது.

நம்மூரில் உள்ள சிறுவர்கள், பெரியவர்கள், மாணவர்கள் எல்லோருக்கும் தன் கைகளைக் கொடுத்துதவிய அந்தக் கரங்கள் ஓய்ந்திருப்பதை நினைக்க எனக்கு வேதனையும் விம்மலும் ஏற்படுகின்றது. எப்படியும் நீங்கள் எழுந்து திரும்பவும் பழைய நிலைக்கு வந்து விடுவீர்கள்; எம் பாடசாலையும் நாங்களும் அதிர்ஷ்டசாலிகள். அவர் என்னுடன் பேசிக்கொண்டிருந்ததால் ஏற்பட்ட உடற் களைப்பு அவரை அடங்க வைக்கின்றது. அப்படியே அயர்ந்து தூங்கிவிடுகின்றார்.

ஒருநாள் காலை எனது பாடசாலையில் படிப்பித்துக்கொண்டிருக்கிறேன்; ஆங்கிலப்பாடம். சரியான உச்சரிப்புக்கள் விளக்கிப் படிப்பிக்கிறேன். இவரே எனக்குத் தந்த வரப்பிரசாதம். படிப்பிக்கும் போது அவர் நினைவுகள் என் நெஞ்சில் அலைமோதிக்கொண்டிருக்கின்றன. அப்பொழுது ''சார், தந்தி'' என்ற குரல் என்னை நிதானப்படுத்துகின்றது. தந்தியை வாங்கிப் படிக்கிறேன். என் தலை சுற்றுகிறது. மாணவரும் கட்டிடமும் சுழல்கின்றன. நான் பக்கத்தில் இருந்த மேசையில் சரிகின்றேன். ஒரே இருள் என் நெஞ்சைக் கௌவிக்கொள்கிறது. பின் விழித்துப் பார்க்கிறேன். மாணவர்கள் என்னைச் சுற்றி நிற்கிறார்கள். அப்பொழுது என் உள்ளம் தன்னையறியாமல் சோககீதம் இசைக்கின்றது.

எங்கிருந்தோ வந்தான்
ஏ.வி.எனும் பெயர்பெற்றான்
இங்குஇவனின் சேவைபெற
என்னதவம் செய்துவிட்டோம்
ஆங்கிலநல் லாசானாய்
அறநெறியின் காவலனாய்த்
தூங்கியநம் சமுதாயம்
துடிதுடித்து விழித்திடவே
பாங்குடனே சேவைசெய்யப்
பண்புமிளிர் சேவகனாய்......
(எங்கிருந்தோ)

ச. கு. ஆறுமுகசாமி (கழகம்)

## பெரியவை சில

| | | | |
|---|---|---|---|
| ★ | சிறந்தநாள் | : | இன்று |
| ★ | மகாபாவம் | : | அச்சம் |
| ★ | உகந்த பரிசு | : | மன்னிப்பு |
| ★ | கேவலமான உணர்வு | : | பொறாமை |
| ★ | மிகப்பெரிய தேவை | : | பகுத்தறிவு |
| ★ | புத்திசாலி | : | சரியென நினைத்ததைச் செய்பவன் |
| ★ | இலகுவான செயல் | : | குறைகாணல் |

திரட்டியவர்: சி. நல்லதம்பி

# நினைவில் நிறைந்தவை

வடமராட்சியின் சிறந்த கல்விமான்களுள் ஒருவராக மதிக்கப்படும் முன்னாள் அதிபரொருவருடன் நான் சில ஆண்டுகளுக்குமுன் உரையாடிக்கொண்டிருக்கையில், 'என் பிள்ளைகளின் கல்வி நலனுக்காகவாவது நான் யாழ்நகரில் குடியேறுவது நல்லது' எனக் குறிப்பிட்டார். இதற்குப் பதிலளிக்குமுகமாக ''என்னிடத்தில் என்ன குறை கண்டு இப்படிக் கூறுகின்றீர்கள்'' எனக் கேட்டேன். அவர் திடுக்குற்று ''நான் அப்படியொன்றும் கூறவில்லையே'' எனப் பதிலளித்தார். என் பிள்ளைகள் நகர்ப் பாடசாலைகளிற் கல்வி கற்றுத்தான் நலன் பெறுவரெனின் கிராமப் பாடசாலையிற் கல்வி கற்ற என்னிடம் குறைபாடு உண்டு எனப் பொருள் கொண்டது தவறில்லையல்லவா? கிராமப் பாடசாலையென்றதும் சிலரின் மனதில் சில தப்பபிப்பிராயங்கள் ஏற்படுகின்றன. இப் பாடசாலைகளிற் குறைபாடுகள் உண்டு என்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆனால், இக் குறைபாடுகளிடையே நிறைவு காண்பதுதான் சிறப்பு. இதையே ஆங்கிலப் பெருங் கவிஞரான ஜோன் மில்டன் என்பவரும் ''சுவர்க்கத்தை நரகமாக்குவதும், நரகத்தைச் சுவர்க்கமாக்குவதும் மனிதனின் மனநிலையைப் பொறுத்தது'' எனக் குறிப்பிட்டார். எமது பாடசாலையிலே க. பொ. த. வகுப்புவரை படித்துப் பின் உயர்கல்விக்காகச் சர்வகலாசாலைகளுக்குச் சென்ற மாணவரிடையே எந்தவிதக் குறைபாட்டையும் நான் காணவுமில்லை; கண்டதாக மற்றெவரும் குறிப்பிடவுமில்லை.

இப் பாடசாலையில் ஆரம்ப கீழ்ப்பிரிவில் சேர்ந்து 1954ஆம் ஆண்டுவரை இங்கு கல்விகற்ற எனக்கு இரு அதிபர்களின்கீழ் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இப் பாடசாலையின் உயர்வுக்கு அயராது உழைத்தவர்களுள் சேரநாட்டிலிருந்து சேய்நாடு வந்த திரு. R. H. ஐயர் அவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அந்நியராக இருந்தபோதும் பாடசாலையின் வளர்ச்சியில் மட்டுமன்றி எமது கிராமத்தின் முன்னேற்றத்திலும் அதிக அக்கறை கொண்டிருந்தார். கிராம மக்களுடன் அன்புடனும் பண்புடனும் கலந்து உறவாடினார். பல மாணவருக்கு உணவும் உறைவிடமும் கொடுத்து ஆதரித்தார். சிரேஷ்ட தராதரப் பத்திர வகுப்பு மாணவர்களுக்குக் காலையும் மாலையும் விசேட வகுப்புக்களை நடாத்தி அம்மாணவரின் கல்வியை ஊக்குவித்தார்.

திரு. ஐயர் அவர்கள் ஓய்வு பெற்றதும் சுன்னை, குமாரசுவாமிப்புலவரின் மகனும், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளிற் பாண்டித்தியம் பெற்றவருமான திரு. கு. முத்துக்குமாரசாமிப்பிள்ளை அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். இவரது பொலிவான தோற்றமும், சர்வாணியும், தலைப்பாகையும் சேர்ந்து மாணவர்களுக்குத் திகிலைக் கொடுத்த போதிலும், பழகுவதற்கு நல்ல பண்பாளராகவும், மாணவர்களுடன் அன்பாகப் பழகும் சுபாவமுடையவராகவும் இருந்தார். நான் சிரேஷ்ட வகுப்பிற் படித்த போது இவரே எமது ஆங்கில ஆசிரியராக இருந்தார். எழுத்து வேலையைத் தாராளமாகத் தந்து அவற்றை வகுப்பறையில் மாணவரைச் சூழவைத்துத் திருத்துவார். அவ்வேளை அவரது தலைப்பாகையில் இருந்து குண்டூசி கழற்றும் முயற்சியில் மாணவர் ஈடுபடுவர்.

எங்கள் காலத்தில் எமது பாடசாலையில் கல்வி கற்பித்த ஆசிரியர்களுள் எனது மரியாதைக்கும், மதிப்புக்கும் உரியவராகத் திகழ்ந்தவர் திரு. P. C. ஜோசேப் அவர்களாவர். மலையாளத்திலிருந்து இங்கு வந்த அவருக்குத் தமிழ் பேசத் தெரியாது. எங்களுக்கோ ஆங்கிலத்தில் ஒரு வசனமேனும் சரியாகப் பேசவராது. இந்நிலையில் எமக்கு ஆங்கிலம் கற்பிக்கப் புகுந்த அவர் எங்கள் ஒவ்வொருவருக்கும்

ஒவ்வொரு சிறுகதைப் புத்தகத்தை வாங்கித் தந்து அக்கதையை மறுநாள் ஆங்கிலத்தில் சொல்ல வைத்தார். முடிவு என்னைப்பொறுத்த மட்டில் ஏதோ ஓர் அளவு ஆங்கிலத்தைப் பேச எழுத உதவியது. இவ்வாறு ஆங்கிலத்தைப் புகுத்தியவர் காலக்கிரமத்தில் இரவு நேரங்களிலும் எம்மைப் பாடசாலைக்கு வருவித்துக் கல்விபோதித்து உதவினர். இவர் பிரமச்சாரியாகவும், பாடசாலையிலேயே விடுதி விட்டிருந்தமையாலும் எமக்குக் கூடுதலான உதவி கிடைத்தது.

திரு. ஜோசேப் அவர்கள் தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களையும் வேறு வகுப்புக்களிற் போதித்தார். எமது கிராமத்திலுள்ள பல இனப் பாம்புகளும், ஊர்வன, பறப்பனவும் அன்றைய விஞ்ஞானகூடத்திலுள்ள போத்தல்களில் இடம்பெற்றன. இதனலேயே அன்றைய அதிபராக இருந்த R. H. ஐயர் அவர்கள் விஞ்ஞான கூடத்தைச் ''சுடுகாடு'' எனக் கூறுவதோடு திரு. ஜோசேப் அவர்களை அரிச்சந்திரன் எனவும் நாசுக்காகக் குறிப்பிடுவரர்.

எனது உள்ளத்தில் நீங்காத இடம் பெற்ற இன்னேர் ஆசிரியர் பண்டிதர் திரு. ஆ. சின்னத்துரை அவர்கள். ''கம்பன்'' என திரு. ஐயர் அவர்களால் அழைக்கப்பட்ட பண்டிதர் அவர்களின் பாடத்தை நாம் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருப்போம். வகுப்புக்குள் நுழைந்ததும் வீமனையும் கடோற்கசனையும் நம் கண்முன்னே நிறுத்திவிடுவார். மணி அடிக்கும்வரையும் பாடப்புத்தகத்தில் இல்லாத எதுவும் அவர் நாவில் எழாது. பண்டிதர் அவர்கள் தான் துவிச்சக்கரவண்டி ஓடப் பழகியதையும் பாலபண்டிதர் பரீட்சைக்குச் சென்ற சமயம் இன்னேர் பரீட்சார்த்தி தனக்குக் கூறிய அறிவுரைகளையும் இடைக்கிடை கூறி எம்மை மகிழ்விப்பார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியவற்றின் உருவாகவே பண்டிதர் அவர்கள் விளங்கினர்கள்.

மாணவர் முன்னேற்றத்தில் அதிக அக்கறைகொண்டு பணி புரிந்தவர்களுள் திரு. எம். பொன்னம்பலம் அவர்களும் திரு. சு. இளையதம்பி அவர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். கணிதத்தை வேப்பங்காயாகக் கருதிய எனக்கு இவர்கள் இருவரும் ஆற்றிய பணி அளப்பரியது. இருவரும் கண்டிப்பானவர்கள். முன்னையவர் பார்வையினல் மாணவரை அடக்கிடுவார். பின்னையவரோ தன் நாவினல் அடக்கிடுவார். மாணவர்கள், இவர்கள் இருவரையும் மதித்தனர்; நேசித்தனர். காரணம் இவர்களின் கடமையுணர்ச்சியே.

தண்டனையிலும் பார்க்க அன்புதான் மாணவரை நல்வழிப்படுத்தும் நல்ல சாதனம் என்பதைச் செயல் முறையிற் காட்டி மாணவரின் மரியாதைக்கு இருப்பிடமாகத் திகழ்ந்த திரு. தம்பி அவர்களை இவ்விடத்திற் குறிப்பிடாது விடமுடியாது. சாந்தமும் அமைதியும் உருவாகக் கொண்ட திரு. தம்பி அவர்கள் எமக்குச் சுகாதாரவியல் ஆசிரியராகக் கடமை ஆற்றினர்.

எமது பாடசாலை நாட்களை நினைவு கூரும்பொழுது ஒரு நிகழ்ச்சி என் மனக் கண்முன் தோன்றுகிறது, 1954ஆம் ஆண்டு நடைபெற்ற சரஸ்வதி பூசைக் காலத்தில் க. பொ. த. முதலாண்டு மாணவர்களை அதிபர் தனது அறைக்கு அழைத்து மறுநாட் பூசையை எமது வகுப்பினர் விமரிசையாகக் கொண்டாட வேண்டுமெனக் கூறினர். எனவே, எமது வகுப்பிலிருந்த ஆண்கள் அத்தனைபேரும் குடாக்காட்டில் இருந்த அத்தனை மரங்களையும் வண்டி வண்டியாகக் கொண்டு வந்து இரவு பத்துமணியளவில் அலங்கரித்து முடித்தோம். எமது மனம் இத்துடன் திருப்தியடையவில்லை. விமரிசையான கொண்டாட்டமென்றல் ஒலிபெருக்கி இல்லாமல் ஒன்ற? அதிகாலை நாலரை மணிக்கு எமது ஊர் மக்களைத் துயிலிலிருந்து எழுப்பியது நாம் இரவோடு இரவாக யாழ்ப்பாணத்திலிருந்துகொண்டு வந்து சேர்த்த ஒலிபெருக்கிமூலம் எழுந்த இன்னிசையாகும். வெளியூரிலிருந்து காலை எட்டுமணிக்குப் பாடசாலை வந்த அதிப

ருக்கோ அதிர்ச்சி. அழைத்தார் எங்கள் அத்தனைபேரையும், முடிவு ஒலிபெருக்கி நிறுத்தப்பட்டது. பூசை முடிவில் நாமும் வெளியேற்றப்பட்டோம். ஆனால் எமது வகுப்பு மாணவ மாணவிகளின் ஒற்றுமை யால் அடுத்தநாள் நாமெல்லோரும் தொடர்ந்து பாடசாலையிற் கல்வி கற்கக் கூடியதாயிருந்தது.

எமது வகுப்பாசிரியரான திரு. P. C. ஜோசேப் அவர்கள் கண்டிப்பானவர். முதன்நாள் பாடசாலை வராதோர் மறுநாள் பாடசாலைக்கு வரும்பொழுது கடிதம் பெற்றுவரவேண்டும். ஆனால், எமது வகுப்பில் உடன்கற்ற அச்சுவேலி யைச் சேர்ந்த நண்பர் சிவனடியான் என்பவர் இதற்கு விதிவிலக்கானவர். ஒருநாள் வராதிருந்து மறுநாள் பாட சாலைக்கு வரும்பொழுது யார்யாரோ வீடுகளிலுள்ள குரோட்டன் தண்டுகள் எல்லாவற்றையும் சுமந்துகொண்டு வரு வார். குரோட்டனைக் கண்ட திரு. ஜோசேப் அவர்களின் மனம் குளிர்ந்து விடும். கடிதத்தைப் பற்றிய சிந்தனை அவருக்கு எழாது. ஆனால் நண்பன் கொண்டுவந்த குரோட்டன் தண்டுகளுள் ஒன்றுதானும் தளிர்த்ததில்லை.

எமது பாடசாலை எமக்களித்த கல்வி யினாலும், காட்டிய நல்வழிகளினாலும் நாம் பெற்ற நன்மைகள் அளப்பரியன. ஐம்பது ஆண்டுகள் நிறைவுபெறும் எமது பாடசாலைக்கு வேண்டப்படுவன பல உள. அவற்றைப் பூர்த்திசெய்வதற்குப் பழைய மாணவர், பெற்றோர், நண்பர் எல்லோ ரும் அணிதிரளவேண்டும். அப்பொழுது தான் சிறுதுளி பெருவெள்ளமாகும்.

**செ. கணபதிப்பிள்ளை,** B. A.


*With the best Compliments of*

# AGRICOLAS

*Dealers in :*

FERTILIZER

&

AGRO CHEMICALS

**OORIKKADU :: VALVETTITHURAI**

*சிறுகதை*

# இப்படியும் மனிதர்கள் இருக்கிருர்கள்

தொண்டைமாஞறு செல்வச்சந்நிதி கோவிலின்முன் முருகனை வழிபட வரும் பக்தர்கட்குக் குளிர்நிழல் வழங்கும் பல விருட்சங்கள் வளர்ந்திருப்பதை அவதானித்து இருப்பீர்கள். அவற்றின்கீழ் ஓர் இளைஞன் அழுதுகொண்டிருந்தான். வயது பதினெட்டு இருக்கும். மெலிந்த உடல்; ஐந்து அடிக்குக் குறையாத உயரம். இவ்விலட்சணமுள்ள ஒரு வாலிபன் அழுவதென்றல் அதில் ஏதோ காரணம் இருக்கத்தானே வேண்டும். இந்நிகழ்ச்சி அங்கு வரும் பக்தர்கள் பலரின் கவனத்தை ஈர்த்ததாயினும் அவன் அழுவதைப் பற்றி யாரும் கவலைப்பட்டதாகவோ அதைப் பற்றி விசாரித்ததாகவோ தெரியவில்லை. ஏனெனில், அவரவர் கவலைகளையே நிவிர்த்தி செய்ய நேரமில்லாத இக்காலத்தில் பிறர் கவலையைப்பற்றி யார் சிந்திக்கப்போகின்றனர்.

ஒரு சிலர் அவனுக்கு வேண்டியவர் யாரோ இறந்து விட்டதாகவோ அல்லது சுகவீனமுற்று இருக்கின்றனர் என்றோ தம் கற்பனைக்கு எட்டியவண்ணம் தமக்குத்தாமே சமாதானம் கூறிக்கொண்டனர்.

அவ் வாலிபனைச் சிறிது நெருங்கி நாம் அவதானித்தால் அவன் ஒரு தோட்டத் தொழிலாளி என்பது புரிந்து விடும்; ஆம். அவன் மலைநாட்டில் இருந்து வேலைதேடி யாழ்நகர் வந்த இராமையாதான்.

தன் தயவை நாடியிருக்கும் நோயுற்ற தன் தாயையும் தன்னிலும் இளைய எட்டுச் சகோதரரையும் ஒரு வேளைக்காவது கஞ்சி குடிக்க வழிசெய்யும்முகமாக யாழ்நகர் நோக்கிப் புறப்பட்டவன் இராமையா. அப்போது அவன் குடும்பத்தினர் அவனைப் பிரிய மனமில்லாது வழியனுப்பி வைத்தனர். தன் பிள்ளை கண்ணுக்கு எட்டாத தூரத்தில் என்ன கஷ்டப்படுவானே என்று அவனுடைய தாயின் உள்ளம் ஏங்கியது. ஆனுல், மனத்திடமுள்ள இராமையா அவர்களைத் தேற்றி 'உங்கள் வாழ்வில் ஒளிவீச வழி செய்வேன்' எனக்கூறி விடை பெற்றுன்.

யாழ்நகர் வந்த இராமையா தரகன் ஒருவன்மூலம் சிறு கிராமம் ஒன்றில் தோட்டக்காரர் ஒருவரிடம் வேலைக்கு அமர்ந்தான். உணவும், தேவையான போது உடுப்புக்களும் அவன் வீடு செல்லும்போது வேலை செய்த காலத்திற்கேற்றபடி மாதம் பதினைந்து ரூபா வீதம் சம்பளமும் வழங்கப்படும் என்ற வாய் மூலமான உடன்படிக்கையின்படி வேலையில் அமர்ந்தான்.

வளம்மிக்க பொற்காலத்தைத் தேடி இங்கு வந்தவனுக்கு ஒருவார காலத்திலேயே மனச்சோர்வைக் கொடுக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறத் தொடங்கின. தரமான உணவு, உடை என்பன அவனுக்கு வழங்கப்படவில்லை. வேலை வாங்குவதில் அவன் முதலாளி மகா சூரராகக் காணப்பட்டார். தோட்டவேலை முடிந்ததும் வீட்டுவேலைகளும் செய்யவேண்டி இருந்தது. ஆக இரவு பன்னிரண்டு மணி தொடக்கம் அதிகாலை நான்கு மணி வரையுமே அவனுக்கு ஓய்வு கொடுக்கப்பட்டிருந்தது.

இவ்வளவு கஷ்டத்தையும் தாங்கிக் கொண்டு தன் குடும்பத்திற்குத் தான் கூறிய வாக்குறுதியை மனதில் வைத்து முதலாளியின் உத்தரவுகளை நிறைவேற்றி வந்தான்.

இராமையா வேலைக்கு அமர்ந்து எட்டு மாதங்கள் ஆயின. அவன் தன் குடும்பத்தினரைப் போய்ப் பார்த்துவர விரும்பினுன். தன் ஆவலை மிகுந்த சிரமத்துடன் முதலாளிக்கு அறியத்தந்தான். அவர்

மறுக்காது ஊருக்குச் செல்லவேண்டிய ஆயத்தத்தைச் செய்யுமாறு கூறினர்.

இராமையாவிற்கு மிக்க மகிழ்ச்சி. நீண்டநாள் இடைவேளையின்பின் தன் குடும்பத்தைச் சந்திக்கச் சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தான். அத்துடன் தான் கஷ்டப்பட்டு உழைத்த பணத்துடன் தலை நிமிர்ந்து செல்லப் போகின்றான். அதுகண்டு அன்னையும் சகோதரரும் குதூகலிப்பார்கள் என்று மகிழ்ந்தான்.

மறுநாட் காலை இராமையா வேலைக்கு அமர்ந்த வீடு பெரும் அமர்க்களப்பட்டது. காரணம், முதலாளி அம்மாவின் நகைகள் சிலவற்றைக் காணவில்லையாம். வீடும் வளவும் நன்றாகச் சோதனையிடப்பட்டன. வளவின் ஒரு மூலையில் அப் பொருட்கள் காணப்பட்டன. ''இராமையா ஊருக்குச் செல்ல அனுமதி பெற்றதும் இவற்றையும் எடுத்துச் செல்லத் திட்டமிட்டிருக்கின்றான். பின்பு அவற்றை எடுத்து மறைத்திருக்கின்றான்'' என்று சீறினர். முதலாளி தன் பலம் கொண்டமட்டும் அவனை அடித்தார். ஊரவர்களின் திட்டுக்களையும் இராமையா பெற்றுக்கொண்டான். மறுகணம் வெறுங்கையுடன் வெளியேற்றப்பட்டான்.

காலை ஆகாரம் உண்ணாத இராமையா ஏதும் அறியாதவனாக நடக்கத் தொடங்கினான். கையிலே காசில்லை. தன் வரவை எதிர்நோக்கி இருக்கும் குடும்பத்தினருக்கு என்ன பதில் சொல்வது? அவர்களிடம் எப்படிச் செல்வது? என்று விடை காணமுடியாத கேள்விகளைக் கேட்டுக் கலங்கினான் இராமையா. இவ்வாறு கால் நடையாகக் கோவிலை அடைந்து நீண்ட நேரமாக அழுதுகொண்டிருந்தான்.

மறுநாள் காலையில் தொண்டைமானாறு அணைக்கட்டின் அடியில் இனந்தெரியாத வாலிபரின் சடலம் ஒன்று இருப்பதாக ஊரெங்கும் செய்தி பரவியது. இராமையா வேலைக்கு அமர்ந்திருந்த முதலாளியும் வேடிக்கை பார்ப்பதற்குத் தொண்டைமானாறு சென்று பிணத்தைப் பார்த்தார். அது இராமையாவின் பிணம் என்பதை அறிந்த அவர் மெல்ல அவ்விடத்தை விட்டகன்றார்.

இராமையாவை ஏமாற்றியதை எண்ணி மகிழ்ந்திருந்த அவரை இந் நிகழ்ச்சி பாதித்ததாகத் தெரியவில்லை. தொண்டைமானாற்றுச் சந்தியில் நின்ற தரகர் சின்னையாவிடம், 'ஒரு நல்ல தோட்டக்காட்டுப் பொடியனைப் பார்த்துப் பிடித்துத் தாரும்' என்று கூறிக்கொண்டிருந்தார் முதலாளி. 'அடே அப்பா! இப்படியும் மனிதர்கள் இருக்கின்றார்கள்.

''யாவும் கற்பனை''

பு. ஸ்ரீசந்திரராசா - 9 B


# பீற்றேர்ஸ் – PETERS

127/3, மின்சார நிலைய வீதி

யூபிலி பஜார்

(ராணித் தியேட்டருக்கு அருகாமையில்)

யாழ்ப்பாணம்.

அவுட் மோட்டர் கொயில், தண்ணீர்ப் பம் கொயில், மற்றும் மக்னற்றோ கொயில்கள் உத்தரவாதத்துடன் றீவைண்டிங் செய்து கொடுக்கப்படும்.

உரிமையாளர்: S. பீற்றர் போல்

# ★ அந்த மாலைப்பொழுது ★

அந்தி மயங்கும்வேளை - அதிகதூரம் அதிகாலையிலிருந்து பிரயாணம் செய்த களைப்புடன் இடைக்காட்டுச் சந்தியில் பஸ்ஸை விட்டு இறங்குகின்றேன். கண்ணுக்கு எட்டிய தூரம்வரை கண்கொள்ளாக் காட்சி; தென்னஞ்சோலைகள் பனஞ்சோலைகளுடன் இணைந்து காணப்படுகின்றன. உழைப்பால் உயர்ந்த உத்தமர்களான இடைக்காட்டு மக்கள் தமது தோட்டங்களில் மாலைப்பொழுதைச் செலவிடும் அழகிய காட்சி எனது உள்ளத்தில் பரவச உணர்வைப் பாய்ச்சுகின்றது. பெரியோரும், சிறுரும், ஆண்களும், பெண்களும் தோட்ட வேலையில் ஈடுபட்டுக் கருமமே கண்ணாகக் காணப்படுகின்றனர். உறுதியான உள்ளம், முறுக்கேறிய உடற்கட்டு, புன்முறுவல் பூத்த முகங்கள், படாடோபமற்ற எளிமையான வாழ்க்கை— இவற்றை நேரிற் கண்ட யான் எனது சோர்வை மறந்துவிடுகின்றேன். ஒரு விதத் தெம்பைப் பெறுகின்றேன். வீதி வழியே மெல்ல நடந்து நடந்து, விசாரித்தறிந்து வித்தியாலய வளவை அடைகின்றேன்.

வேப்பஞ்சோலை, வெள்ளரச மரச்சோலை; அவற்றின் நடுவே ஓர் அழகிய அறிவுச்சாலை. இடைக்காட்டு மகா வித்தியாலயம். இடைக்காட்டு மக்கள் தம் கண்ணைப்போலக் கட்டிக் காக்கும் ஆலயம் கட்டிடங்களை நுணுக்கமாக ஆராய்கின்றன எனது களைப்படைந்த கண்கள்; பழைய மாணவருடைய நன்கொடை, பெற்றாருடைய நன்கொடை, நலன் விரும்பிகளது நன்கொடை என்பது மட்டுமன்றி, மாண்புமிகு கல்விச் செயலாளர் கலாநிதி பிரேமதாச உடகம இவற்றிற்கு அடிக்கல் நாட்டினர் என்பதையும், திருவாளர்கள் மகாதந்தில, மாணிக்கவாசகர் போன்றோர் இவற்றைத் திறந்து வைத்தனர் என்பதையும் கண்டு வியப்படைகின்றேன். சியவச நூலகம் உறுதியான வசதியான கட்டிடத்தில் மின் விசிறிசகிதம் அமைந்து காணப்படுகின்றது. "அது என்ன புகைப்படம்? தெரிந்த முகங்கள் பல அதில் உள்ளனவே?" ஆம். சிலாபத்தில் உள்ள ஆசிரியர்கள், கொழும்பு நூலக அதிகாரி ஜனுப் கமால்தீன் போன்றோர் அதில் காணப்படுகின்றனர். அகில இலங்கை நூலகப் பயிற்சி வகுப்புக்கள் இங்கு நடைபெற்றதாகப் பின்னர் அறிகின்றேன்.

புதிய கல்வித்திட்டத்தின் மாதிரி நிலையமாகக் காட்சி தருகின்றது இக் கல்வி நிலையம். எத்திசை நோக்கினும் கட்டிடங்கள். "அதுதான் மனையியற்கூடம்; இது மரவேலைக்கூடம்; அதோ தெரிகின்றதே அதுதான் மனையியற்கூடம்; அதன் பக்கத்தில் செம்மண்ணினால் ஆக்கப்பட்டுக் காணப்படுவது மனையியல் உலை; மனையியல் கூடத்திற்கு அடுத்துக் காணப்படும் அறைகளில் வண்ணச் சித்திரங்களும், பின்னல் வேலைப்பாடுகளும் ஆரம்ப வகுப்புக்களின் அழகிய ஆக்கவேலைகளாகக் காட்சி தருகின்றன. அங்கு தெரியும் விஞ்ஞான ஆய்வுகூடம், பெற்றார்-ஆசிரியர் சங்கத்தினரின் விடாமுயற்சியின் பயன்; அடுத்துக் காணப்படும் கட்டிடம் தலைமையாசிரியரின் அன்பளிப்பு" என வழிகாட்டவந்த பிரதி அதிபர் அடுக்கிக் கொண்டே போகிறார். விவசாயப் பகுதியில், திராட்சைப் பழங்கள் கொத்துக் கொத்தாகக் காட்சி அளிக்கின்றன; சிறிய தோட்டத்தில் தானிய வகைகள் செழித்து வளர்ந்துள்ளன; அந்த இடத்தைவிட்டு மெல்ல நகர்ந்து செல்கின்றோம்; பழைய மாணவரின் உறுதியான உழைப்பிற்கு உன்னத உதாரணமாகப் பரந்து காட்சி அளிக்கும் விளையாட்டு மைதானம் அவர்களின் விரிந்த சேவை நோக்கின் விளக்கமாய்த் திகழ்கின்றது; திறந்தவெளி அரங்கு விளையாட்டு மைதானத்திற்கு அழகூட்டுகின்றது. மக்களின் மகத்தான முயற்சியின் திருவினையாக்கமாக விளங்கும் மதில்கள் விளையாட்டு மைதானத்தை அரண் செய்கின்றன; மாண்புமிகு சேவைக்கு மகுடம் வைத்தாற் போல் விளங்கும், 'கல் உடைத்து நிலம் திருத்தும் பணி' ஒரு பக்கத்தில் தொடர்ந்து நடைபெறும் காட்சி ஊக்கத்தின் உயர்வை உணர்த்துகின்றது. இடைக்காடு சனசமூக

நிலயத்தினரின் உயர்ந்த இலட்சியங்களை உலகினர்க்கு உணர்த்தும் வகையில் உயர்ந்து காணப்படும் மின் மோட்டார் நீர்த்தாங்கி, ஆங்காங்கு அமைக்கப்பட்ட குழாய்களின் வழியாகத் தாகந்தீரத் தண்ணீர் தந்து, அவர்களின் தண்ணளியை யொத்த தண்ணொளி வெண்ணிலவின் தண்மையில் தமிழ் தழுவிய நெஞ்சைத் தவழச் செய்கின்றது !

இதற்கிடையில் இரவாகி விடுகின்றது; தெருவில் காலடி எடுத்து வைத்த யான் காலடி இடறிக் கஷ்டப்படுகிறேன். காரணம், பாதை ஓரத்தில் கல். கற்பார் நிறைந்த இடைக்காட்டு மக்கள் கற்பூமியில் வாழ்ந்து கொண்டிருந்தபோதிலும், அவர்கள் கல் நெஞ்சம் படைத்தவர்களல்லர். அவர்கள் அறிவாற்றலுக்கு மதிப்பளிப்பவர்கள் ; "எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகும்" செம்மல்கள். இனிய பண்பில் நனிசிறந் தோங்கும் இடைக்காட்டு மக்கள் இலங்கையின் மூலமுடுக்குகளிலெல்லாம் மூளைசாலிகட்கு ஒதுக்கப்பட்ட அரும் பணிகளில் உயர்நிலயில் காணப்படுகின்றனர். உதாரணமாக, ஐ. நா. தாபன உணவு விவசாய அமைப்பின் புள்ளியியலாளர் திரு. நா. மா. இடைக்காடர் அவர்கள் இன்று உலகிற் சிறந்த சர்வகலாசாலையாகிய ஒக்ஸ்ஃபோட்டில் விரிவுரையாளராக அரும்பணி புரிகின்ருர். நான் இங்கு வந்த அந்த மாலைப் பொழுது தந்த பசுமை நினைவலைகள் உள்ளத்தில் நிலைத்து, உணர்வில் வெல்லமாய் இனித்து, நல்லாலயத்துடன் என்னைச் சொல்லொணுவகையில் மெல்லமெல்லப் பின்னிப பிணைத்துக்கொண்டிருக்கின்றன !

சி. வே. மகேசவேலு, M. A. Dip-in-Ed.


## விக்கினேஸ்வரா கடைச்சல் தொழிற்சாலை

★ நீரிறைக்கும் இயந்திரங்களின் உறுப்புக்கள்,

மற்றும்

★ இயந்திராதிகளின் உறுப்புக்கள், தேய்ந்து அல்லது உடைந்துள்ளதா?

இருக்கவே இருக்கிறது

விக்கினேஸ்வரா கடைச்சல் தொழிற்சாலை.

உடனே விஜயம் செய்யுங்கள்

ஓடர்கள் உடன் கவனிக்கப்படும்.

உரிமையாளர் :

விக்கினேஸ்வரன்

ஸ்ரான்லி ரேட், யாழ்ப்பாணம்

## யோகு டிரேடிங் கொம்.

யாழ்ப்பாணம்

★

பலரக, கல்லில்லாத

அரிசிக்கும்

உப உணவுப்

பொருட்களுக்கும்

சிறந்த இடம்

எங்கள் ஸ்தாபனம்

★

## Yoku Trading Co.

JAFFNA

க. யோகலிங்கம்

உ
சிவமயம்

# நா. க. மயில்வாகனம் அன் கோ.
# N. K. MYLVAGANAM & Co.

உப உணவு மொத்த விற்பனையாளர், கமிஷன் ஏசன்சீஸ்

68, நாலாம் குறுக்கு தெரு

கொழும்பு

தந்தி: வாகனம் தொ. பே. 22250

கிளைகள்

## தாசன் ரேடர்ஸ்

கருவாடு விற்பனையாளர்

68, நாலாம் குறுக்கு தெரு

கொழும்பு - 11

## தாசன் ரேடிங் கம்பனி

மொத்த, சில்லறை பலசரக்கு வியாபாரம்

194, காஸ்வேக் வீதி

கொழும்பு

தொ. பே. 36514

## குமரன் அரிசி ஆலை

கண்டி வீதி

வவுனியா

# Jaffna Municipality
# Multi Purpose Co-operative Society Ltd.

74/3, Hospital Road, Jaffna.

*Telephone No.* **350**

**OFFERS ALL YOUR REQUIREMENTS AT FAIR PRICES**

Through it network of 48 Branches and

1. **Co-op. Hardware** at 259, Stanley Road, Jaffna.
   for all building materials.
2. **Co-op. Town Shop** at 29, Main Street Jaffna.
   Gift items, textiles, sports goods etc. etc.
3. **Powerloom Factory**, Kandy Road, Ariyalai.
   for white poplin.
4. **Grand Bazaar Main Retail Shop at** 15/1, Power House Road, Jaffna.
   Textiles, consumer goods, Presentation articles etc.
5. **Co-operative Printers** at 57, Main Street, Jaffna.
   Quality Printing Forms, Registers etc.
6. **Chief Organisers of National Lotteries Board.**
   at No. 12, Up-Stairs, Model Market, Grand Bazaar, Jaffna.
7. **Co-operative Gas Filling Station at** K. K. S Road, Jaffna.
   for all petroleum products.
8. **Co-operative Milk Shop** at Power House Road, Grand Bazaar, Jaffna.
   for all National Milk Board Products.
9. **Co-operative Hospital** at 9, Kandy Road, Jaffna.
10. **Co-perative Rural Bank** at Hospital Road, Jaffna.
    for Pawn Broking, Comprehensive & Agriculture loans and Savings.

BAYER

திறமான விளைவும், கூடிய வருமானமும் பெற
**ஹேகெம் ஸ்தாபனத்தார்**
தயாரித்து விநியோகிக்கும்
**ப்பயர் விவசாய மருந்துகளைப்**
பாவித்துப்
பயிரைக் காப்பாற்றுங்கள்.

**நெல் வேளாண்மை:**
செரசான் ஈரம், போமாசோல் போற்டெ, ஹெடோனல் ஸ்பெசல் குறுணிகள், சேர்கொப்பூர், ஹெடோனல் 'எம்', ஹெடோனல் 'டி', பொலித்தியோன், பொலித்தியோன் மணிகள், லெபேசிட், டிப்ரறெக்ஸ், தமரோன், உண்டேன், பொலிமற், ஹினோசான்.

**மிளகாய்ச் செய்கை:**
செரசான் ஈரம், போமாசோல் போற்டெ, மெற்றாசிஸ் ரொக்ஸ், பொலிமற், சல்பர், பொலித்தியோன், மொறெஸ் டான், லெபேசிட், பேபோலான் டிப்ரறெக்ஸ், உண்டேன், தமரோன்.

**வெங்காயச் செய்கை:**
போமாசோல் போற்டெ, றைபூனில், பொலித்தியோன், உண்டேன், பொலிமற், லெபேசிட்.

**புகையிலைச் செய்கை:**
செரசான் ஈரம், பொலித்தியோன், அன்றக்கோல், பொலி டோல், மெற்றாசிஸ்ரொக்ஸ், மொறெஸ்டான்.

**உருளைக்கிழங்குச் செய்கை:**
டெரக்கர் குறுணி, பொலித்தியோன், லெபேசிட், பேபோலான், பொலிமற், அன்றக்கோல்.

விவசாய ஆலோசனைகட்கும்
மொத்த வியாபார விற்பனைக்கும்
தொடர்புகொள்ளுமிடங்கள்:

(1) **ஹேகெம் லிமிற்றெட்**
400, டீன்ஸ் வீதி
கொழும்பு-10

(2) **க. நா. ஜெயசீலன்**
"ஈஸ்வர இல்லம்"
கோண்டாவில் கிழக்கு
கோண்டாவில்



தேசிய உயர் கல்வித்தராதரப் பத்திர விஞ்ஞான மாணவர் 1976



பழைய மாணவர் சங்கக் கலைஞர்கள்



சிறுமியர் கோலாட்டம்

# ஆரம்பக் கல்வி

பிள்ளையை மையமாகக் கொண்டு இயங்குதல் இன்றைய ஆரம்பக் கல்வி முறையின் அடிப்படை அமிசமாக அமைகின்றது. இதற்கு முந்திய ஆரம்பக்கல்விப் போதனு முறைகளில் இவ்வமிசம் போதியளவு வற்புறுத்தப்படவில்லை. இன்றைய ஆரம்பக்கல்வி முறையின்படி மாணவரின் தோன்ருத் துணையாய் விளங்கும் இயக்குநராக ஆசிரியர் அமைகின்ருர். உளவியல் ஆராய்ச்சிகளின் அடிப்படையிலான கற்பித்தல் முறைகள், இக்கால ஆரம்பக் கல்வித் திட்டத்தில் இடம்பெறுவதனுல், சுய அநுபவத்திற்கூடாகக் கற்கின்ற மாணவர்கள் மன எழுச்சியுடனும், உற்சாகத்துடனும் தொழிற்படுகின்ற சூழ்நிலையை நாம் ஆரம்பவகுப்புகளில் இன்று காண்கின்ருேம். மாணவர்கள் தமது ஆற்றல்களுக்கும், ஆர்வங்களுக்கும் ஏற்ற அனுபவங்களைப் பெற்றுக் கற்கும் இயல்பான, சுயமான முயற்சியில் களிபேருவகை கொள்ளும் வண்ணம் ஏற்ற கற்கும் சூழலை அமைத்துக் கொடுப்பது ஆசிரியரின் கடமையாகும். ஓய்ந்திருக்காமல் ஓடி விளையாடும் பிள்ளைகள் கூடிவிளையாடிக் குழுக்களாக இயங்கி ஒன்றிணைந்த பாடத்திட்டத்தின் மூலம் தொழிற்படும்போது, உண்மைக் கருத்துக்களை உள்ளபடி உணர்ந்து அறியும் நிலை ஏற்படுகின்றது. இக்கல்வி முறையின்படி மாணவர் சுதந்திரமாகவுந் துணிவோடும் வாழக்கூடிய சூழலை ஆசிரியர் உருவாக்கிக் கொடுக்கின்ருர். அநுபவத்தின் அடிப்படையில் மாணவர் விளக்கத்தைப் பெறும் வண்ணம், அவர்களில் ஒருவராக இருந்து அவர்களைத் தூண்டுபவர் ஆசிரியர்.

ஒரு செயல் திட்டத்தின் அடிப்படையில் மாணவர் ஒன்று சேர்ந்து இயங்கும் போது, தாமாக ஆராயும் பழக்கத்தையும் வாய்ப்பையும் அவர்கள் பெறுகின்றனர். வினுக்களை எழுப்பி விளங்காதவற்றை ஆசிரியரின் துணை கொண்டு விளங்கி, குழு அங்கத்தவர்களோடு கலந்துரையாடி, ஒன்றிணைந்த பாடவிளக்கத்தை மாணவர் பெறுகின்றனர். இதனுல் பாடப்பிரிவுகளிலிருந்து அவர்கள் விடுபடுகின்றனர். வகுப்பறையில் நற்பயனின் அடிப்படையில் வாழ்ந்து கொண்டிருப்பதற்கேற்ற இதமான, சுமுகமான, அந்நியோந்நியமான கருத்துள்ள சூழ்நிலை ஏற்படுகின்றது. குழுச் செயல் வயல் வெளியிலோ, கடற்கரையிலோ, சந்தையிலோ, பூங்காவிலோ, மரத்தடியிலோ, விளையாட்டு மைதானத்திலோ நடைபெறும்பொழுது அங்கு கற்றல் நிகழ்கின்றது. உண்மை வாழ்க்கையின் அடிப்படையில், தர்க்கரீதியில் ஆராய்ந்து, ஒற்றுமை வேற்றுமைகளைக் கண்டு விஞ்ஞான முறையில் மாணவர் விளக்கத்தைப் பெறுவதை இக்கால ஆரம்பக் கல்வி முறை மையமாகக் கொண்டுள்ளது. ''கேட்டேன் மறந்துவிட்டேன்; பார்த்தேன் நினைவிலுண்டு; செய்தேன், அறிந்து கொண்டேன்'' என்பன உண்மைப் பொருள் பொதிந்த வார்த்தைகள். முப்பரிமாணக் கல்விமுறையாகிய இக்கால ஆரம்பக் கல்வி முறையில் ''செய்தேன் அறிந்து கொண்டேன்'' என்ற அமிசம் முக்கிய இடம்பெறுகின்றது. எண், எழுத்து, சுற்ருடல், ஆக்கம், இசைவும் அசைவும் ஆகிய பாடங்கள் செயல் மூலம் உணரப்படுகின்றன; அறியப்படுகின்றன. மாணவரின் நாளாந்தக் குழுச் செயல்கள் மூலம் இவ்வொன்றிணைந்த அறிவு பெறப்பட்டு, மனத்தில் நன்கு நிலைநிறுத்தி வைக்கப்படுகின்றது.

எமது பாடசாலையில் 1974ம் ஆண்டிலிருந்து புதிய ஆரம்பக்கல்விப் பயிற்சியினை ஆறு வயது முடிந்த பிள்ளைகள் பெற்று வருகின்றனர். முதலாம் வகுப்புத் தொடக்கம் மூன்ரும் வகுப்பு வரை இத்திட்டம் இவ்வாண்டு எங்கள் கல்விச்சாலையில் செயற்

படுத்தப்பட்டு வருகின்றது. எம் கல்விச் சாலையைச் சேர்ந்த ஐந்து ஆசிரியைகள் இதற்குரிய விசேட பயிற்சியைப் பெற்றுள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இத்திட்டத்தின் கீழ் செயற்படும் மாணவர்க்கென ஒரு புதிய கட்டிடத்தை எம் கல்விச்சாலையின் நலன் விரும்பிகளும் பரோபகாரிகளும் "பொன்விழாக் கட்டிடம்" எனப் பெயரிட்டு, அமைத்துக் கொர்டுக்க முன்வருவார்களானால், இத்திட்டத்தின் கீழ் இயங்கும் இளஞ் சந்ததியினரின் வர்ழ்வில் உண்மையான ஒரு பொற்காலம் உதயமாகும் என்பது எமது திடமான நம்பிக்கை.

**திருமதி. க. கந்தையா**

## OUR SCHOOL

The name of our school is Idaikkadu Maha Vidyalaya. It is about twelve miles from Jaffna. It was a small school fifty years ago. This school was started in 1926. The people of this area helped its prcgress Some villagers donated lands to put up new buildings. Now the school has five buildings. There are about seven hundred pupils and thirty teachers in our school. We have a science laboratory, a large playground and a well furnished library, The pre - vocational subjects taught in our school are agriculture, dressmaking, home science, metal work, wood work, ceramics and paper making.

**V, Sengo**
8 "B"

O O O O

## MY SELF

I am a girl. I live in a small village. It is Idaikkadu. I am in grade four. My school is Idaikkadu, M. V. I read story books. I like to play games. I can speak English. I can dance and sing I can run fast. I can cook, I have a "Road Master" bicycle. I can ride it. I have many stamps and pictures. I have many friends. I am the second monitor of my class.

**S. Siva Ruby**
4 "B"

## SENIOR ENGLISH CLUB

WITH the "pressure chamber" method of language teaching catching on, the practically vitalizing concept of unionization coupled with the fact of English being one of the core subjects for the H. N. C. E. had egged us on to form the above club with the avowed object of encouraging our students, inter alia, to speak, write and intelligently interpret that universally unifying language with according to T. B. Macaulay is inferior to the tongue of Greece alone, "in force, in richness, in aptitude for all the highest purposes of the poet, the philosopher and the orator." We are sanguine that the philanthropic well-wishers of our institution whose name is legion, will, in the foreseeable future help provide us with an English room which has long been our urgent desideratum. The following were elected office-bearers for the current year.

| | |
|---|---|
| Patron: | **Mr. T. Sivanesapillai, B. A.** |
| President: | **Miss P. Shanthini** |
| Vice-President: | **Mas. V. Easwaran** |
| Editor: | **Miss A. Anandaeaswary** |
| Asst Editor: | **Mas. K. Jeyabalasingam** |
| Treasurer: | **Miss N. Muthuluxmy** |
| Secretary: | **Miss S. Silambuchelvi** |

## JUNIOR ENGLISH CLUB

The teachers of English attached to our college conjointly felt that the formation of the above club was a sine quo non for the full flowering and untrammelled development of the latent oratorical and histrionic potentialities of our pupils. Our energetic Principal, ever since he assumed duties here. had always the idea of the formation of such a club on his ever active brain. On that red letter day when the Junior English Club was inaugurated under the inspiring chairmanship of our Principal, our Co-vice Principal, Mr. T. Sivanesapillai, B. A., Mr. S Sritharan and Mr. S. Shanmugampilli, Head of our English Section, spoke at some length adumbrating, without much fanfaronade, some practical ways and means of improving english that lie well within the reach of our students. The speakers tried hard to drive home to the audience the simple philological wisdom lying enshrined in the newfangledly minted maxim, "Take care of the sounds, the sense will take care of itself." The audience almost encored some students who presented interesting items. The following were elected office-bearers for the current year:

| | |
|---|---|
| President: | **Mr. S. Shanmugampillai** |
| Vice-President: | **Mas. T. Kirupakaran** |
| Secretary: | **Miss. S Siveswary** |
| Treasurer: | **,, V. Bhawany** |
| Asst. Treasurer: | **Mas. S. Balakumar** |

# Cosmic Rapport

A. T. SIVANESAPILLAI, B. A.



The mountain and the valley
With the ever green tea;
The grass and the tree
With the cricket and the bee;
The many – splendoured rainbow
That lovely colours splash,
All in a flash
As Nature's brightest show;
The dimming, delicate mist,
The gushing, gnarling gust,
The deafening din and dust
And the old coats a must;
Shimmering, shivering, sylvan streams
Sliding slowly under silvern beams;
The solemn temple bell,
The swelling holy yell;
The school – girls' giggle,
And the attendant wriggle;
The rains gently pattering,
The women ever chattering;
The mad man's cursing,
The gentle mum's nursing;
The hands a – shivering
The leaves a - quivering,
The street lights a – flaring,
The megaphones a – blaring;
The market hustle – bustle
And the silk sarees' rustle;
The babe's cosy cuddling,
The sweet, soft fiddling;
The children's naive innocence,
Exuding inner radiance;
The fumigating fragrance
Of ever - burning incense,
Kindling heavenly remembrance;
A cosmic rapport unfold,
Express God's messages untold!

# My Little Pussy Cat

I had a little Pussy
Who was always so busy;
She was a gay creature
Full of gentle nature.

My little little pussy cat
Whose bed was oft a good mat;
Would frighten away each big rat
That tried to nibble my new hat

Daily she had her fish
As much as she could wish;
With her tongue as soft as silk
She often licked her cup of milk.

Our hearts all became lead
Our eyes with tears turned red,
That day we found her dead
Lying calmly on her bed.

We are so sad and full of care
Life without her is very bare;
But in dreams I see her stare
And then her mews I hear.

P. Shanthini
H. N. C. E.

# கால் நூற்றுண்டாக நாம்............

**1926**ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட எங்கள் வித்தியாலயம் ஐம்பது ஆண்டை நிறைவு செய்து இன்று சிறப்பாகத் தனது பொன்விழாவைக் கொண்டாடுகின்றது. கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பாடசாலையின் வளர்ச்சிக்கு அயரா துழைத்துவரும் பழைய மாணவர் சங்கம், தனது வெள்ளிவிழாவைப் பாடசாலையின் பொன் விழாவோடு சேர்த்துக் கொண்டாடும் இவ்வேளையில், இச்சங்கத்தின் கால் நூற்றுண்டுச் சேவையைப் பற்றிக் குறிப்பிடுவதில் பெருமை அடைகின்றோம். மேலே தொடருமுன், எமது சங்கத்தில் தொடக்க காலச் செயலாளரும், வெள்ளி விழா ஆண்டின் உபதலைவர்களில் ஒருவருமான திரு. க. விசுவலிங்கம் அவர்கள், கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக எமது சங்கத்தின் மூலம் பாடசாலைக்குத் தொடர்ந்து ஆற்றிவரும் அளப்பரிய சேவைகளைப் பாராட்டுவதும் எமது கடமையாகும்.

எமது சங்கம் அதன் தாபித ஆண்டிலேயே, பாடசாலையின் வெள்ளி விழா ஞாபகார்த்தமாக, மனையியல் கூடத்தை அமைக்கும் முயற்சியை மேற்கொண்டமை, சங்க வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்தது. இவ்வாரம்பப் பணிக்குப் பொதுமக்கள் அளித்த ஆதரவு, இச்சங்கம் தன்னை வலுப்படுத்துவதற்கு ஏதுவாயிற்று. கல்லூரியின் வளர்ச்சியில் தொடர்ந்து கவனம் செலுத்திவந்த எமது சங்கம், காலம் சென்ற கல்லூரித்தல முகாமையாளர் திரு. ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் ஆற்றிய சேவைகளைப்பாராட்டும் முகமாக, 1965-ல் மாபெரும் விழா ஒன்றினை எடுத்து, அவரால் அமைத்துக் கொடுக்கப்பட்ட விஞ்ஞான மண்டபத்திற்கு. அவ்விழாவின்போது ''வேலுப்பிள்ளை மண்டபம்'' எனப் பெயர் சூட்டி அன்னாரைக் கௌரவித்தது அடுத்து எமது கல்விச்சாலையில் சுகாதார வசதிகளில் கவனம் செலுத்திய பழையமாணவர் சங்கம், 1967இல் இரண்டாயிரம் ரூபா செலவில் ஒரு மலசல கூடத்தை அமைத்துக் கொடுத்தது.

பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் வளர்ச்சிக்காக அவ்வப்போது ஆற்றி வரும் சேவைகள் பல. 1968—1969ம் ஆண்டுகளில் பழைய மாணவர் சங்கம் ஏறக்குறைய பதினையாயிரம் ரூபா செலவு செய்து, எமது கல்லூரியின் இன்றி அமையாத தேவையாய் விளங்கிய நூலகக் கட்டிடம் ஒன்றைத் தனது சேவையின் அழியாச் சின்னமாக அமைத்துக் கொடுத்தது. எமது மதிப்பிற்குரிய திரு. நா. மாணிக்க இடைக்காடர் அவர்களின் பெருமுயற்சியின் பயனுக, ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான கலாச்சாரத் தாபனம் (Unesco) ரூபா ஏழாயிரம் பெறுமதியான தளபாடங்களையும், நூல்களையும் எமது நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்தது. 1970ஆம் ஆண்டு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு, தமிழ்மூலம் நூல்நிலையப் பயிற்சி அளிப்பதற்கு எமது கல்லூரி நூலகம் தெரிந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

மேலும் எமது சங்கம் 1969—71 ஆம் ஆண்டுகாலப் பகுதியில் அங்கத்தவர்களிடமிருந்தும், ஆதரவாளர்களிடமிருந்தும் நிதி சேர்த்து, ரூபா 12,000/- செலவில் பாடசாலையின் வடக்குப் புறத்தில் கற்பாறைகளாக இருந்த நிலத்தைத் திருத்தி, விளையாட்டு மைதானம் ஒன்றை அமைத்து, அதற்குச் சுற்றுமதிலும் கட்டிக் கொடுத்தது. பெருந்தொகைப் பணத்தைச் செலவழித்து நிறைவேற்ற வேண்டிய இப்பணியைப் பழைய மாணவரும் ஆதரவாளர்களும் தங்கள் உடலுழைப்பைச் சிரமதானமாக நல்கிக் குறைந்த செலவில் நிறைவேற்றி முடிக்க உதவினர். மேலும் எமது சங்கத்தினர், கல்லூரியின் வேலிகளைச் செப்பமிடுதல், கிணற்றைச் சுத்தம் செய்தல், சுற்றுடல்களைத் துப்புரவு செய்தல் போன்ற பணிகளைச் சிரமதானப் பணியாய் நிறைவேற்ற, ஆசிரியர்களுடனும் மாணவர்களுடனும் தோளோடு தோள் நின்று பக்கபலமாய் உழைத்து வருகின்றனர்.

கல்லூரியில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளுக்கு உற்சாகமளித்து நிகழ்ச்சிகள் சிறப்புற எமது சங்கம் எல்லா விதத்திலும் ஒத்துழைப்பும் உதவியும் நல்கி வருகின்றது. இதைவிட வருடா வருடம் புத்தாண்டு தினத்தையொட்டி விளையாட்டு விழாக்களையும் கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தி மக்களுடைய ஆதரவையும் நல்லெண்ணத்தையும் பெற்றுப் பேரார்வத்துடன் சேவையாற்றி வருகின்றது.

எமது சங்கம், பாடசாலையின் விஞ்ஞான கூடத்துக்குத் தேவையான உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்கத் தன்னாலியன்ற நிதியுதவி அளித்து வந்துள்ளது. தற்போது பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினரால் கட்டிமுடிக்கப்பட்டிருக்கும் புதிய விஞ்ஞான கூடத்திற்கும் எமது சங்கம் தன்னாலியன்ற உதவி வழங்கியுள்ளது. விவசாயத்துக்கென அரசால் சுவீகரிக்கப்பட்ட நிலத்தைத் திருத்துவதில் எமது சங்கம் இவ்வாண்டு மிக்க ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளது. அங்கத்தவர்களினதும் ஆதரவாளர்களினதும் நிதிஉதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் திருத்த வேலையில் இதுவரை அரைப்பங்கு பூர்த்தியாக்கப்பட்டுள்ளது.

இவை தவிர, விடுமுறைக் காலங்களிலும் ஆசிரியப் பற்றாக்குறை ஏற்படும் காலங்களிலும், பாடசாலையில் ஆசிரியர்களின் வேண்டுகோளுக்கமைய, விசேட வகுப்புக்களை நடாத்துவதற்கு, இளைப்பாறிய ஆசிரியர்களின் சேவையைப் பெற்றுக் கொள்வதில் இச்சங்கம் உற்சாகம் காட்டி வருகிறது.

காலத்திற்குக் காலம், சங்கத்திற்கு நிதி சேகரிக்கும் நோக்கமாக, எமது சங்கம் பல நிதிஉதவிக் காட்சிகளையும் ஒழுங்குபடுத்தி நடாத்தியுள்ளது.

இவ்வேளையில் எமது காப்பாளர் திரு. நா. மாணிக்க இடைக்காடர் அவர்கள் எமது சங்கத்தின் மூலம், எமது கல்லூரிக்கு ஆற்றிவரும் சேவைகளைக் குறிப்பிடுவது எமது கடமையாகும். அன்னார் எமது வித்தியாலயத்தில் இருந்து பல்கலைக் கழகத்தில் விஞ்ஞானத்துறையில் படிப்பை மேற்கொள்ளும் சிறந்த மாணவருக்கு அப்படிப்பு முடியும் வரை உபகாரப் பணம் அளிப்பதற்கான ஒரு அரிய திட்டத்தை உருவாக்கி அதைப்பற்றி எமது சங்கத்துக்கு அறிவித்துள்ளார். மேலும், எமது வித்தியாலய நூலகத்திற்கு ஆண்டுதோறும் நூல்களைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு, பண உதவி செய்யும் திட்டத்தை மேற்கொண்டுள்ளார். இதுவரை கல்லூரி நூலகத்திற்கு நூல்களைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு, அவர் ரூபா 1500/- எமது சங்கத்தின் மூலம் அன்பளிப்புச் செய்துள்ளனர்.

காலத்துக்குக் காலம் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினாலும், எமது சங்கத்தினாலும் கல்லூரியில் அமைக்கப்பட்டு வரும் கட்டிடங்களுக்கு வரைபடங்கள் வரைந்தும், பண உதவி அளித்தும், அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கியும் வரும் எமது சங்க அங்கத்தவர்களுள் ஒருவரான திரு. வே. நமசிவாயம் அவர்கள், தமது பாட்டனாராகிய காலஞ்சென்ற சட்டம்பியார் வேலுப்பிள்ளை நமசிவாயம் அவர்களின் ஞாபகார்த்தமாக, விஞ்ஞான ஆய்வுகூடத்தின் பிரதான மண்டபத்திற்கான முழுச் செலவையும் ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதனை, இங்கு மிக்க மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுக் கொள்ளுகிறோம்.

இற்றை வரை, எமது கல்லூரியின் பன்முகப்பட்ட வளர்ச்சிக்காகப் பல வழிகளிலும், எமது கருத்துக்களையும் திட்டங்களையும் செவ்வனே செயற்படுத்தத் தம்மாலியன்ற முறையில், எம்மோடிணைந்து ஆலோசனைகள் கூறியும், அயராதுழைத்தும், காலத்துக்குக் காலம் ஞாலத்திலும் மாணப் பெரிய உதவிகள் பலவற்றை உவந்து நல்கி வரும், செம்மனச் செல்வர்களாகிய அன்பர்கள் அனைவருக்கும், நன்றிகள் பல நவில்வதில் பேருவகை கொள்ளும் பழைய மாணவர் சங்கத்தினர், என்றென்றும் அன்பர்கள், அனுதாபிகள், ஆதரவாளர்கள், அனைவரினதும் அளப்பரிய பேராதரவையும், "செய்யாமல் செய்யும்" சேவைகளையும் நாடித் தம் நேசக்கரங்களை நீட்டுகின்றனர்.

**செ. கைலாசபதி**
செயலாளர்
இடைக்காடு ம. வி. - ப. மா. ச.

# விருதுகள் அன்பளிப்புச் செய்தோர்

1. வெற்றிக்கேடயம் — பழைய மாணவர் சங்கம்
2. வெற்றிக்கேடயம் — இடைக்காடு சனசமூக நிலையம்
3. வெற்றிக்கேடயம் — S. பெரியண்ணுபிள்ளை அன்ட் கம்பனி, கொழும்பு
4. இரண்டுவெற்றிக் கிண்ணங்கள் — இடைக்காடு கலைமகள் சனசமூக நிலையம்
5. வெற்றிக்கிண்ணம் — N. K. மயில்வாகனம் அன்ட் கம்பனி, கொழும்பு
6. வெற்றிக்கிண்ணம் — யாழ். சாந்தி பிலிம்ஸ் லிமிற்றெட்
7. வெற்றிக்கிண்ணம் — திரு. திருமதி S. முருகுப்பிள்ளை
8. வெற்றிக்கிண்ணம் — திருமதி இராசம்மா கந்தையா
9. வெற்றிக்கிண்ணம் — திரு S. தம்புச்சாமி
10. வெற்றிக்கிண்ணம் — திரு. K. சின்னத்தம்பி
11. காலஞ்சென்ற திரு. K. செல்லமுத்து ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் — திரு. S. கைலாசபதி
12. காலஞ்சென்ற திருமதி தெய்வானை செல்லமுத்து ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் — திரு. S. கைலாசபதி
13 காலஞ்சென்ற திரு. A வேலுப்பிள்ளை ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் — திரு. V. சின்னையா
14. காலஞ்சென்ற திரு. S. வடிவேலு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் — திரு. M. சரவணமுத்து
15. முன்னாள் அதிபர் திரு. R. H. ஐயர் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் — திரு. V. சிவகுரு
16. காலஞ்சென்ற திரு. S. A. தம்பிராசா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் — செல்வி T. S. சிவரூபி
17. காலஞ்சென்ற திரு. S. A. சிவசம்பு ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் — திரு. A. T. சிவநேசபிள்ளை
18. காலஞ்சென்ற செல்வி T. ஞானம்பிகை ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் — செல்வி S. தில்லைஞானச் செல்வி
19. காலஞ்சென்ற திருமதி S. இரத்தினம்பிகை ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணம் — திருமதி S. சிவகாமிப்பிள்ளை

# பொன்விழாக் காணும் நம் ஆலயம்

ஏர் மலி இடைக்காட்டினில் எல்
ஏற்றி வைக்கும் தீபம் போல்
சீர் மிளிர் நம்மாலயம் ஞானம்
பார் முழுதும் பரப்புதே !

பழுத்த மரத்தை நாடும்
பறவைக் கூட்டம் போல
விழிப்புணர்ச்சி நாடி நம்
வித்தியாலயம் வாரீர் !

கல்விச்சாலை ஓங்கி
நல்ல பேறு கொண்டு
பெயரும் புகழும் நாட்ட
உயர் வகுப்பு (இ)ரண்டு கண்டோம் !

பட்டம் பெற்ற சிலரும்
பயிற்றப் பட்ட பலரும்
திட்டம் தீட்டி எங்கள்
தேர்ச்சிக் குதவு கின்றார் !

கல்விக் கந்தோர் ஈருக
நல்ல திகாரிகள் யாவர்க்கும்
மெல்ல எங்கள் புகழ் பரவ
வல்லவராக நாமுழைப் போம் !

பெற்றாராசிரியருடன் சேர்ந்து
பற்றுடன் உழைக்கும் ப. மா. ச.
சற்றும் தளர்ச்சி கண்டிடாமல் நம்மைக்
கற்றோராக்கத் தொண்டு செய்வர் !

பன்னருஞ் சிறப்புக்களைச் சேர்த்து
மன்னு புகழை நமக் களிக்கும்
பொன் விழாவின் பொலிவதனை
என்னென்றுரைப்பேன் யான் சொல்லில் !

**வேல். ஸ்ரீஸ்கந்தராசா**
க.பொ.த.ப. C (உயர்தரம்)

# விவசாயத் திட்டங்களில் எமது இளைஞர்

"செய்யுந் தொழிலே தெய்வம் அதில்
திறமைதான் நமது செல்வம்''

உணவு உற்பத்தித் திட்டத்தின் கீழ் விவசாயம் செய்வதற்காக இளைஞர்களுக்கு அரசாங்கம் காணிகளை வழங்கி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இளைஞர் விவசாயத் திட்டங்களில் விசுவமடு, முத்தையன்கட்டு, அக்கிராயன், திருவையாறு ஆகிய இடங்களில் காணப்படுபவை குறிப்பிடத்தக்கன. எமது கிராமத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்கள் இத்திட்டங்களின் மூலம் நாட்டின் செல்வத்தை விருத்தி செய்வதோடு தமது பொருளாதார நிலையையும் உயர்த்தி வருகின்றனர்.

இத்திட்டங்களில் விசுவமடு படித்த இளைஞர் விவசாயத்திட்டம் உயர்ந்த வருமானத்தை அளிக்கும் திட்டமாகும். இத்திட்டத்திற்குப் பல கிராமங்களிலிருந்தும் இளைஞர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். எமது சிறிய கிராமத்திலிருந்து ஏறத்தாழ இருபது பேர் வரையில் இத்திட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை எமக்குப் பெருமையளிப்பதாகும். இவர்கள் எல்லோரும் எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. விவசாய நுட்பங்களை நன்கறிந்து, விடா முயற்சியுடன் உழைத்து அதிக வருமானத்தைப் பெற்றுவரும் இவ்விளம் விவசாயிகள் ஏனையோர்க்கு முன்மாதிரியாக விளங்குகின்றார்கள் என்று கூறினால் அது வெறும் புகழ்ச்சியாகாது. இவர்களிலொருவர் விவசாயத் துறையில் நிலைநாட்டிய சாதனையைப் பலரும் அறியும் வண்ணம் 'கமத்தொழில் விளக்கம்' என்னும் விவசாயச் சஞ்சிகை இவரின் படத்தைத் தனது அட்டையில் வெளியிட்டதோடு அவரோடு நடாத்தப்பட்ட பேட்டி ஒன்றையும் பிரசுரித்தது. எமது பாடசாலையில் படித்து, பரீட்சைகளில் திறமையாகச் சித்தியெய்தி, உத்தியோகம் தேடிக்கொள்ளக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்த போதிலும் இவர்கள் உத்தியோக மோகங்கொண்டு, உத்தியோக வேட்டையில் வீணே காலத்தைக் கழிக்காது உலகினர்க்கு உணவூட்டும் தொழிலாகிய விவசாயத்தில் ஈடுபட்டுழைத்து, இன்று உழவு யந்திரங்கள், பொதி உந்துகள் போன்ற ஊர்திகளின் சொந்தக்காரர்களாக விளங்குகின்றனர், விசாலமான, வசதிகள் பலவற்றோடு கூடிய இல்லங்களை எமது கிராமத்தில் அமைத்து கிராமத் தோற்றத்தையே மாற்றியுள்ளனர். தன்னலமற்ற, பொதுநல சேவை மனப்பான்மைமிக்க கரும வீரர்களாகிய இவர்கள் எமது கிராமத்தில் நடைபெறுகின்ற நல்ல பல காரியங்களுக்குத் தமது உடல் உழைப்பையும் பொருளுதவியையும் தந்து கிராமத்தை முன்னேற்றி வருகின்றனர். எமது பாடசாலையின் வளர்ச்சியில் ஆர்வம் கொண்டு உழைத்துவரும் இவர்கள் தமது ஓய்வு காலங்களில் சிரமதான வேலைகளை மேற்கொண்டு பல வழிகளிலும் நமது வித்தியாலயத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தேவையேற்படும் பொழுதெல்லாம் மனமுவந்து பொருளுதவியும் செய்து வருகின்றனர்.

முன்பொரு காலத்தில் உத்தியோக மாப்பிள்ளைகளுக்குத் தனி மவுசு இருந்தது. இந்நிலைக்குக் காரணங்கள் இல்லாமலில்லை. கவர்ச்சிகரமான மாதச் சம்பளம், பாதுகாப்பான இளைப்பாற்றுச் சம்பளம் ஆகியன கலியாணச் சந்தையில் உத்தியோக மாப்பிள்ளைகளுக்கு அன்று மதிப்பை ஏற்படுத்தியிருந்தன. இதனால் விவசாயிகள் கலியாணச் சந்தையில் தேடுவாரற்ற சரக்குகளாகக் கருதப்பட்டனர். இன்று இந்நிலை மாறி வருகின்றது இம்மாற்றத்தை ஏற்

படுத்தியவர்கள் படித்த இளம் விவசாயிகளே!

இறுதியாக, படித்த இளம் விவசாயிகளுக்கு ஒரு பணிவான வேண்டுகோள். விவசாயத் துறையில் துரிதமாக முன்னேறி வரும் எமது கிராமமக்கள் அனைவரும் எக்காலத்திலும் இத்துறையையே தஞ்சமாகக் கொண்டு வாழமுடியாது; எம்மவரில் ஒரு பகுதியினராவது கைத்தொழில் துறையில் ஈடுபட்டு உழைக்கும் வாய்ப்புக்களை எமது கிராமத்திலேயே ஏற்படுத்தினால்தான், எம் மத்தியில் தொழில் வளமும் பொருள் வளமும் சிறந்தோங்கும். அப்போதுதான் மனிதவளம் பூரணமாகப் பயன்படுத்தப்படும். எமது கிராமத்தில் கைத்தொழிற் சாலைகளேதும் கிடையாது. இதனால் க. பொ. த. ப. (சாதாரணப்) பரீட்சையில் சித்தியெய்திய பலர் வேலைவாய்ப்பின்றி வீணே காலத்தைக் கழிக்கின்றனர்.

இவர்களுக்கேற்ற தொழில் வாய்ப்புக்களை எமது கிராமத்தில் ஏற்படுத்தும் விடயத்தில் முன்னின்று உழைக்கவேண்டியவர்கள் படித்த இளம் விவசாயிகள் ஆவர். இவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்க எமதூர்த் தொழில் வல்லுநர்களும் பெரியோர்களும் முன்வருவார்கள் என நம்புகிறோம்.

பூமிதிருத்திப் பொன்னுலகம் காண்
ஆவியில் இனிய அன்பர்கள் வாழ்க!
மேழிபிடித்து மேதினி ஓம்பும்
தோழநின் தொண்டுகள் தொடர்ந்து பொலிக!

**க. பாலசுப்பிரமணியம்** B. A. (Cey.)
முகாமை உதவியாளர்
சிறுகைத்தொழில்
கச்சேரி
மட்டக்களப்பு.

## புன்னகை என்னவிலை?

- ★ செலவேதும் இல்லை? வரவுகள் பல.
- ★ கணப்பொழுதில் நிகழ்ந்தாலும், விளைவுகள் நிலையானவை.
- ★ இல்லத்தில் சந்தோசத்தையும், வியாபாரத்தில் நல்லெண்ணத்தையும் நண்பர்களிடம் நன்மதிப்பையும் அளிக்கின்றது.

**டேல் கார்னி**

திரட்டியவர்: **சி. நல்லதம்பி**

# பழைய மாணவரின் புதுமைப் புரட்சி

**1965ம்** ஆண்டு சித்திரை மாதத்தில் ஓர் இரவு. எமது வித்தியாலய வளவெங்கும் ஒரே ஒளிமயம். எங்கு திரும்பினாலும் மக்கள் கூட்டம். அங்கு குழுமியிருந்தோர் உள்ளங்களில் எல்லை கடந்த குதூகலம். இம் மகாவித்தியாலயத்தின் முன்னாள் தலமைகாமையாளர் அவர்களுக்குப் பழைய மாணவர் எடுக்கும் விழாவின் காட்சிகள் தான் இவையெல்லாம். பாடசாலை மாணவ மாணவியரின் அழகுறு ஆடல் பாடல்கள்; அறிவுசார் பேச்சுக்கள், நாடகங்கள் — பழைய மாணவரின் கண்கொள்ளாக் கலைநிகழ்ச்சிகள். இவையெல்லாம் அன்றைய விழாவில் இடம்பெற்றன. விடியவிடிய நடைபெற்று இனிதே நிறைவேறிய விழாவின் இன்ப நினைவுகளுடன் காலையிலேயே தத்தம் கடமைகளைக் கவனிக்கச் சிலர் சென்றனர். பகலென்றும் பாராமல் தூங்கச் சென்றனர் பலர். ஆயினும் ஒருசிலரால் வேறு வேலைகளில் ஈடுபடவும் முடியவில்லை – தூங்கவும் முடியவில்லை. அவர்களின் உள்ளங்களிலே ஒரு விழிப்பு – புதுவித விழிப்பு ஏற்பட்டிருந்தது. விழாவிலே சிறப்பு அதிதியாகக் கலந்து கொண்ட இவ் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்களுள் தலைசிறந்து விளங்கியவரும், பின்னாள் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் பேராதனை வளாகத்தில் தமிழ்த்துறையின் பீடாதிபதியும் பேராசிரியருமான காலஞ்சென்ற திரு. செல்வநாயகம் அவர்களின் உள்ளத்திலிருந்து முதல் நாள் இரவு வெளிப்பட்ட கருத்துக்கள் எம் இளைஞர்கள் சிலரின் உள்ளத்திலே இவ் விழிப்பை ஏற்படுத்திவிட்டன. ''நான் இப் பாடசாலையின் அதிபராகக் கடமையாற்றிய காலத்திலே மக்கள் பாடசாலையின் வளர்ச்சியில் காட்டிய அக்கறையைக் கண்டு வியந்தேன்... ... இன்று இங்கு வரும்போது மூன்றடுக்குக் கட்டிடமொன்றை எதிர்பார்த்தேன்'' என அப்பெரியவர் தமது உரையில் குறிப்பிட்டிருந்தார். பழைய மாணவர் சிலரின் உள்ளத்தில் இச்சொற்கள் அன்று ஏற்படுத்திய விழிப்புப் பழைய மாணவர் சங்கப் பணிகளில் எல்லாம் பிரதிபலித்துக் கொண்டே வருவதை நாம் காணமுடிகிறது. முதலில், பாடசாலைக்கு அத்தியாவசியமயன மலசல கூடங்களின் பற்றுக் குறையை நிவிர்த்தி செய்யும் முயற்சியைப் ப. மா. ச. மேற் கொண்டது. எனினும், அவர்களின் செயற்பாட்டின் வேகம் வளர்ந்து வரும் பாடசாலைத் தேவைகளுக்கு ஈடுகொடுக்க முடியவில்லை.

1968ல் ஒரு சித்திரை இரவு – பால் போன்ற நிலவு. பாடசாலைக்கு அருகாமையில் பழைய மாணவர் சிலர் காணப்படுகின்றனர். தமது அடுத்த நடவடிக்கைகள் பற்றிப் பரவலாக விவாதித்துக் கொண்டிருக்கின்றனர். அனைவரின் மத்தியிலும் சொற்ப நேர அமைதி நிலவுகின்றது. பின்னர் மேலும் கருத்துக்கள் பல பரிமாறப் படுகின்றன. அன்று இரவு வெகு நேரம் வரை பேசிவிட்டுப் பிரியும் போது ஓர் உன்னத திட்டம் பற்றிய கருத்து அங்கு உதயமாகியிருந்தது. தொடர்ந்து இடம் பெற்ற ப. மா. ச. வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் பின்னர் சங்கம் விறு விறுப்பாகத் தொழிற்பட ஆரம்பித்தது. இதன் முதற்படி தான் 1968 இல் ஆரம்பிக்கப் பட்டு 1969 இல் திறந்து வைக்கப்பட்ட ''சியவச நூலகம்''. இதனைத் தொடர்ந்து விளையாட்டு மைதானம் - மேலும் பல பணிகள் - வருடா வருடம் ப. மா. சங்கத்தினரால் நடாத்தப்பட்ட விளையாட்டு விழாக்கள், கலை விழாக்கள் ஆகியன பாடசாலை - மக்கள் இணைப்பை மேலும் வலுப் படுத்தின. ப. மா. ச. முயற்சிகளை ஊக்கும் வகையில் அவ்வப்போது கல்வித் திணைக்களமும் நிதியுதவி, பொருளுதவி அளிக்க முன் வந்தது. இச் சல சலப்பில் இதுகாறும் தூங்கிக் கிடந்த பெ. ஆ. சங்கமும் புத்துயிர் பெற்று செயலில் இறங்

கியது. விரைவில் இவ்விரு இயக்கங்களும் ஒன்றிணைந்து செயற்பட ஆரம்பித்ததின் விளைவாகப் பாடசாலையில் மேலும் பல ஆக்க வேலைகள் இடம் பெற்றன. மூன்று அடுச்குக் கட்டடம் அமைக்கக் கூடிய முறையில் விஞ்ஞானக் கூடக் கட்டிடத் தின் அத்திவாரம் இடப்பட்டு முதலாவது மேலடுக்கும் பூர்த்தியாக்கப்பட்ட நிலையில் உள்ளது. இவ்வாருகச் சுமார் பத்து ஆண் டுகளுக்கு முன்னர் எமது இளைஞரின் உள் ளத்தில் முளைவிட்ட புரட்சி இன்று பரவி யுள்ள அளவோடு நில்லாது ஆண்டாண் டாக எம் வருங்கால இளைஞர் உள்ளங்க ளிலும் பரவி எமது கல்விக் கூடம் மேலும் வளர்ச்சியுற உழைப்போமாக!

இது இவ்வாறிருக்க, இதே பத்தாண்டு காலப் பகுதியில் இன்னொரு வகையான புரட்சியும் எம் இளைஞரிடையே ஏற்பட் டுள்ளமையை நாம் காணமுடிகிறது. இதனை நாம் ''பசுமைப் புரட்சி'' எனக் குறிப்பிடுதல் சாலப் பொருந்தும். முன்னர் குறிப்பிட்ட புரட்சி மூலமாக இளைஞரின் செல்வாக்கை எமது கல்விக் கூடத்தின் வளர்ச்சியில் காணமுடிகிறது. பின்னைய புரட்சி மூலமாக எமது இளைஞரின் வாழ் வில் கல்விக் கூடத்தின் செல்வாக்கை நாம் காணலாம். படித்து விட்டால் அர சாங்க உத்தியோகம் தான் செய்ய வேண் டுமென்ற தவருன கருத்தை உள்ளத்தி னின்றும் உதறியெறியும் கதை தான் பசுமைப் புரட்சி ஆகும். படித்து முடித்த தும் உத்தியோக வேட்டையில் இறங்கி, வேலையில்லாத் திண்டாட்டம் என்னும் பேயினுல் அல்லற் பட்டு வந்த எம் இளை ஞரிடையே 1966 அளவில் ஒரு திருப்பம் ஏற்பட்டது. விவசாயமே வாழவைக்கும் தொழிலென்பதை உணர்ந்த எமது இளை ஞர்களில் பலர் விஸ்வமடு படித்த வாலி பர் திட்டத்தில் சேர்ந்து கொண்டனர் ஆரம்பக் காலத்தில் அவர்களுக்குச் சில கஷ்டங்களும், அசௌகரியங்களும் ஏற்பட் டன. இவற்றைப் பொருட் படுத்தாத அவர்கள் விரைவில் முன்னேற்றப் பாதை யில் வீறு நடை போடத் தொடங்கினர். இதனைக் கண்ட மேலும் பலர் இத்துறையை விரும்பி நாடினர். தம்மைச் சூழ இருந்த காட்டை அழித்து பசும் பயிர்களுக்கு நடுவே செழுமை சூழ வாழும் எம் படித்த இளைஞர்கள் பலர் நாட்டைக் காக்கும் நற் பணியான விவசாயத்தில் ஈடுபட்டுள் ளமை எமக்குப் பெருமை தருகிறது. இன்று சீரும் சிறப்பும் பெற்று வாழும் அவர்கள் தாம் கல்வி பயின்ற பாடசா லையை மறக்கவில்லை. பாடசாலைப் பணி யிலே சிரமதானம் என்றதும் சிரம் கொடுத் துப் பணி செய்யவும், நிதியுதவி கோரும் போது வாரி வழங்கவும் விழாக் காலங்க ளில் விழாக்களை விமரிசையாக கொண் டாட உதவி செய்யவும் முன்வரும் எமது இளைஞரின் சேவை மனப்பான்மை பன் மடங்கு ஓங்கி வளரப் பரமனை வேண்டுகி ருேம்.

**வே. சுவாமிநாதன்**
மின் முகாரி,
உள்ளூராட்சி மன்றம்,
ஏழாலை.

## இப்படிச் சொன்ஞர்கள்

★ கல்வியின் வேர்கள் கசப்பானவை ஆனுல் அதன் பழங்களோ மிக இனிப்பானவை.

— அரிஸ்டாட்டில்

★ கல்வி, ஏழைக்கு முதல், பணக்காரனுக்கு வட்டி.

— மென்

# எமது பழைய மாணவர் பல்வேறு துறையில்.......

திரு. க. அருணாசலம் விவசாயத் திணைக்களம்.
,, இ. க. ஆறுமுகசாமி சீனிக்கூட்டுத்தாபனம், அம்பாறை.
,, க. ஆறுமுகசாமி B. A. இங்கிலாந்து.
,, மு. ஆறுமுகசாமி B. Sc. இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.
,, க. ஆறுமுகம் உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
,, சி. ஆறுமுகம் அதிபர், சரஸ்வதி மகாவித்தியாலயம் அச்சுவேலி.
செல்வி சா. ஆறுமுகம் ஸாகிராக் கல்லூரி, கல்முனை
திரு. க. ஆறுமுகானந்தன் கட்டிடக் கலைஞர், கட்டிடத் திணைக்களம்
,, அ. இரத்தினசபாபதி நில அளவைத் திணைக்களம்
திருமதி சி. இராசரத்தினம் ஆசிரியை, உடுப்பிட்டி பெண்கள் பாடசாலை
திரு. இ. இராசநாயகம் புலோலி ப. நோ. கூ. ச.
செல்வி ச. இராசையா B. A. ஆசிரியை, திருகோணமலை
திரு. நா. இராசையா புகையிரதத் திணைக்களம்
,, து. இராசா ஆசிரியர், கிளிநொச்சி
,, சி. நா. இராசா உள்ளூராட்சித் திணைக்களம்
,, பொ. இராமகிருஷ்ணன் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர் வைத்தியசாலை, குருநாகல்
,, க. இராமச்சந்திரன் ஆசிரியர் வற்றாப்பளை ம. வி.
,, பொ. இராமச்சந்திரன் தபாற்கந்தோர், மத்துகம
திருமதி சி. இராமச்சந்திரன் ஆசிரியை, இடைக்காடு ம. வி.
திரு. பொ. இராமலிங்கம் தபாற்கந்தோர், மாங்குளம்
,, பொ. இராமுப்பிள்ளை சுங்கத் திணைக்களம், கொழும்பு
திருமதி இ. இராமுப்பிள்ளை ஆசிரியை, கொழும்பு
திரு. பொ. இளையதம்பி வருமானவரித் திணைக்களம், கொழும்பு.
திரு. க. இலட்சுமண சர்மா இலங்கை வங்கி, விவசாய விளைவுப் பெருக்கக் குழு புத்தூர்
,, இ. ஏகாம்பரம் புகையிரத நிலையம், அனுராதபுரம்
,, ஒப்பிலாமணி கிராமசபை, மிருசுவில்
,, வே. இரத்தினம் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு
செல்வி இ. கணபதிப்பிள்ளை வைத்தியசாலை, அச்சுவேலி
திரு. க. கணபதிப்பிள்ளை தபாலதிபர், யாழ்ப்பாணம்
,, செ. கணபதிப்பிள்ளை B. A. பரிஜோவான் கல்லூரி, யாழ்ப்பாணம்
,, த. கணபதிப்பிள்ளை ப. நோ. கூ. ச. அச்சுவேலி
செல்வி ம. கணபதிப்பிள்ளை B. A.
திரு சி. கணேசமணி நீர்விநியோக வடிகாலமைப்புச் சபை
,, வே. கணேசமூர்த்தி புகையிரதத் திணைக்களம்
,, வை. கதிர்காமநாதன் பி. ஆ. பொ. தா.
,, வே. கதிர்காமு ப. நோ. கூ. ச.
,, க. கதிர்காமு ஆசிரியர், அச்சுவேலி சரஸ்வதி ம. வி.
,, ம. கதிரவேலு கட்டிடத் திணைக்களம், மதவாச்சி
திருமதி ப. கதிரவேலு ஆசிரியை, இடைக்காடு ம. வி.

திரு: ந பு. கதிரித்தம்பி ஆசிரியர் இடைக்காடு ம. வி.
,, ஆ. கந்தசாமி கச்சேரி, புத்தளம்
,, இ. க. கந்தசாமி கணக்காளர், கொழும்பு
,, சி. கந்தசாமி R. M. P.
,, சி. கந்தசாமி ப. நோ. கூ. ச.
,, ந. கந்தசாமி B. A. அபிவிருத்தி உதவியாளர், நெடுங்கேணி
,, ந. கந்தசாமி தொழிற்றிணைக்களம் யாழ்ப்பாணம்
,, நா. கந்தசாமி R. M P. மீகல்லாவ
,, த. கந்தசாமி B A. கூட்டுறவுத் திணைக்களம்
,, மா. கந்தசாமி கிராமசபை, காத்தான்குடி
திருமதி ம. கந்தசாமி ஆசிரியை, சென். திரேசா பாடசாலை, அச்சுவேலி
திரு. வே. கந்தசாமி ஆசிரியர், தொண்டைமானாறு ம. வி.
,, ச. வே. கந்தசாமி ப. நோ. கூ. ச. அச்சுவேலி
திரு. வை. கந்தசாமி மாநகரசபை, யாழ்ப்பாணம்
,, பொ. கந்தவேள் மலேரியா தடை இயக்கம் கொழும்பு
செல்வி இ கந்தையா வைத்தியசாலை யாழ்ப்பாணம்
திருமதி க. கந்தையா ஆசிரியை, இடைக்காடு ம. வி.
திரு. க. கருணாமூர்த்தி B A. சியராலியோன்
திருமதி வி. கருணாமூர்த்தி B. A. சியராலியோன்
திரு. செ கனகசபாபதி கச்சேரி, வவுனியா
திருமதி பா. கனகசிங்கம் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
திரு. க. கிருஷ்ணசாமி கிராமசபை, மயிலிட்டி
செல்வி க. கிருஷ்ணபிள்ளை B A. தொழில் திணைக்களம், கொழும்பு
திரு. க. கிருஷ்ணர் கணக்காளர், காகிதக் கூட்டுத்தாபனம்
,, வீ. குணரஞ்சிதன் பொறியியலாளர் கட்டிடத் திணைக்களம்
,, ஐ. குணரத்தினம் சுருக்கெழுத்தாளர்
திருமதி ம. குமரகுருபரலிங்கம் B. A மொழிபெயர்ப்பாளர்
,, க. குமரகுருபரலிங்கம் கூட்டுறவுத் திணைக்களம்
,, ந. குமரேசபசுபதி B. Sc. வலி கிழக்கு ப. நோ. கூ. ச.
,, வ. குமரேசபசுபதி புகையிரதத் திணைக்களம், ஹற்றன்
,, இ. குமாரதாசன் மருந்தாளர், வைத்தியசாலை, திருகோணமலை
,, ச. கேசவமூர்த்தி B. Sc. உதவி இரசாயனப் பரிசோதகர், இரசாயனப் பரிசோதனைத் திணைக்களம், கொழும்பு
திரு. செ. கைலாசபதி B. Sc. (Hons) வரி மதிப்பாளர். உள்நாட்டு இறைவரித் திணைக்களம்.
திருமதி. தெ. கைலாசபதி பல் வைத்தியர், வைத்தியசாலை, பருத்தித்துறை.
,, கு. கைலாயபிள்ளை ஆசிரியை.
திரு. வே. சண்முகநாதன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
,, வே. சத்தியமூர்த்தி B. Sc. Dip in Ed. ஆசிரியர் இடைக்காடு ம. வி.
திருமதி. பு. சந்தையனார் ஆசிரியை இடைக்காடு ம. வி.
செல்வி த. சபாரத்தினம் ஆசிரியை. மன்னார் புனித சேவையர் பெண்கள் பாடசாலை
திரு. செ. சபாரத்தினம் பொலிஸ் திணைக்களம், கொழும்பு
,, சி. சரவணபவன் B.A. குடும்பநல திட்டத் திணைக்களம்
,, ம. சரவணமுத்து கணக்காளர்
,, சி. சற்குணநாதன் B.A. கல்வித் திணைக்களம், இரத்தினபுரி

| | |
|---|---|
| திரு. | க. சிதம்பரப்பிள்ளை நில அளவைத் திணைக்களம் |
| ,, | மு. சிவசிதம்பரஈசன் B. V. Sc. பிபிலை |
| ,, | செ. சிவசம்பு B.Sc ; Dip - in - Ed. புனித இருதயக்கல்லூரி, கரவெட்டி |
| ,, | ஆ. சிவகுரு விவசாயத் திணைக்களம், பேராதனை |
| ,, | கா. சிவசுப்பிரமணியம் கிராம அபிவிருத்தி அதிகாரி |
| ,, | சி. சிவஞானசுந்தரம் தபாற் திணைக்களம் |
| திருமதி. | செ. சிவஞானசுந்தாம் B.A. ஆசிரியை, வந்தாறுமூலை ம.வி. |
| டாக்டர் | சி. சிவஞானசுந்தரம் (நந்தி) M. B. B. S Phd. இணைப் பேராசிரியர் மருத்துவபீடம் பேராதனை |
| திரு. | பொ. சிவஞானம் (R.M.P) |
| திருமதி. | சி சிவநேசபிள்ளை B.A ஆசிரியை, இடைக்காடு ம. வி. |
| திரு. | ந. சிவபாதசுந்தரம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி |
| ,, | அ. சிவபாலன் B. A பகுதிநேர விரிவுரையாளர், தொழில் நுட்பக் கல்லூரி, யாழ்ப்பாணம் |
| ,, | க. சிவபாலன் B.Sc. (Hons.) அரசாங்க வடிசாலைகள் கூட்டுத்தாபனம் |
| திருமதி | செ. சிவமுத்துலிங்கம் சௌக்கிய சேவைத் திணைக்களம் |
| திரு | வே. சிவராசா இலங்கை போக்குவரத்துச் சபை, கிளிநொச்சி |
| திருமதி | நா. சிவநாதன் B.A. மத்திய வங்கி, கொழும்பு |
| திரு. | ஐ. சிவராசா பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம், யாழ்ப்பாணம் |
| ,, | ந. சிவலிங்கம் B Sc. ஸ்ரீ சோமாஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர் |
| ,, | க. சிவானந்தன் நில அளவைத் திணைக்களம் அனுராதபுரம் |
| ,, | நா. சிற்றம்பலம் B A. அபிவிருத்தி உதவியாளர், ஏருவூர் |
| ,, | க. சின்னத்தம்பி B. Sc. Dip - in - Ed. விரிவுரையாளர், கல்விப்பீடம் கொழும்பு வளாகம் |
| திரு. | செ. சின்னத்தம்பி தபாற்கந்தோர், மாங்குளம் |
| ,, | சி. க. சின்னத்தம்பி ஆசிரியர், இடைக்காடு ம. வி. |
| திருமதி | செ. சின்னத்தம்பி ஆசிரியை, சுப்பிரமணிய வித்தியாசாலை, கதிரிப்பாய் |
| திரு. | க. செ. சின்னத்துரை விதவை, அநாதை ஒய்வூதியத் திணைக்களம் கொழும்பு |
| ,, | த சின்னப்பாபிள்ளை தபாலதிபர், கொழும்பு |
| செல்வி | இ. சின்னப்பிள்ளை ஆசிரியை, வட்டுக்கோட்டை |
| திரு. | ப. சின்னையா B. Sc. ஆசிரியை, திருகோணமலை |
| ,, | வே சின்னையா பொறியியலாளர் இலங்கை மின்சாரசபை, கண்டி |
| ,, | மு. சின்னராசா, விவசாயத் திணைக்களம் |
| ,, | செ. சிவரத்தினம் ஆசிரியர், சுப்பிரமணிய வித்தியசாலை, கதிரிப்பாய் |
| ,, | ஆ. சீனிவாசகம் தபாலதிபர், கொழும்பு |
| ,, | செ. சுந்தரலிங்கம் ஆசிரியர், வளலாய் அ. மி. பாடசாலை |
| ,, | சி. சுந்தரலிங்கம் B. A. தபாற் கந்தோர், மட்டக்களப்பு |
| ,, | சி. சுந்தரலிங்கம் பொலிஸ் திணைக்களம், கொழும்பு |
| ,, | செ. சுந்தரவேல் தபாற்கந்தோர், வல்வெட்டித்துறை |
| ,, | சி. நா. சுப்பிரமணியம் கச்சேரி, வவுனியா |
| ,, | வை. சுப்பிரமணியம் கூட்டுறவுப் பரிசோதகர் |
| ,, | நா. சுவாமிநாதன் சிதம்பரக் கல்லூரி, வல்வெட்டித்துறை |
| ,, | வே. சுவாமிநாதன் மின்சார அத்தியட்சகர், கிராமசபை, ஏழாலை |
| ,, | ஆ. செல்லத்துரை ஆசிரியர், இராமநாதபுரம் ம. வி. |
| ,, | க. செல்லத்துரை ஆசிரியர், அச்சுவேலி ம. வி. |
| ,, | கா. செல்லத்துரை தபால் அலுவலகம், காங்கேசன்துறை |

திருமதி செ. செல்லத்துரை ஆசிரியை, இடைக்காடு ம. வி.
திரு. பொ. செல்லத்துரை V. C. O. புளியங்குளம்
திரு. க. செல்வரத்தினம் பி. ஆ. பொ. த. பூநகரி
,, க. செவ்வராசா மலேரிய தடை இயக்கம், கொழும்பு
திருமதி த. செல்வநாயகம் ஆசிரியை, இடைக்காடு ம. வி.
திரு. க. சோதிமுருகேசு ஆசிரியர்
திருமதி ம. சோதிமுருகேசு உதவி அரசாங்க அதிபர் காரியாலயம், கிளிநொச்சி
திரு. ஆ. சோமசுந்தரம் விற்பனை அபிவிருத்தித் திணைக்களம்
திருமதி சா. சோமாஸ்கந்தன் மருந்தாளர், வைத்தியசாலை, காலி
திரு. சு. ஞான சச்சிதானந்தசிவம் A. M. P. மொறவக்கை
,, சு. ஞானசபேசன் பொறியியலாளர், இங்கிலாந்து
,, சோ. தணிகாசலம் நில அளவைத் திணைக்களம், அனுராதபுரம்
,, சி. தம்பிராசா புகையிரதத் திணைக்களம் கொழும்பு
செல்வி வ. தம்பு வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
திரு. சி. தம்புச்சாமி ப. நோ. கூ. ச. அச்சுவேலி
,, த. தருமலிங்கம் ஆசிரியர், மாரீசன்கூடல்
,, ந. தாமோதரன் ஆசிரியர், ஆண்டிமுனை அ. த. க. வி.
திருமதி வ. திரிபுரபவன் நீர்ப்பாசனத் திணைக்களம், கொழும்பு
திரு. ந. திருஞானசம்பந்தர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயம், காங்கேசன்துறை
,, ஆ. திருநாவுக்கரசு தபாற் திணைக்களம்
,, க. திருநாவுக்கரசு மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்
,, சி. திருநாவுக்கரசு பொறியியலாளர் விவசாயத் திணைக்களம் கண்டி,
,, இ. திருமேனி ஆசிரியர்
திருமதி சி. துரைசிங்கம் B. Sc. ஸாம்பியா
திரு. சி. தேவநாயகம் கணக்காளர் குண்டன் மால்ஸ், கொழும்பு
,, ஐ. தேவராசா புகையிரதத் திணைக்களம்
,, க. தில்லைநடராசா பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை
திருமதி த. துரைரராசசிங்கம் வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
திரு. செ. நடரர்சபதி பிரதேச ஆள் பொறியியல் ஸ்தாபனம், புத்தூர்
,, க. நடராசபிள்ளை தேசிய சேமிப்பு வங்கி, யாழ்ப்பாணம்
திருமதி லீ. நடராசபிள்ளை ஆசிரியர், இடைக்காடு ம. வி.
திரு. ஆ. நடராசா காரியாலய உதவியாளர்
,, சி. நடராசா ப. நோ. கூ. ச. அச்சுவேலி
,, தா. நடராசா இலங்கை மின்சாரசபை, அனுராதபுரம்
,, மு. நடராசா அரசாங்க இரசாயனப் பரிசோதனைத் திணைக்களம்
,, ச. நடேசபிள்ளை இலங்கை இராணுவம்
,, நா. நடேசன் நில அளவைத் திணைக்களம்
,, ச. நல்லதம்பி ப. நோ. கூ. ச. அச்சுவேலி
,, சி. நல்லதம்பி தபாற் றிணைக்களம், யாழ்ப்பாணம்
,, த. நல்லதம்பி ஆசிரியர், ஒட்டுசுட்டான்
,, சி. நல்லையா பொலிஸ் நிலையம், களுவாஞ்சிக்குடி.
,, ச. நவரத்தினம் ஆசிரியர், கோப்பாய்
திருமதி செ. பரநிருபசிங்கம் B. Sc. ஆசிரியை இடைக்காடு ம. வி.
திரு. வ. பராசத்திராசா ப. நோ. கூ. ச. பரந்தன்
,, க. பாலசுப்பிரமணியம் B. A. Dip-in-Ed. கல்வி அதிகாரி, திருகோணமலை
,, க. பாலசுப்பிரமணியம் B. A. கச்சேரி, மட்டக்களப்பு

திரு. சி. பாலசுப்பிரமணியம் எழுதுவினைஞர், ஆசிரியர் கல்லூரி, வசாவிளான்
,, மு. பாலசுப்பிரமணியம் சுங்கத் திணைக்களம், கொழும்பு
,, க. பாலகிருஷ்ணர் பொறியியலாளர், மகாவலி அபிவிருத்தி சபை
,, நா. பிள்ளையார் ஆசிரியர், வளலாய் அ. மி. பாடசாலை
திருமதி பூ. பூபாலசிங்கம் B. A. ஆசிரியை, இடைக்காடு ம. வி.
திரு. சி. பேரம்பலம் கிராம சேவையாளர், ஒலுமடு
,, ஆ பொன்னுராசா B. A. பதிவாளர் அலுவலகம் பதுளை
,, நா. பொன்னம்பலம் B. A. ஆசிரியர், நடேஸ்வராக்கல்லூரி, காங்கேசன்துறை
,, சி. பொன்னுச்சாமி தபால் தந்தித் திணைக்களம்
,, செ. பொன்னையா சுங்கத் திணைக்களம் யாழ்ப்பாணம்
செல்வி வ. பொன்னையா ஆசிரியை, கைதடி தமிழ் வித்தியாலயம்
திருமதி இ. பொன்னம்பலவாணர் வைத்தியசாலை திருகோணமலை
திரு. பொ. மகாதேவா ஆசிரிய கலாசாலை, வசாவிளான்
,, இ. மகேசன் மின்சார அத்தியட்சகர், காங்கேசன்துறைச் சீமேந்துந் தொழிற்சாலை
,, சி. மாணிக்கவாசகர் ஆசிரியர், வவுனியா
செல்வி ம. முத்துக்குமாரு சிறு கைத்தொழில் திணைக்களம், கொழும்பு
திரு. க. முத்துவேல் B. Sc. (Hons.) விரிவுரையாளர் விஞ்ஞான பீடம் யாழ். வளாகம்
,, செ. முருகானந்தம் பேர்ண்காம் பாடசாலை, வசாவிளான்
,, க. முருகேசு பொலிஸ் நிலையம், வென்னப்புவ
,, க. முருகேசு ப. நோ. கூ. ச. தொண்டைமானாறு
,, செ. முருகையா கல்வி அமைச்சு கொழும்பு
,, நா. முருகையா B. A. இங்கிலாந்து
,, பொ. முருகையா இலங்கை போக்குவரத்து சபை
,, வே. முருகையா உள்நாட்டு இறைவரித் திணைக்களம், குருநாகல்
,, வே. முருகையா B. A. வைத்தியசாலை, யாழ்ப்பாணம்
,, மா. யோகராசா மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்
திரு. வ. வடிவேலு விவசாயத் திணைக்களம்
,, ந. வரதராசன் தபால் தந்தித் திணைக்களம்
,, க. வல்லிபுரம் உள்நாட்டு இறைவரித் திணைக்களம், கொழும்பு
,, செ. வல்லிபுரம் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், கொழும்பு
,, வ. வல்லிபுரம் உதவி அரசாங்க அதிபர் அலுவலகம், துணுக்காய்
,, இ. விசுவலிங்கம் கூட்டுறவுப் பரிசோதகர், மன்னார்
,, க. விசுவலிங்கம் காலநிலை அவதான நிலையம், வசாவிளான்
,, நா விவேகானந்தன் மின்சார அத்தியட்சகர், இலங்கை மின்சார சபை
திருமதி இ. விவேகானந்தன் ஆசிரியை, சுண்ணாகம்
,, மீ. விவேகானந்தன் A. M. P. வைத்தியசாலை, ஏறாவூர்
செல்வி கு. வீரசிங்கம் ஆசிரியை இடைக்காடு ம. வி.
திரு. ச. வேலாயுதபிள்ளை ப. நோ. கூ. ச. அச்சுவேலி
,, ச. வேலாயுதபிள்ளை, கிராமசேவையாளர், அச்சுவேலி,
திருமதி த. வேலாயுதபிள்ளை ஆசிரியை, புத்தூர்
திரு. பொ. வேலாயுதபிள்ளை பண்ணை யந்திரமயமாக்கும் பிரிவு, விவசாயத் திணைக்களம்
திருமதி த. வேலாயுதம் வைத்தியசாலை, வல்வெட்டித்துறை

,, க. வேலுப்பிள்ளை கிராம சேவையாளர், இயக்கச்சி
,, க. வேலுப்பிள்ளை தொழிற்றிணைக்களம் யாழ்ப்பாணம்
திருமதி ம. வேலுப்பிள்ளைஆசிரியை இடைக்காடு ம. வி.
டாக்டர் மு. வேற்பிள்ளை M. B. B. S. வைத்தியசாலை, கொழும்பு
திரு. மு. க. வைரமுத்து உப தபாலதிபர், இடைக்காடு
,, சு. க. வைரமுத்து நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம், பதவியா
,, வே. வைரமுத்து R. M. P. மினிப்பே
,, சு. வைத்திலிங்கம் R. M. P வவுனியா
,, கி. ஜெயகுமரபதி கட்டிட மேற்பார்வையாளர், களுவாஞ்சிக்குடி
,, ஐ. ஜெயரத்தினராசா தொழில் நுட்ப உதவியாளர், கட்டிடத் திணைக்களம்
திருமதி இ. ஜெயேந்திரா வைத்தியசாலை, திருகோணமலை
திரு. இ. ஸ்ரீ சண்முகநாதன் A. M. P. வைத்தியசாலை, நியத்தலாவை
டாக்டர் பொ. ஸ்ரீராகவன் M. B. B. S. கொழும்பு

**குறிப்பு:** பல சிரமங்களுக்கு மத்தியிலும், குறுகிய காலத்திலும் தயாரிக்கப்பட்ட இப்பட்டியலில் தவறுகள் யாதும் இருப்பினும் எவருடைய பெயர் விபரங்கள் தவறவிடப்பட்டிருப்பினும் அவற்றை தயைகூர்ந்து மன்னிக்கும்படி வேண்டுகிறோம்.

— ப. மா. ச.


★ தமிழ்

★ ஆங்கிலம்

★ சிங்களம்

ஆகிய மும்மொழிகளிலும்
உடனுக்குடன் உங்கள் அச்சு வேலைகளைப் பூர்த்தி செய்ய
சிறந்த ஸ்தாபனம்


↓

# சந்திரா அச்சகம்

151, யாழ்ப்பாண வீதி,

காங்கேசன்துறை.

# நினைவு கூருகிறோம் !



## அமரர் திரு. கந்தையா முருகேசு அவர்கள்

B. Sc. (Hons.) L. L. B. (Cey.) S. L. A. S. Attorney - at - Law

எமது வித்தியாலயத்தில் தமது இளமைக் கல்வியைப் பயின்ற இப் பெரியார் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் கணிதவியல் சிறப்புப்பட்டம் பெற்று, குடிவரவுக் குடியகல்வுத் திணைக்களத்துப் புள்ளி விபர உதவியாளராகவும், பதிவு உதவியாளராக வும், அரச சேவையில் சேர்ந்து, ஈற்றில் பிரதிக் கட்டுப்பாட்டதிகாரியாகப் பதவியு யர்வு பெற்றார். அரச சேவையிலிருக்கும் போது இன மத பேதமின்றி அனைவரையும் வரவேற்று மனமுவந்து உதவிகள் பல செய்தார். பொதுப்பணிகளில் நாட்டமுடைய இவர், எமது வித்தியாலயத்தின் நல் வளர்ச்சிக்காகத் தொண்டாற்றினார். ஒய்வு நேரங் களிற் கற்று சட்டத்தரணியாகி பிரஞ்சு, இலத்தீன், ஜெர்மன் ஆகிய மொழிகளில் வல்லுனரானார். ஓராண்டு முன் எம்மையெல்லாம் ஆறாத்துயரிலாழ்த்திவிட்டு மீளாத் துயில் கொள்ளும் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாமெல்லோரும் பிரார்த்திப் போமாக!

— பழைய மாணவர்

## உணவுற்பத்யைத் துரிதமாக்குக!

★ களை கொல்லிகள் – WEEDICIDES

★ காளான் அகற்றிகள் – FUNGICIDES

★ கிருமிநாசினிகள் – PESTICIDES

— சகல உர வகைகள் —

அனைத்தும் நிதான விலையில்

எப்போதும் கிடைக்கும்

# அக்ரோ விலாஸ்

# (AGRO VILAS)

விவசாய இரசாயனங்கள், உரவகை விற்பனையாளர்

இடைக்காடு, அச்சுவேலி.

**அ**ன்றக்கோல்

அ**க்**டெலிக்

**ரோ**கோர் 40

**வி** 1 – கலவை

எற்றோபோ**லா**ன்

பொட்டா**ஸ்** ஈசி: 20%

**A**grothion 50

**G**ammma BHC

Ba**R**usil

M**O**restan

Shelltox - **V**apona

Tr**I**bunil

Daconi**L**

Birl**A**ne 24

Poma**S**ol Forte

Prop: S. R. KANDASWAMY, **IDAIKKADU, ATCHUVELY.**


*Space Donated By*

# JAFFNA ELECTRICALS

ELECTRICAL CONTRACTORS – DEALERS

6, Stanley Road,


***JAFFNA.***



பழைய மாணவர் சங்கத்தினரால் திருத்தி அமைக்கப்பட்ட கல்லூரி
விளையாட்டு மைதானம்



கல்லூரி வலைப்பந்தாட்டக் கோஷ்டி 1976



விஞ்ஞான கூடம்

காலஞ்சென்ற தல முகாமையாளர்

திரு. ஆ. வேலுப்பிள்ளை அவர்களின் அன்பளிப்பு

உங்களுக்கு வேண்டிய

❋ விவசாய கிருமிநாசினிகள்

❋ விவசாய உரங்கள்

❋ பாடசாலை புத்தகங்கள்

❋ காரியாலய காகிதாதிகள்

போன்ற பொருட்களை நிதான விலையில்
விற்பனை செய்து பிரபல்யமடைந்து வருபவர்கள்
த ங் க ள து

# 'ரோரு' [TORA]

32, கஸ்தூரியார் வீதி,

யாழ்ப்பாணம்.

இடைக்காடு மகா வித்தியாலயப்

பொன் விழாவும்

இ. ம. வி. பழைய மாணவர் சங்க

வெள்ளி விழாவும்

சிறப்புற

எமது ஆசிகள் உரித்தாகுக !

கூட்டுறவே நாட்டுயர்வு

வலி - கிழக்கு வடபகுதி பல நோ. கூ. சங்கம்

(பதிவு இல. யா/1556. 10 - 3 - 71)

அச்சுவேலி.

தந்தி: 'VENDCOP'

தொலைபேசி இல : 14

இடைக்காடு மகா வித்தியாலய பொன் விழாவும்
பழைய மாணவர் சங்க வெள்ளி விழாவும் இனிதே
நிகழ்ந்தேற எமது மனமார்ந்த நல்லாசிகள் !

## இதோ ஒரு நற்செய்தி !
## விவசாயப் பெருங்குடி மக்களே !

உங்கள் விளைபொருட்களை
சிறந்த முறையில் விற்பனை செய்ய வேண்டுமா ?
கவலையை விடுங்கள் ! உங்கள் அபிமானத்தையும்,
நம்பிக்கையையும் பெற்று, கொழும்பில்
(விளைபொருட்கள் விற்பனையில்)
உங்கள் முன்னிலையில் திகழ்வது எமது ஸ்தாபனமே !

நாடுங்கள் !

விளைபொருட்களின் விற்பனை நிலையம்

# கதிர்மணி அன் கோ.

*142, 144, 4-ம் குறுக்குத் தெரு,*

**கொழும்பு - 11.**

தொலைபேசி இல : 20246

**எமது கிளை ஸ்தாபனம்:**
இல. 30, மானிப்பாய் வீதி,
யாழ்நகர்.

வாடிக்கையாளர்களே !
அன்பர்களே !

உங்களின் சகல நலன்களையும் கருதி
எமது கிளை ஸ்தாபனம் உங்களுக்கு வேண்டிய சகல வசதிகளையும்
செய்து கொடுக்கத் தயாராக உள்ளது.

நாடுங்கள் ! நன்மை பெற !!

# இடைக்காடு மகாவித்தியாலய
# பழைய மாணவர் சங்கம்

**காப்பாளர்:** திரு. நா. மாணிக்க இடைக்காடர்

## செயற்குழு உறுப்பினர்

| | |
|---|---|
| **தலைவர்:** | திரு. சி. வே. மகேசவேலு (அதிபர்) |
| **உப தலைவர்கள்:** | ,, க. விசுவலிங்கம் |
| | ,, ச. க. ஆறுமுகசாமி |
| | ,, வே. சுவாமிநாதன் |
| **செயலாளர்:** | திரு. செ. லைாசபதி |
| **உப-செயலாளர்:** | ,, நா. சுவாமிநாதன் |
| **பொருளாளர்:** | ,, க. சின்னத்தம்பி |
| **செயற்குழு உறுப்பினர்:** | திரு. செ. பொன்னையா |
| | ,, மு. ஆறுமுகசாமி |
| | ,, க. சிதம்பரப்பிள்ளை |
| | ,, க. வேல்முருகன் |
| | ,, சி. திருநாவுக்கரசு |

### கலைவிழா விசேட செயற்குழு

திரு. சி. க. சின்னத்தம்பி (தலைவர்)
,, வே. சுவாமிநாதன்
,, வ. வல்லிபுரம்
,, க. செ. சின்னத்துரை
,, சு. இ. கந்தசுவாமி
,, த. கதிரமலை
,, க. கைலாயபிள்ளை
,, செ. சின்னத்தம்பி
,, நா. சிற்றம்பலம்
,, நா. இடைக்காடர் ஈஸ்வரன்

### நூலக அபிவிருத்தி விசேட செயற்குழு

திரு. சி. தம்பிராசா (தலைவர்)
,, சி. நல்லதம்பி
,, தி. சிவநேசபிள்ளை
,, மு. ஆறுமுகசாமி
,, வே. சத்தியமூர்த்தி

### விளையாட்டு – விவசாய விசேட செயற்குழு

திரு. பொ. மகாதேவா (தலைவர்)
,, இ. கந்தவேள்
,, வே. முருகையா
,, நா. கந்தசாமி
,, இ. மகேசன்
,, க. கிருஷ்ணசாமி
,, க. பாலசுந்தரம்
,, க. ஆறுமுகசாமி
,, ந. தாமோதரன்

| ஆண்டு | தலைவர் | உபதலைவர்கள் | செயலாளர் | உப செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|---|---|
| 51–52 | கு. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை | ஆ. சின்னத்துரை<br>க. சிதம்பரப்பிள்ளை<br>க. வைத்திலிங்கம் | க. விசுவலிங்கம் | நா. நடராசா | இ. செ. சின்னத்தம்பி |
| 52-53 | கு. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை | ஆ. சின்னத்துரை<br>க. கந்தையா<br>க. வைத்திலிங்கம் | க. விசுவலிங்கம் | க. திருநாவுக்கரசு | இ. செ. சின்னத்தம்பி |
| 53–54 | ,, ,, | ஆ. சின்னத்துரை<br>க. கந்தையா<br>க. வைத்திலிங்கம் | க. விசுவலிங்கம் | க திருநாவுக்கரசு | இ. செ. சின்னத்தம்பி |
| 54–55 | ,, ,, | சு. இராமசாமி<br>க. முருகேசு<br>க. பாலசுப்பிரமணி | க. விசுவலிங்கம் | செ, சின்னத்துரை | இ. செ.சின்னத்தம்பி |
| 55–56 | ,, ,, | சு. இராமசாமி [யம்<br>க. முருகேசு<br>கு செல்லத்துரை | க விசுவலிங்கம் | க. செல்லத்துரை | சி. க. சின்னத்தம்பி |
| 56-57 | R. H. ஐயர் | சு. இராமசாமி<br>ஆ. சின்னத்துரை<br>கு. செல்லத்துரை | க. செல்லத்துரை | க. விசுவலிங்கம் | இ. செ. சின்னத்தம்பி |
| 57–58 | வே. கணபதிப்பிள்ளை | சு. இராமசாமி<br>ஆ சின்னத்துரை<br>த. தம்பி | நா. பொன்னம்பலம் | செ, சபாரத்தினம் | வே. கந்தசாமி |
| 58–59 | ,, ,, | சு. இராமசாமி<br>ஆ. சின்னத்துரை<br>த. தம்பி | நா. பொன்னம்பலம் | செ. சபாரத்தினம் | வே. கந்தசாமி |
| 59–60 | ,, ,, | நா.மாணிக்கஇடைக் [காடர்<br>க. முருகேசு<br>க. விஸ்வலிங்கம் | செ. சபாரத்தினம் | க. ஆறுமுகசாமி | ம. சரவணமுத்து |
| 60–61 | ,, ,, | த. தம்பி<br>மு. கந்தசாமி<br>க. விஸ்வலிங்கம் | க. சின்னத்தம்பி | சு. இளையதம்பி | ம. சரவணமுத்து |
| 61–62 | ,, ,, | சு. இளையதம்பி<br>த. தம்பி<br>க. சின்னத்தம்பி | பொ. இளையதம்பி | செ. பொன்னையா | செ. சின்னத்துரை |
| 62–63 | ,, ,, | த. தம்பி<br>சு. இளையதம்பி<br>க. விஸ்வலிங்கம் | வே. சத்தியமூர்த்தி | பொ. இராமுப்பிள்ளை | க. வேலுப்பிள்ளை |
| 63–64 | ,, ,, | த. தம்பி<br>சு. இளையதம்பி<br>த. விஸ்வலிங்கம் | சோ. தணிகாசலம் | க. சிதம்பரப்பிள்ளை | க. கயிலாயபிள்ளை |

| ஆண்டு | தலைவர் | உப தலைவர்கள் | செயலாளர் | உப செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|---|---|---|
| 64–65 | வே. கணபதிப்பிள்ளை | க. விஸ்வலிங்கம்<br>ச. ஆறுமுகம்<br>சு. இளையதம்பி | செ. கைலாசபதி | க. அருணாசலம் | சோ. தணிகாசலம் |
| 65–66 | ,, ,, | க. விஸ்வலிங்கம்<br>ச. ஆறுமுகம்<br>சு. இளையதம்பி | செ. கைலாசபதி | க. அருணாசலம் | சோ. தணிகாசலம் |
| 66–67 | ,, ,, | செ. சபாரத்தினம்<br>க. விஸ்வலிங்கம்<br>வே. சத்தியமூர்த்தி | சி. நா. சுப்பிரமணியம் | நா. விவேகானந்தன் | வ. பாலசுப்பிரமணியம் |
| 67–68 | ,, ,, | ம. சரவணமுத்து<br>மு. ஆறுமுகசாமி<br>செ. கைலாசபதி | சி. நா. சுப்பிரமணியம் | நா. விவேகானந்தன் | வ. பாலசுப்பிரமணியம் |
| 68–69 | ,, ,, | க. விஸ்வலிங்கம்<br>சு. இளையதம்பி<br>தா. நடராசா | செ. கைலாசபதி | ச. ச. ஆறுமுகசாமி | க. சின்னத்தம்பி |
| 69–70 | ,, ,, | சி. பத்மநாதன்<br>மு. பாலசுப்பிரமணியம்<br>சு. இளையதம்பி | செ. கைலாசபதி | ச. க. கிருஷ்ணசாமி | வ. வல்லிபுரம் |
| 70–71 | க. குணரத்தினம் | க. விஸ்வலிங்கம்<br>க. சின்னத்தம்பி<br>சோ. தணிகாசலம் | செ. கைலாசபதி | க. வல்லிபுரம் | இ. மகேசன் |
| 71–72 | ,, ,, | க. விஸ்வலிங்கம்<br>க. சின்னத்தம்பி<br>சோ. தணிகாசலம் | மு. வேற்பிள்ளை | நா. சுவாமிநாதன் | ச. க. கிருஷ்ணசாமி |
| 72–73 | ,, ,, | க. விஸ்வலிங்கம்<br>க. சின்னத்தம்பி<br>சோ. தணிகாசலம | மு. வேற்பிள்ளை | நா. சுவாமிநாதன் | ச. க. கிருஷ்ணசாமி |
| 73–74 | ,, ,, | மு. வேற்பிள்ளை<br>ச. க. ஆறுமுகசாமி<br>க. வல்லிபுரம் | ச. கேசவமூர்த்தி | சி. திருநாவுக்கரசு | க. சிதம்பரப்பிள்ளை |
| 74–75 | க. இராசரத்தினம் | க. விஸ்வலிங்கம்<br>ச. க. ஆறுமுகசாமி<br>செ. பொன்னையா | செ. கைலாசபதி | சோ. தணிகாசலம் | வ. வல்லிபுரம் |
| 75–76 | க. இராசரத்தினம்<br>சி. வே. மகேசவேலு<br>01-01-76ல் இருந்து | க. விஸ்வலிங்கம்<br>ச. க. ஆறுமுகசாமி<br>செ. பொன்னையா | செ. கைலாசபதி<br>சோ. தணிகாசலம்<br>09-06-75ல் இருந்து | சோ. தணிகாசலம்<br>க. வேல்முருகன்<br>22-11-75இல் இருந்து | க. சின்னத்தம்பி |

UNIVERSITY OF JAFFNA
University of Jaffna
223129
Library
223129

போன்: 585

அழகிய பவுண் நகைகள்





தங்கப் பவுண்



வைரங்கள்

# கே. என். எம். மீரன் சாஹிப்

**தங்கப்பவுண் நகைமாளிகை**

**நகை வியாபாரம்**

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

UNIVERSITY OF JAFFNA SRI LANKA Library

யா/இடைக்காடு மகா வித்தியாலயம் மேன்மேலும்
தரம் உயர பழைய மாணவர் அயராது உழைப்பார்களாக.



A. K. S. & SONS

ஏ
கே
எஸ்
அன் சன்ஸ்

கன்னுதிட்டி, யாழ்ப்பாணம்.


சந்திரா அச்சகம், காங்கேசன்துறை.